




# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

CHENNAI | Volume- 3 | Issue:267 | 12-04-2026 | ஞாயிற்றுக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி







## இன்றைய பஞ்சாங்கம்

12.04.2026 பங்குனி 29
ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் 6.05

திதி:
தசமி இரவு 10.28 வரை பிறகு ஏகாதசி

நட்சத்திரம்:
திருவோணம் நண்பகல் 12.33 வரை. பிறகு அவிட்டம்

யோகம் :
அமிர்த / மரணயோகம்.

கரணம்
இன்று காலை 9.28 வரை தைதுலம் பின்பு இரவு 9.58 வரை கரசை பின்பு வணிசை

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும் சித்த யோகம்.

சந்திராஷ்டமம் :
இன்று காலை 11.13 வரை மிருகசீரிஷம் பின்பு திருவாதிரை.

நல்ல நேரம்
காலை 7.00 – 8.00.
மாலை 3.00 – 4.00.

இராகு காலம்
மாலை 4.30–6.00 மணி.

எமகண்டம்
நண்பகல் 12.00–1.30 மணி.

குளிகை
காலை 6.00 – 7.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

### முதல்முறையாக நிலவின் பின்புறத்தைக் கண்ட அதிசயம்

# வரலாறு படைத்தது 'ஆர்மிடெஸ்2' நால்வரும் பூமிக்குத் திரும்பினர்

**வாஷிங்டன் ஏப்.12:**

அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் (நாசா), நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் பணியை ஆர்டெமிஸ்-2 திட்டத்தின் கீழ் மீண்டும் தொடங்கியது. இதில் கடந்த 2-ந்தேதி ஓரியன் விண்கலத்தில் ஒரு பெண் உள்பட 4 விண்வெளி வீரர்களை அனுப்பியது. இவர்கள் நிலவை சுற்றி ஆய்வு செய்தனர். மேலும் நிலவின் மறுபக்கத்தை நேரில் பார்த்தவர்கள் என்ற சாதனையையும் படைத்தனர்.

ஆய்வுகளை முடித்து கொண்டு ஓரியன் விண்கலத்தில் 4 விண்வெளி வீரர்களும் பூமியை நோக்கி புறப்பட்டனர். அவர்கள் பயணித்த ஓரியன் விண்கலம் இன்று காலை 5.37 மணியளவில் பூமிக்கு வந்தடைந்தது.

நிலவை ஆராய்ந்த 4 விண்வெளி வீரர்களும், 3 பாராசூட் உதவியுடன், அமெரிக்காவின் சான் டீகோ நகர் அருகே பசிபிக் கடலில் வந்திறங்கினார்கள்.

பூமியில் இருந்து 4 லட்சத்து 6 ஆயிரத்து 770 கி.மீ. தொலைவிலுள்ள பகுதியை இந்த ஓரியன் விண்கலம் சென்றடைந்து விட்டு, பூமிக்கு திரும்பியுள்ளது. மொத்தம் 11 லட்சத்து 2 ஆயிரத்து 398 கி.மீ. தொலைவுக்கு விண்கலம் பயணித்து உள்ளது.

ஓரியன் விண்கலத்தில் இருந்த வீரர்கள் 4 பேரும் மீட்கப்பட்டு அமெரிக்காவின் யு.எஸ்.எஸ். ஜான் பி. மூர்த்தா என்ற போக்கு வரத்து கப்பலுக்கு கொண்டு செல்லப் பட்டனர். இதன்பின்பு அவர்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்பட உள்ளன.





இதற்காகவிண்வெளி வீரர்கள் 4 பேரும் ஓரியன் விண்கலத்தில் இருந்து பாதுகாப்பாக வெளியே கொண்டு வரப்பட்டனர். பின்பு, ஹெலிகாப்டர் ஒன்றில் ஏற்றப்பட்டு, அவர்கள் கப்பலுக்கு கொண்டு வரப்பட்டனர்.

பூமியின் வளிமண்டலத்தில் நுழையும் போது, வளிமண்டலத்தில் தோராயமாக மணிக்கு 24,000லிருந்து -25,000 மைல்கள்) மோதியது. இதன் விளைவாக, சில இடங்களில் சூரியனின் மேற்பரப்பை விட சுமார் 5,000 டிகிரி F (சுமார் 2,760 டிகிரி C) வெப்பம் உச்சத்தை அடைந்தது. இருப்பினும், (2022-ல் ஆளில்லா ஆர்டெமிஸ் I விண்கலத்தில் காணப்பட்ட சிறிய சிக்கல்களுக்குப் பிறகு மேம்படுத்தப்பட்ட) பாதுகாப்பு அமைப்பு, குழுவினரைப் பாதுகாத்தது.

### 6 நிமிடம் தகவல் துண்டிப்பு

அழுத்தப்பட்ட காற்று மற்றும் அதீத வெப்பத்தால் உருவான ஒரு பிளாஸ்மா உறை, விண்கலத்தைச் சுற்றி ஒரு பிரகாசமான நெருப்புப் பந்தத்தை உருவாக்கியது. இதனால், சுமார் ஆறு நிமிடங்கள் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த நேரத்தில், குழுவினர் முழுவதுமாக விண்கலத்தில் இருந்த அமைப்புகளையே நம்பியிருந்தனர். அவை பின்னர் மீண்டும் சரிசெய்யப்பட்டன.

அடுத்தடுத்து பாராசூட்டுகள் விரிக்கப்பட்டதால், விண்கலத்தின் இறங்கும் வேகம் மணிக்கு சுமார் 15 மைல்கள் (25 கி.மீ.) ஆகக் குறைந்தது. நாசா மற்றும் அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த மீட்புக் குழுக்கள் விண்வெளி வீரர்களை விரைவாக மீட்டனர். பின்னர் அவர்கள் முர்தாவிற்கு ஆரம்பகட்ட மருத்துவப் பரிசோதனைகளுக்காக மாற்றப்பட்டனர். நால்வரும் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதுடன், அவர்கள் ஹூஸ்டனில் உள்ள மையத்திற்குத் திரும்பத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆர்டெமிஸ் 2ன் வெற்றியின் மூலம், மனிதகுலம் நிலவை நோக்கி நம்பிக்கையுடன் ஒரு அடி எடுத்து வைத்துள்ளது. இது வெறும் அறிவியல் கண்டுபிடிப்பு, நீர் பனிக்கட்டி போன்ற வளங்களைப் பயன்படுத்துதல், மற்றும் தரையிறங்கிய பிறகு கோள்களுக்கிடை யேயான பயணத்தைச் சோதித்துப் பார்ப்பதற்கான ஒரு களம் ஆகியவற்றுக்காக மட்டுமல்லாமல், அதன் குழுவினர் அடுத்த தலைமுறை ஆய்வாளர்களுக்கு ஏற்கெனவே உத்வேகம் அளித்து வருகின்றனர்.

ஓரியன் விண்கலம் மீட்கப்பட்டு விரிவாகப் பகுப்பாய்வு செய்யப்படும். இது, இனிவரும் பயணங்களுக்கான அமைப்புகளைச்செம்மைமப்படுத்த மதிப்புமிக்க தரவுகளை வழங்கும். ஆர்டெமிஸ் II குழுவினரே, வீட்டிற்கு நல்வரவு. உங்கள் பயணம், விண்வெளியை நோக்கிய நமது கூட்டு முயற்சிக்கு மீண்டும் புத்துயிர் அளித்துள்ளது.

### டிரம்ப் பாராட்டு

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள அர்டெமிஸ் 3 பயணத்தில் விண்வெளி வீரர்கள் விண்கலத்தை இணைக்கும் பயிற்சிகளை மேற்கொள்வர். அர்டெமிஸ் 4 திட்டம் 2028ல் நிலவின் தென்பகுதியில் மனிதர்களைத் தரையிறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

56 ஆண்டுகளுக்குப் பின் நி0லவுக்கு சென்று வந்த விண்வெளி வீரர்களின் சாதனைக்கு அமெரிக்க அதிபர் டிரம்ப், கனடா பிரதமர் மார்க் கார்னி, பிரிட்டன் மன்னர் 3ம் சார்லஸ் உள்ளிட்ட பலரும் வாழ்த்து கூறி வருகின்றனர்.

## தூத்துக்குடியில் இன்று ஒரே மேடையில் மு.க. ஸ்டாலின், ராகுல்!

**சென்னை, ஏப்.12:**

தமிழ்நாட்டில் 234 தொகுதிகளுக்கான சட்டப்பேரவைத் தேர்தல் ஒரே கட்டமாக வருகிற ஏப். 23 ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் அனைத்தும் நிறைவடைந்த நிலையில் அரசியல் கட்சித் தலைவர்கள் தமிழகம் முழுவதும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தேர்தலுக்கு இன்னும் 11 நாள்களே உள்ள நிலையில் பாஜக, காங்கிரஸ் தலைவர்களும் தமிழகத்திற்கு வருகை தரவுள்ளனர்.

இந்நிலையில் தமிழக பேரவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டு 3 வாரங்கள் ஆகியும் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி இன்னும் தமிழகம் வரவில்லை என்ற சர்ச்சை எழுந்தது. கடந்த வாரம் புதுவை வந்த அவர், தமிழகத்திற்கு வரவில்லை என்ற குற்றச்சாட்டும் எழுந்தது.



இந்நிலையில் ராகுல் காந்தி இன்று (ஏப். 12,ஞாயிறு) தமிழகம் வரவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இன்று காலை டில்லியில் இருந்து சென்னை விமான நிலையம் வரும் ராகுல் காந்தி, ஸ்ரீபெரும்புதூரில் தந்தை ராஜீவ் காந்தி நினைவிடத்தில் மரியாதை செலுத்திய பின்னர் ஸ்ரீபெரும்புதூர் தொகுதி காங்கிரஸ் வேட்பாளரும் தமிழக காங்கிரஸ் தலைவருமான செல்வப்பெருந்தகைக்கு ஆதரவாக பிரசாரம் செய்யவுள்ளதாகவும் அப்பகுதியில் சாலை வலம் மேற்கொள்ளவிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பின்னர் தூத்துக்குடியில் முதல்வர் மு.க. ஸ்டாலினும் ராகுல் காந்தியும் இணைந்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட உள்ளதாகவும் கூறப்படுகிறது. ஏற்கெனவே முதல்வர் மு.க. ஸ்டாலின், இன்று (ஏப். 12, ஞாயிறு) மாலை 4 மணிக்கு பரமக்குடியிலும் இரவு 7 மணிக்கு தூத்துக்குடியிலும் பிரசாரம் செய்கிறார். இரவு 7 மணி தூத்துக்குடி பிரசாரத்தில் ராகுல் பங்கேற்பார் என்றும் கூறப்படுகிறது. பின்னர் ஏப். 15, 16 தேதிகளிலும் ராகுல் காந்தி தமிழகம் வரவுள்ளதாகவும் கூறப்படுகிறது. அதேபோல காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, காங்கிரஸ் பொதுச் செயலர் பிரியங்கா காந்தி உள்ளிட்டோரும் தமிழகம் வரவுள்ளனர்.






## சென்னைக்கு கூடுதலாக 5,554 ஓட்டுப்பதிவு எந்திரங்கள்

**சென்னை, ஏப்.12:**

சென்னை மாவட்டத்தில் உள்ள 16 தொகுதிகளில் 419 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். இதனால் வாக்குப்பதிவு மின்னணு எந்திரங்கள் கூடுதலாக தேவைப்பட்டது. கூடுதல் எந்திரங்களை கணினி மூலம் தேர்வு செய்யும் பணி நடைபெற்றது.

அரசியல் கட்சி பிரதி நிதிகள் முன்னிலையில் தேர்தல் அதிகாரி குமர குருபரன் ஒவ்வொரு தொகுதிக்கும் வாக்குப்பதிவு எந்திரங்களை சுழற்சி முறையில் தேர்வு செய்தார்.

5,554 வாக்குப்பதிவு எந்திரங்கள் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது. ஆர். கே.நகர், பெரம்பூர், கொளத்தூர் ஆகிய 3 தொகுதிகளிலும் 3 வாக்குப்பதிவு எந்திரங்கள் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.சைதாப்பேட்டை தொகுதியில் 15 வேட்பாளர்கள் போட்டியிடுவதால் அங்கு மட்டும் ஒரு மின்னணு எந்திரம் பயன்படுத்தப்படுகிறது. மற்ற 12 தொகுதி களில் 2 வாக்குப்பதிவு எந்திரங்கள் பயன்படுத்தப்படும்.

ஏற்கனவே 4,889 வாக்குப்பதிவு எந்திரங்கள் தொகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. கூடுதலாக 5,554 எந்திரங்கள் என மொத்தம் 10,443 ஓட்டுப் பதிவு எந்திரங்கள் இந்த தேர்தலில் பயன்படுத்தப்படுகிறது. இதில் 20 சதவீதம் எந்திரங்கள் கையிருப்பில் வைக்கப்படும்.

## நாடாளுமன்ற வளாகத்தில் பிரதமர் மோடி- ராகுல் காந்தி கலந்துரையாடல்

**புதுடெல்லி, ஏப்.12:**

டெல்லியில் மத்திய அரசு சார்பில் நடைபெற்ற ஜோதிபா புலேவின் 200-வது பிறந்த நாள் நிகழ்ச்சியில் ஜனாதிபதி திரவுபதி முர்மு, துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் மோடி, எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா, மத்திய அமைச்சர்கள் பலரும் கலந்துகொண்டனர். நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள ஜோதிபா புலேவின் திருவுருவச் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.



முன்னதாக, நிகழ்விடத்திற்கு வந்த பிரதமர் மோடி, எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியுடன் சிறிது நேரம் கலந்துரையாடினார். அரசியல்ரீதியாக பிரதமர் மோடி மீது ராகுல் காந்தி கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்து வரும் நிலையில் நாடாளுமன்றத்தில் இரு தலைவர்களும் சகஜமாக பேசிக்கொண்டது இணையத்தில் வைரலாகி வருகிறது.




## திருக்குறள் குறள்-587

மறைந்தவை கேட்கவற் றாகி அறிந்தவை
ஐயப்பா டில்லதே ஒற்று



மறைந்த செய்திகளையும் கேட்டறிய வல்லவனாய் அறிந்த செய்திகளை ஐயப்படாமல் துணிய வல்லவனாய் உள்ளவனே ஒற்றன் ஆவான்.

## சிந்திக்க ஒரு நொடி



ரோஜா செடியில்
முள்ளும் இருக்கிறது
வாசனை மலரும்
இருக்கிறது
அதுபோல் வாழ்க்கை
யில் இன்பம் துன்பம்
கலந்தே இருக்கும்

**ராஜகோபாலன்.J**
பெங்களூரு

## மதுரையில் விஜய்க்கு வரவேற்பு



**வாடிப்பட்டி, ஏப்.12:**
மதுரை மாவட்டம் சோழவந்தான் தொகுதி தமிழக வெற்றிக்கழக வேட்பாளர் எம் வீ கருப்பையா மதுரை விமான நிலையத்தில் தமிழக வெற்றி கழக நிறுவன தலைவர் விஜய்க்கு தொகுதி மக்கள் சார்பாக வரவேற்று நினைவு பரிசு வழங்கினார். உடன் சோழவந்தான் தொகுதி தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் சென்றிருந்தனர்.

## ஓய்வூதியர் சங்கத்தின் பட்டுக்கோட்டை வட்டக் கிளை 120 வது மாதாந்திர கூட்டம்



தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் பட்டுக்கோட்டை வட்டக் கிளை 120 வது மாதாந்திர கூட்டம் கிளைத் தலைவர் த.சந்திரமோகன் தலைமையில் நடைபெற்றது.கிளைச்செயலாளர் சிவ. இரவிச்சந்திரன்செயலாளர் அறிக்கையையும் பொருளாளர் ஆறுமுகம் வரவு செலவு அறிக்கை தாக்கல் செய்தனர். மாவட்ட இணைச் செயலாளர் பிச்சைமுத்து மாவட்ட துணைத் தலைவர் தமிழ் மணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.பத்தாண்டுகளாக தொடர்ந்து மாதந்தோறும் இரண்டாவது சனிக்கிழமை வட்டக்கிளை செயற்குழுவை நடத்தி வரும் கிளையின் செயல்பாடுகளை பாராட்டியும், மாநில செயற்குழு முடிவுகள் குறித்தும் மாநில செயலாளர் முனைவர் சு கிருஷ்ணன் சிறப்புரையாற்றினார்.வட்ட செயற்குழு உறுப்பினர் வீரமணி நன்றி கூறினார்.120 வது மாதாந்திர கூட்டத்தில் 5 பெண்கள் உட்பட 60 ஓய்வூதியர்கள் கலந்து கொண்டனர்

## வந்தவாசி சட்டமன்ற உறுப்பினருக்கு இரட்டை இலை சின்னத்திற்கு வாக்குகள் சேகரிப்பு



திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி சட்டமன்ற தொகுதியில் அஇஅதிமுக சார்பில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் திருமதி. ராணி பெருமாள் அவர்களை ஆதரித்து, வந்தவாசி மசூதியில் ஜும்மா தொழுகைக்கு வந்த முஸ்லிம் சமுதாய மக்களிடம், அதிமுக வந்தவாசி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் வழக்கறிஞர் திரு. ஜாகீர் உசேன் அவர்கள் தலைமையில் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.வந்தவாசி தொகுதி அதிமுக வேட்பாளர் ராணி பெருமாள் அவர்கள், நகர செயலாளர் ஓட்டல் பாஷா ,நிர்வாகி மேகநாதன் உட்பட அதிமுக நிர்வாகிகள் அனைவரும் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## செய்யாறு இந்தோ - அமெரிக்கன் சி.பி.எஸ்.இ., பள்ளி ஆண்டு விழா !



**செய்யாறு, ஏப். 12:**
செய்யாறு இந்தோ-அமெரிக்கன் சி.பி.எஸ்.இ., பள்ளியின் ஆண்டு விழா மற்றும் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசளிப்பு விழா நடந்தது. இப்பள்ளியில் உள்ள டாக்டர் இராமதாஸ் அப்பாய் அரங்கில் நடந்த விழாவிற்கு அறக்கட்டளையின் துணைத் தலைவர் இராதா கிருஷ்ணன் அப்பாய் தலைமை தாங்கினார். மெட்ரிக் பள்ளியின் முதல்வர் அ.ப.சையத் அப்துல் இலியாஸ் முன்னிலை வகித்தார். மாணவப் பிரிதிநிதி மு.அஸ்வின் கிருஷ்ணா வருகை தந்த அனைவரையும் வரவேற்றார்.

சிறப்பு விருந்தினராக செய்யாறு வட்டார மருத்துவ அலுவலர் மருத்துவர் எ.சி. ஷர்மிளா,பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ - மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார். சி.பி.எஸ்.இ., பள்ளியின் முதல்வர் சுதா கார்த்திக், மெட்ரிக் பள்ளியின் துணை முதல்வர் க.கோவேந்தன், ஆசிரியர் பி. திவ்யா பரிசு பெற்ற மாணவர்களை வாழ்த்தி பேசினர். ஆசிரியர்கள் அகல்யா, சக்திவேல், லட்சுமி, கவிதா, ஜமுனா, சரண்யா, திவ்யலட்சுமி மற்றும் அனைத்து ஆசிரியர்களும் இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். நிகழ்ச்சியை வெ.நிவேதா தொகுத்து வழங்கினார். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. மாணவப்பிரதிநிதி பால.காமாட்சி நன்றி கூறினார்.

## நம் வாசவி அம்மனுக்கு 48- ஆம் நாள் மண்டல பூஜை நிறைவு விழா



**தர்மபுரி, ஏப்.12:**
தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மனுக்கு 48 ஆம் நாள் மண்டல பூஜை நிறைவு விழாவை முன்னிட்டு நம் வாசவி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், ஹோமங்கள், வேத மந்திரங்கள் ஒலிக்க, மங்கள வாத்தியங்கள் இசைக்க, அனைத்து தெய்வங்களுக்கும் தங்க கவசத்துடன் அலங்கரித்து, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள் பெண்கள் அனைவரும் மண்டல பூஜையில் கலந்து கொண்டு நம் வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர்.பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

அனைவருக்கும் காலை,மதியம் உணவும் வழங்கப்பட்டது. வெகு சிறப்பாக பூஜைகளும் நடைபெற்றது.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## சண்முககுமாரபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஆண்டு விழா..!



**இராமநாதபுரம், ஏப்.12:**
இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஒன்றியம் சண்முக குமாரபுரம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி ஆண்டு விழா நடைபெற்றது.


ஆண்டு விழாவிற்கு பள்ளித் தலைமையாசிரியர் கிறிஸ்து ஞான வள்ளுவன் தலைமை வகித்தார். பள்ளி மேலாண்மைக்குழு தலைவர் முத்துக்கனி, துணைத் தலைவர் கவிதா, சத்துணவு அமைப்பாளர் மாரியம்மாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தலைமையாசிரியர் ச.கிறிஸ்து ஞான வள்ளுவன் அனைவரையும் வரவேற்றார். மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. படிப்பில் சிறப்பிடம் பெற்ற, விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

சிறப்புரையாற்றிய தலைமை யாசிரியர் தமிழ்வழிக் கல்வியின் சிறப்பு பற்றியும், அரசு தமிழ்வழியில் பயிலும் மாணவர்களுக்கு அளிக்கும் சலுகைகள் பற்றியும், மாணவர் சேர்க்கையின் அவசியம் பற்றியும் விரிவாகப் பேசினார்

விழாவில் கல்விக்குழு உறுப்பினர்கள், பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்கள், அங்கன்வாடி பணியாளர் கஸ்தூரி, கிராமப் பொது மக்கள் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிய இடைநிலை ஆசிரியர் தாஹிரா நன்றி கூற விழா இனிதே நிறைவு பெற்றது.

## பெருமாள் சன்னதி பிரம்மோற்சவம் குதிரை வாகனம் புறப்பாடு.



திருவெள்ளறை ஸ்ரீ புண்டரீகாக்ஷ பெருமாள் சன்னதி பிரம்மோற்சவம் எட்டாம் நாள் குதிரை வாகனம் புறப்பாடு.

## திமுக வேட்பாளரை ஆதரித்து அமைச்சர் எ.வ.வேலு பரப்புரை..!



**வந்தவாசி, ஏப் 12:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தேரடி பகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் திமுக வேட்பாளர் எஸ்.அம்பேத்குமாருக்கு உதய சூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க வலியுறுத்தி அமைச்சர் எ.வ.வேலு பரப்புரை மேற்கொண்டார். திமுகவின் பல்வேறு சாதனைகளை விளக்கி உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இந்த பரப்புரையில் ஆரணி எம்பி எம்.எஸ்.தரணிவேந்தன், நகர செயலாளர் தயாளன் உள்ளிட்ட கூட்டணி கட்சியினர் ஏராளமானோர் பங்கேற்றனர்.

**பா.சீனிவாசன், வந்தவாசி.**

## புதுப்பாளையம் பேரூராட்சியில் உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரிப்பு






திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புதுப்பாளையம் பேரூராட்சி உட்பட்ட பகுதிகளில் கழக சாதனைகளை விளக்கி வேட்பாளர் திரு. பெ. சு. தி. சரவணன் அவர்கள் உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்தார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## செய்யாறில் திருக்குறள் திருப்பணிகள் திட்டம் சார்பில் 27 ஆவது வார திருக்குறள் பயிற்சி வகுப்பு



**செய்யாறு ஏப். 12:**
செய்யாறு திருக்குறள் திருப்பணிகள் திட்டம் சார்பில் திருக்குறள் பயிற்சி வகுப்பு நேற்று நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் திருக்குறள் திருப்பணிகள் திட்டம் சார்ந்து திருக்குறள் பயிற்சி வகுப்பு செய்யாறு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நேற்று நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு பள்ளி தலைமை ஆசிரியர் ஜி .ஜெயகாந்தன் தலைமை தாங்கினார். திருக்குறள் பயிற்சியாளர் கவிஞர் எறும்பூர் கை. செல்வகுமார் நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்து வரவேற்றுப் பேசினார்.

சிறப்பு அழைப்பாளர் ஓய்வு பெற்ற பள்ளி துணை ஆய்வாளரும், முதுகலை ஆசிரியருமான புகழேந்தி வாழ்த்திப் பேசினார்.

மாணவிகள் 14 பேர், மாணவர்கள் ஐந்து பேர் ,மூன்று சிறப்பு அழைப்பாளர்கள், ஐந்து பெரியவர்கள், இரண்டு பயிற்சியாளர்கள் உள்ளிட்ட 29 பேர் நேற்றைய நிகழ்வில் கலந்து கொண்டனர். முடிவில் புலவர் ந. கனக சபை நன்றி கூறினார்.

## வேலூர் சலவன்பேட்டை மண்பாண்ட தொழிலாளர்களிடம் வாக்கு சேகரித்தார் தவெக வேட்பாளர் வினோத் கண்ணன்!



**வேலூர், ஏப். 12:**
வேலூர் சட்டசபை தொகுதியில் தவெக வேட்பாளராக போட்டியிடும் வினோத் கண்ணன், மாநகராட்சி பகுதிகளான சலவன்பேட்டை, குட்டைமேடு,கொசப்பேட்டை பகுதிகளில் காலை வேளையில் வாக்கு சேகரித்தார்.

சலவன் பேட்டையில் மண்பாண்டங்கள் செய்யும் தொழிலாளர்களுடன் நேரில் சென்று வாக்கு சேகரித்தார் வேட்பாளர் வினோத் கண்ணன். மண்பாண்டம் செய்யும் தொழில் குறித்தும், இதற்கு அரசு ஏதாவது உதவி செய்கிறதா? என்றும் கேட்டறிந்தார்.

பின்னர் மண்பாண்டம் செய்யும் கருவியை இயக்கி பார்த்த வினோத் கண்ணன், உங்களது வாழ்வாதாரம் பெருக அரசாங்கத்திடம் பேசி நடவடிக்கை எடுப்பதாகவும், இதற்கு தன்னை எம்எல்ஏவாக தேர்வு செய்யும் படியும் வேண்டுகோள் விடுத்தார்.

மேலும் அவர் பேசுகையில், வேலூர் தொகுதியில் இதுவரை இருந்த எம்எல்ஏக்கள் செய்யாத திட்டங்களை நிறைவேற்ற எனக்கு ஒரு வாய்ப்பு தாருங்கள்.

வேலூர் மக்களுக்கு தேவையான சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவுநீர் கால்வாய் வசதி போன்றவற்றை முழுமையாக நிறைவேற்ற எனக்கு விசில் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்யுங்கள் என்று பிரச்சாரம் மேற்கொண்டார்.

பிரச்சாரத்தின் போது தமிழக வெற்றி கழக வேலூர் பகுதி செயலாளர் நிதின், ஆல்பர்ட் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




## தேர்தல் களப்பணியில்...

### ராமதாஸின் மனு தள்ளுபடி! அன்புமணிக்கே 'மாம்பழம்' சின்னம்!

மாம்பழம் சின்னத்தை முடக்கக்கோரி பாமக நிறுவனர் ராமதாஸ் தொடர்ந்த வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் இன்று தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

பாமக பெயர், சின்னம், கட்சிக் கொடி ஆகியவற்றை அன்புமணி பயன்படுத்தத் தடை விதிக்க வேண்டும், கட்சியின் தலைவராக தன்னை அறிவிக்க வேண்டும் எனக் கோரி, பாமக நிறுவனர் ச. ராமதாஸ் தாக்கல் செய்த மனுவை சென்னை உரிமையியல் நீதிமன்றம் கடந்த மார்ச் 26-ஆம் தேதி தள்ளுபடி செய்தது. இந்த விவகாரம் தொடர்பாக ராமதாஸ் தேர்தல் ஆணையத்தை அணுகலாம் என்றும் கூறியிருந்தது.

இந்த உத்தரவை எதிர்த்து ராமதாஸ் தரப்பில் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், இதுதொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தை அணுக உத்தரவிட்டிருந்தது.

அதன்படி, சென்னை உயர்நீதிமன்றத்தில் மாம்பழம் சின்னம் தொடர்பான மேல்முறையீட்டு வழக்கை அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால் அவசர வழக்காக விசாரிக்க நீதிமன்றம் மறுத்துவிட்டது.

பின்னர் வழக்கு விசாரணைக்கு பட்டியலிடப்பட்டு நேற்றும் இன்றும் விசாரணை நடைபெற்ற நிலையில் ராமதாஸின் மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

ஏற்கெனவே சின்னம் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் இந்த வழக்கு செல்லாது என்று கூறி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அன்புமணி, தேர்தல் ஆணையத்தின் மூலமாக கட்சி, சின்னத்தைப் பெற்ற பிறகே ராமதாஸ் இதுதொடர்பாக வழக்கு தொடர்ந்துள்ளார்.

### "பழனிசாமிக்கு பாடம் புகட்டவே தேர்தலில் போட்டி" - கிருஷ்ணசாமி ஆவேசம்

சட்டப்பேரவை தேர்தலில் புதிய தமிழகம் கட்சி சார்பில் போட்டியிடும் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்ட வேட்பாளர்களை அறிமுகப்படுத்தி, அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சின்னத்தை அறிமுகம் செய்யும் நிகழ்ச்சி திருநெல்வேலியில் நடைபெற்றது.

இதில் பங்கேற்ற புதிய தமிழகம் கட்சி தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி கூறியது: "தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் அறிவிப்பின்படி, புதிய தமிழகம் கட்சி சார்பில் போட்டியிடும் 61 வேட்பாளர்களில் 57 பேருக்கு சிலிண்டர் சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது. கடையநல்லூர், கீழ்வேளூர் உள்ளிட்ட 4 தொகுதிகளில் வாளி சின்னம் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் 90 லட்சம் பேர் தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர்கள் உள்ளனர். அவர்கள் ஆதரவோடு புதிய தமிழகம் கட்சி களம் காண்கிறது. எந்த தேர்தலையும் புறக்கணிக்காமல், புதிய தமிழகம் கட்சி தொடர்ந்து களம் கண்டு வருகிறது. தனித்து போட்டியிடுவது புதிய தமிழகம் கட்சிக்கு புதிது அல்ல. எங்களோடு 2 முறை பேச்சுவார்த்தை நடத்தி எந்தெந்த தொகுதிகளில் போட்டியிடுவீர்கள் என எழுதி வாங்கிய பின்னரும், எங்களது கூட்டணி பேச்சுவார்த்தை முடிந்துவிட்டதாக பழனிசாமி அறிவித்துவிட்டார். அவருக்கு பாடம் புகட்ட வேண்டும் என்ற நோக்கத்தில் புதிய தமிழகம் கட்சி தனித்து போட்டியிடுகிறது. புதிய தமிழகம் கட்சி போட்டியிடாத தொகுதிகளில் திமுக, அதிமுகவுக்கு எங்களது ஆதரவு கிடையாது. அந்த தொகுதிகளில் தேவேந்திரகுல வேளாளர் சமூகத்தினரும் வாக்களிக்க மாட்டார்கள். இந்த தேர்தலை, பட்டியல் வெளியேற்றத்திற்கான வாக்கெடுப்பாக கருதி சந்திக்கிறோம். புதிய தமிழகம் கட்சி போட்டியிடும் இடங்களில் எங்களுக்கு அதிக ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது . புதிய தமிழகம் கட்சி தனது சொந்த பலத்துடன், தனித்துவத்தையும் சுயமரியாதையையும் காக்கும் நோக்கில் போட்டியிடுகிறது. கூட்டணியில் உள்ள பிற கட்சிகள் வளர கூடாது என்ற நோக்கில் அதிமுக செயல்படுகிறது" என்று தெரிவித்தார்.

### "டெல்லி, குஜராத், சேலம் என எங்கிருந்து யார் வந்தாலும் திமுக தான் வெல்லும்" - செந்தில் பாலாஜி

"புதுடெல்லியில் இருந்து வந்தாலும் சரி, குஜராத்தில் இருந்து வந்தாலும் சரி, சேலத்தில் இருந்து வந்தாலும் சரி... இங்கு திமுக தான் வெல்லும்" என முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் உள்ள தனியார் அரங்கில், திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் மேட்டுப்பாளையம் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம் இன்று (ஏப்.10) நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு திமுக மேற்கு மண்டல பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி தலைமை வகித்தார். மேட்டுப்பாளையம் தொகுதி திமுக வேட்பாளர் கவிதா கல்யாணசுந்தரம் மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் செந்தில் பாலாஜி பேசும்போது, "மேட்டுப்பாளையம் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் கவிதா கல்யாணசுந்தரத்தை ஐம்பதாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும்.

திமுகவினர் முழுவீச்சில் பணியாற்ற வேண்டும். புதுடெல்லியில் இருந்து வந்தாலும் சரி, குஜராத்தில் இருந்து வந்தாலும் சரி, சேலத்தில் இருந்து வந்தாலும் சரி இங்கு திமுக தான் வெல்லும்"என்றார்.

## 5 ஆண்டுகள் ஆட்சியில் 511 வாக்குறுதிகளில் 70 மட்டுமே நிறைவேற்றம் - அண்ணாமலை

*தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவு வருகிற 23-ந்தேதி நடைபெறுகிறது. இந்த தேர்தல் களத்தில் திமுக கூட்டணி, அதிமுக கூட்டணி, நாம் தமிழர் கட்சி, தவெக என 4 முனை போட்டி நிலவுகிறது. தேர்தலை முன்னிட்டு வேட்பாளர்கள் வீதி வீதியாக சென்று தீவிர வாக்கு வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களை ஆதரித்து அந்தந்த கட்சி தலைவர்களும், முக்கிய நிர்வாகிகளும் சூறாவளி பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.*

*அந்த வகையில், தமிழக முன்னாள் பாஜக தலைவர் அண்ணாமலை 4 தொகுதிகளில் இன்று தேர்தல் பிரசாரம் மேற்கொண்டு வருகிறார். அதன்படி, உதகமண்டலம் தொகுதியில் பாஜக வேட்பாளரை ஆதரித்து அண்ணாமலை பிரசாரம் மேற்கொண்டார். அப்போது 5 ஆண்டுகள் திமுக ஆட்சியில் 511 வாக்குறுதிகளில் 70 மட்டுமே நிறைவேற்றப்பட்டுள்ளதாக அண்ணாமலை தெரிவித்தார். இது குறித்து அவர் தனது எக்ஸ் தள பக்கத்தில் தெரிவித்திருப்பதாவது;-*



*வரும் 2026 சட்டமன்ற தேர்தலில், தேசிய ஜனநாயகக் கூட்டணியின் சார்பாக உதகமண்டலம் தொகுதியில் களம் காணும் நமது பாஜக வெற்றி வேட்பாளர் போஜராஜனை ஆதரித்து, இன்றைய தினம் நடைபெற்ற, மாபெரும் பிரசார கூட்டத்தில் உரையாற்றினேன்.*

*2021 சட்டமன்ற தேர்தலின் போது, 511 தேர்தல் வாக்குறுதிகளை அறிவித்த திமுக, 5 ஆண்டுகள் ஆட்சியில் இருந்தும் கூட வெறும் 70 தேர்தல் வாக்குறுதிகளை மட்டுமே நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆனால், முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், அவர் செல்லும் இடங்களில் எல்லாம் 99 சதவீதம் வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டதாக வாய் கூசாமல் பொய் பேசி வருகிறார்.*

*தமிழகத்தில் கடந்த 5 ஆண்டுகாலம் இருண்ட ஆட்சியை கொடுத்த திமுகவை, மீண்டும் ஆட்சி கட்டிலில் அமர தமிழக மக்கள் விடமாட்டார்கள். படுகர் சமுதாய மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பழங்குடியினர் அந்தஸ்து கிடைத்திட திமுக அரசு எதுவும் செய்யவில்லை. தமிழகத்தில் வருகிற மே 4 ஆம் தேதி, ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு, படுகர் சமுதாய மக்களுக்கு பழங்குடியினர் அந்தஸ்தை பெற்று தர தேசிய ஜனநாயகக் கூட்டணி உரிய நடவடிக்கை எடுக்கும் என்பது உறுதி.*

*காட்டாட்சியை கட்டவிழ்த்து, உதகமண்டலத்தின் வளர்ச்சியை முடக்கிய திமுக ஆட்சிக்கு முடிவுகட்ட, வரும் 23 ஆம் தேதி நடைபெறும் தேர்தலில், தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வெற்றி வேட்பாளர் போஜராஜனை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் உதகை மக்கள் வெற்றிப்பெற வைப்பார்கள் என்பது உறுதி.*

*இந்நிகழ்வில், தமிழக பாஜக நீலகிரி மாவட்ட தலைவர் அண்ணன் தருமன், முன்னாள் மாவட்ட தலைவர் மோகன்ராஜ், தேசிய ஜனநாயகக் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.*

*இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

## காரைக்குடி பிரச்சாரத்தில் பேசாமல் புறப்பட்டார் விஜய்: தாமதமாக வந்ததால் அனுமதி மறுப்பு

*காரைக்குடி தொகுதியில் அனுமதிக்கப்பட்ட நேரத்தை கடந்து, பிரச்சாரம் நடக்கும் இடத்துக்கு வந்ததால், தவெக தலைவர் விஜய் பேசுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் காரைக்குடியில் விஜய் பேசாமல் திரும்பிச் சென்றார்.*

*சிவகங்கை மாவட்டம் காரைக்குடி தொகுதியில் இன்று விஜய் பிரச்சாரம் செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக காவல் துறை அனுமதியும் அளித்திருந்தது. காரைக்குடியில் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த 4 வேட்பாளர்களுக்கும் ஆதரவாக விஜய் இன்று வாக்கு சேகரிப்பதாக இருந்தது. இதற்காக இன்று காலையில் சென்னையில் இருந்து தனி விமானம் மூலமாக மதுரை வந்த விஜய், அங்கிருந்து தனது வாகனம் மூலமாக காரைக்குடிக்கு புறப்பட்டார்.*

*மதுரையிலிருந்து வரும் வழியில் தவெகவினர் திரண்டதால், அவர்களுக்கு கையசைத்தபடி விஜய்யின் வாகனம் ஆமை வேகத்தில் பயணித்தது. இடையில் திடீரென பிரச்சார வாகனத்தில் இருந்து இறங்கிய விஜய், அவருக்கு தயாராக வைக்கப்பட்டிருந்த சைக்கிளில் ஏறி பயணிக்க தொடங்கினார். இதனால் அவர் காரைக்குடிக்கு வருவதற்கு மிகவும் தாமதமானது. மதுரையில் இருந்து காரைக்குடி வருவதற்க்கு உள்ள 90 கிலோ மீட்டர் தூரத்தை கடக்க விஜய்யின் வாகனம் 4 மணி நேரத்தும் மேல் எடுத்துக்கொண்டது. இதனால் விஜய், காரைக்குடிக்கு மதியம் 2.30 மணிக்கு மேல்தான் வந்தார். விஜய் காரைக்குடியில் பிரச்சாரம் செய்ய நண்பகல் 12 மணி முதல் மதியம் 2.30 மணி வரை அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. காவல் துறை அனுமதித்திருந்த நேரத்தை தாண்டி காரைக்குடிக்கு விஜய் வந்ததால், அவருக்கு பிரச்சாரம் மேற்கொள்ள அனுமதி மறுக்கப்பட்டது. இதனால், பிரச்சாரம் நடக்கும் இடத்தில் கூடியிருந்த தொண்டர்களிடம் பேசாமலேயே விஜய் அங்கிருந்து புறப்பட்டார். மேலும், காரைக்குடியில் ரோடு ஷோ மேற்கொண்ட விஜய், தவெக வேட்பாளர் பிரபுவுக்கு வாக்களிக்கும்படி சைகையின் மூலம் தெரிவித்துவிட்டு புறப்பட்டார்.*

## தவெக தலைவர் விஜய் பிரசார வாகனத்தை பின்தொடர்ந்து பைக்கில் சென்று விபத்தில் சிக்கிய இளைஞர்கள்

*தமிழக சட்டசபை தேர்தல் வரும் 23ம் தேதி நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் மே 4ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. தேர்தல் நெருங்கி வரும் நிலையில் அரசியல் கட்சியினர் பிரசாரம், வாக்குசேகரிப்பு உள்பட பல்வேறு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றனர்.*

*இதனிடையே, தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் இன்று சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட உள்ளார். இதற்காக விஜய் மதுரையில் இருந்து பிரசார வாகனம் மூலம் சாலை வழியாக காரைக்குடி செல்கிறார்.*



*இந்நிலையில், விஜய் இன்று காலை பிரசார வாகனத்தில் காரைக்குடிக்கு சென்றுகொண்டிருந்தார். அவரின் பிரசார வாகனத்தை அவரது தொண்டர்கள், ரசிகர்கள் என பலரும் பின் தொடர்ந்து பைக்கில் சென்றுகொண்டிருந்தனர்.*

*மதுரை தேசிய நெடுஞ்சாலையில் சென்றபோது விஜய் பிரசார வாகனத்தை பின் தொடர்ந்து பைக்கில் சென்றபோது இரு இளைஞர்கள் விபத்தில் சிக்கினர். இளைஞர்கள் சென்ற பைக் சாலை தடுப்புச்சுவரில் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் படுகாயமடைந்த 2 இளைஞர்களும் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.*

## விஜய் ஒரு முதிர்ச்சியற்ற தலைவர்: டிகே சிவக்குமார் தாக்கு



*தவெக தலைவர் விஜய் நெல்லையில் நேற்று தேர்தல் பிரசாரம் மேற்கொண்டார். அப்போது விஜய், "திமுக கூட்டணி கலகலத்துப் போய் நிற்கிறது. டாப் தனியாக, பாட்டம் தனியாக, ரீப்பர் தனியாக ஜாயிண்ட் தனியாக நிற்கிறது. தனித்தனியாக எல்லாமே அப்படியே ஒட்ட வைத்துக் கொண்டு இருக்கிறார். கூட்டணி கட்சிக்காரர்களே ஒருத்தருக்கு ஒருத்தர் ஓட்டு போட மாட்டார்கள் போல சூழல் இருக்கிறது.*

*சில பல கோடிகளை கொடுத்து தமிழ்நாடு காங்கிரஸை திமுக பையில் போட்டுக்கொண்டுள்ளது. ஆனால் உண்மையான காங்கிரஸ் நம் பக்கம் நிற்கிறது" என்று பேசினார்.*

*விஜய்யின் இந்த பேச்சுக்கு காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் கடும் பதிலடி கொடுத்து வருகிறார்கள். இந்த நிலையில், கர்நாடக துணை முதல் மந்திரி டிகே சிவக்குமாரும் விஜய்யை கடுமையாக விமர்சித்தார். சென்னையில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த டிகே சிவக்குமார் கூறியதாவது:*

*"விஜய் ஒரு முதிர்ச்சியற்ற அரசியல்வாதி. அவருக்குப் பக்குவம் என்பதே தெரியாது. விஜய் உடன் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி இருக்கலாம்.*

*இந்திய தேசிய காங்கிரஸ் அவருடன் இல்லை. இந்திய தேசிய காங்கிரஸ் திமுகவுடன் இருக்கிறது..இந்தக் கூட்டணிக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இருக்கும்" என்று கூறினார்.*

## சென்னையில் வாக்காளர் தகவல் சீட்டு இன்று முதல் வழங்கும் பணி தொடக்கம்!

*சென்னையில் உள்ள 16 தொகுதிகளிலும் வாக்காளர் தகவல் சீட்டு வழங்கும் பணி இன்று 12ஆம் தேதி முதல் தொடங்க உள்ளது.*

*இதுகுறித்து மாவட்ட தேர்தல் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான ஜெ.குமரகுருபரன் வெளியிட்ட செய்திக்குறிப்பில், சென்னை மாவட்டத்தில் 16 சட்டமன்றத் தொகுதிகளில் 13,95,716 ஆண் வாக்காளர்கள், 14,96,921 பெண் வாக்காளர்கள் மற்றும் 868 இதர வாக்காளர்கள் என மொத்தம் 28,93,505 வாக்காளர்கள் உள்ளனர். சென்னை மாவட்டத்தில் 975 இடங்களில் 4,085 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.*

*இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்-2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள வாக்காளர்களுக்கு 12.04.2026 அன்று முதல் 18.04.2026 வரை வாக்காளர் தகவல் சீட்டு (VIS) அந்தந்தப் பகுதிகளின் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (BLO) மூலமாக விநியோகம் செய்யப்படவுள்ளது.*



*தேர்தல் நடத்தும் அலுவலர்கள் வாக்காளர் தகவல் சீட்டு (VIS) விநியோகத்திற்கான அட்டவணையை தயாரித்து, அதனடிப்படையில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலமாக வழங்கப்படவுள்ளது. ஒவ்வொரு வாக்குச்சாவடி நிலை அலுவலருக்கும் (BLO) ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடிக்குட்பட்ட வாக்காளர்களுக்கு வாக்காளர் தகவல் சீட்டினை வழங்கி கையெழுத்து அல்லது விரல் அடையாளத்தைப் பெற தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*விநியோகிக்கப்படாத வாக்காளர் தகவல் சீட்டு அனைத்தும் வாக்குச்சாவடி நிலைய அலுவலர்கள் மூலமாக தேர்தல் நடத்தும் அலுவலரிடம் திருப்பி வழங்கிடவும், அவை மூடும் உறையில் பாதுகாப்பாக வைத்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*மேலும், இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிவுறுத்தலின்படி, வாக்காளர்களின் வசதியை அதிகரிக்கும் நோக்கில், வாக்காளர் தகவல் சீட்டு வடிவமைப்பில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மாற்றியமைக்கப்பட்ட வடிவமைப்பில் வாக்காளரின் வரிசை எண் மற்றும் பகுதி எண் ஆகியவை சீட்டின் மேல் வலது மூலையில் பெரிய எழுத்துருவில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கும். இம்மாற்றம் மூலம் வாக்காளர்கள் தங்கள் வாக்குச்சாவடியை எளிதில் அடையாளம் காணவும், வாக்குப்பதிவு அலுவலர்கள் வாக்காளர் பெயரை வாக்காளர் பட்டியலில் விரைவாக கண்டறியவும் உதவியாக இருக்கும்படி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.*

## மிளகாய் பறிக்க சென்ற மூதாட்டி உயிரிழப்பு: வெயில் கொடுமையால் சோகம்

**தூத்துக்குடி, ஏப்.12:**

தூத்துக்குடி மாவட்டம் குளத்தூர் மேலத்தெருவைச் சேர்ந்த செல்லையா மகள் வள்ளியம்மாள் (வயது 70). திருமணமாகாத இவர், குளத்தூர்-வேடநத்தம் சாலையில் தனக்கு சொந்தமான நிலத்தில் மிளகாய் பயிரிட்டிருந்தார். நேற்று காலை வழக்கம்போல் மிளகாய் பறிப்பதற்காக தனது நிலத்திற்கு சென்றுள்ளார்.

மாலை நேரமாகியும் வள்ளியம்மாள் வீடு திரும்பாததால் சந்தேகமடைந்த அக்கம்பக்கத்தினர், அவரது அக்கா மகன் காமராஜிற்கு தகவல் தெரிவித்தனர். உடனடியாக அவர் நிலத்திற்கு சென்று தேடியபோது, வள்ளியம்மாள் நிலத்தில் குப்புற விழுந்த நிலையில் சடலமாக கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்.

இதுகுறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த குளத்தூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் ராமலட்சுமி மற்றும் போலீசார், வள்ளியம்மாளின் உடலை கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

வள்ளியம்மாள் மிளகாய் பறித்துக் கொண்டிருந்தபோது, நிலவிய கடும் வெயில் மற்றும் வெப்பம் தாங்காமல் மயங்கி விழுந்து உயிரிழந்திருக்கலாம் எனத் தெரிகிறது. இந்த சம்பவம் குறித்து குளத்தூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தூத்துக்குடியில் சிலிண்டர் வாங்க 2 மணி நேரம் வரிசையில் காத்திருக்கும் மக்கள்



**தூத்துக்குடி, ஏப்.12:**

சமையல் எரிவாயு சிலிண்டர் பதிவு செய்தவர்களுக்கு, வீட்டிற்கே வந்து டெலிவரி செய்வது வழக்கம். ஆனால், தற்போது ஈரான் - இஸ்ரேல் போர் காரணமாக சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், தூத்துக்குடி மாவட்டம் புதியம்புத்தூரில் எச்.பி. சிலிண்டர் பதிவு செய்தவர்களுக்கு லாரியில் கொண்டு வந்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

சிலிண்டர் பெறுவதற்காக ஆண்கள் பெண்கள் என 100க்கும் மேற்பட்டோர் தனித்தனி வரிசையில் காலி சிலிண்டர்களுடன் நிற்கின்றனர். சுமார் 2 மணி நேரம் காத்திருந்து, புதிய சிலிண்டரை வாங்கிச்செல்கின்றனர். சிலர் வரிசையில் நிற்காமல் சிலிண்டர் வாங்க முண்டியடித்துக்கொண்டு முன்னே சென்றதால் சலசலப்பு ஏற்பட்டது. இதனால் ஒரு போலீஸ்காரர் அங்கு சென்று வரிசையை ஒழுங்குபடுத்தி அனைவரும் சிலிண்டர் பெற வழிவகை செய்து வருகிறார். நீண்ட நேரம் வரிசையில் நிற்பதால், மக்கள் அவதியடைந்து வருகின்றனர்.

## தேய்பிறை அஷ்டமி: சீயாத்தமங்கை கால பைரவருக்கு சிறப்பு பூஜை



**நாகை, ஏப்.12:**

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம், சீயாத்தமங்கை மெயின் ரோட்டில் வன்மீகநாதர் கோவில் உள்ளது. இந்த கோவிலில் காலபைரவர் தனி சன்னிதியில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். இந்த கோவிலில் ஒவ்வொரு தேய்பிறை அஷ்டமியன்றும் பைரவருக்கு சிறப்பு பூஜை நடைபெறுவது வழக்கம்.

அதன்படி இன்று தேய்பிறை அஷ்டமியையொட்டி சிறப்பு பூஜை நடைபெற்றது. மஞ்சள், சந்தனம், பால், பன்னீர், தயிர், தேன், இளநீர், மாப்பொடி, திரவியப்பொடி உள்ளிட்ட பொருட்களால் கால பைரவருக்கு சிறப்பு அபிஷேகம் நடந்தது. பின்னர் வண்ணமலர்களால் அலங்கரிக்கப்பட்டு தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

சிறப்பு பூஜையில் சீயாத்தமங்கை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். பூஜையில் பங்கேற்ற பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

## கன்னியாகுமரி குகநாதீஸ்வரர் கோவிலில் 1008 இளநீர் அபிஷேகம்



**கன்னியாகுமரி, ஏப்.12:**

கன்னியாகுமரி ரெயில் நிலைய சந்திப்பில் குகநாதீஸ்வரர் கோவில் உள்ளது. இந்த கோவில் ஆயிரம் ஆண்டு பழமையானது ஆகும். தஞ்சை பெரிய கோவிலை கட்டுவதற்கு முன்பே மாமன்னன் ராஜராஜ சோழன் இந்த கோவிலை கட்டி உள்ளார். இங்கு குகன் என்ற முருககடவுள் ஈஸ்வரனை (சிவபெருமான்) வழிபட்டதால் இக்கோவிலுக்கு குகநாதீஸ்வரர் கோவில் என்று பெயர் வரக் காரணமாயிற்று.

இந்த கோவிலில் உள்ள மூலஸ்தான கருவறையில் குமரி மாவட்டத்திலேயே மிக உயரமான ஐந்தரை அடி உயர சிவலிங்கம் அமைந்து உள்ளது.

வரலாற்று சிறப்புமிக்க இந்த கோவிலில் விசேஷ நாட்களில் சிவபெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். பொதுநலன் கருதியும் சிறப்பு பூஜைகள் நடைபெறும். அவ்வகையில், நாட்டில் கோடை வெப்பம் நீங்கி மழை பெய்ய வேண்டி குகநாதீஸ்வரருக்கு இன்று 1008 இளநீர் அபிஷேகம் நடந்தது.

இதையொட்டி அதிகாலை 6 மணிக்கு கோவில் திருநடை திறக்கப்பட்டு நிர்மால்ய பூஜையும் விஸ்வரூப தரிசனமும் நடந்தது.

அதைத் தொடர்ந்து அபிஷேகமும் தீபாராதனையும் நடந்தது.

பின்னர் குகநாதீஸ்வரருக்கு எண்ணெய், மஞ்சள் பொடி, களப பொடி, பால், தயிர், இளநீர், பன்னீர், சந்தனம், விபூதி, நெய், தேன், பஞ்சாமிர்தம் மற்றும் புனித நீரால் சிறப்பு அபிஷேகம் நடந்தது. அதைத் தொடர்ந்து கருவறையில் அமைந்து உள்ள குகநாதீஸ்வரருக்கு 1008 இளநீர் அபிஷேகம் நடந்தது.

அதன்பின்னர் அலங்கார தீபாராதனையும் பக்தர்களுக்கு அருட்பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சியும் நடந்தது.

## சென்னையில் ரூ.29 கோடி மதிப்பிலான நகைகள் பறிமுதல்



**சென்னை, ஏப்.12:**

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் வருகிற ஏப்ரல் 23-ந் தேதி, நடைபெறுகிறது. தேர்தல் தேதி அறிவித்த பின்பு தேர்தல் நடத்தை விதிமுறைகள் உடனடியாக அமலுக்கு வந்தது. சட்டசபை தேர்தலை முன்னிட்டு வாக்காளர்களுக்கு அரசியல் கட்சியினர் பணம், பரிசு பொருட்களை கொடுப்பதை தடுக்கும் வகையில் தேர்தல் பறக்கும் படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள். வாகன சோதனையின்போது உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு செல்லப்படும் பணம் மற்றும் நகைகளும் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன.

சென்னை தி.நகரில் தேர்தல் பறக்கும் படையினரின் வாகன சோதனையில், 28 கோடியே 54 லட்சம் மதிப்புள்ள தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

நகைக்கடைகளுக்கு கொண்டு செல்லப்படுவதாக கூறப்பட்ட நிலையில், உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு செல்லப்பட்டதால், பறிமுதல் செய்து நுங்கம்பாக்கம் வருமான வரித்துறை அதிகாரிகளிடம் நகைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



வறுமை, நோய், அறியாமை மூன்றும்
முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை
பூமியில் இல்லாமல்
ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528



## நலம் தரும் மருத்துவம்

### பாதாம் - ராஜ்மா - வெந்தயம் - சப்ஜா - சியா விதைகள்: ஏன் ஊறவைத்து சாப்பிட வேண்டும்?



ஊறவைப்பது உணவுப்பொருட்களை மென்மையாக்கி, உடலுக்கு ஏற்றபடி மாற்றுகிறது. மேலும், உணவில் உள்ள ஊட்டச்சத்துக்கள் உடலால் நன்றாக உறிஞ்சப்பட உதவுகிறது. அப்படி அவசியம் ஊறவைத்து சாப்பிட வேண்டிய உணவுப் பொருட்கள் மற்றும் அதற்கான காரணங்களைப் பார்ப்போம்.

1. பாதாம், ஊறவைக்கும் நேரம்: 6 முதல் 8 மணி நேரம்: பாதாமில் நல்ல கொழுப்பு, புரதம், வைட்டமின் E மற்றும் ஆன்டி ஆக்சிடென்டுகள் உள்ளன. அதன் வெளிப்புற தோலில் உள்ள டானின் சத்துக்கள் உறிஞ்சப்படுவதற்கு தடையாக இருக்கும். பாதாமை இரவு முழுவதும் நீரில் ஊறவைத்து, காலையில் தோலை நீக்கி சாப்பிட்டால் டானின் குறைந்து, ஊட்டச்சத்துக்கள் முழுமையாக கிடைக்கும். ஜீரணமும் எளிதாகும்.

2. ராஜ்மா, ஊறவைக்கும் நேரம்: 8 முதல் 10 மணி நேரம்: ராஜ்மாவில் புரதம் மற்றும் நார்ச்சத்து அதிகம் உள்ளது. ஊறவைக்காமல் சாப்பிட்டால் லெக்டின் என்ற சேர்மம் வயிற்றுப் பிரச்சினைகளை ஏற்படுத்தும். ஊறவைத்தால் நச்சுத்தன்மை குறைந்து, சமைப்பதற்கும் ஜீரணிப்பதற்கும் எளிதாகும்.

3. வெந்தயம்: ஊறவைக்கும் நேரம்: 6 முதல் 8 மணி நேரம்: வெந்தயம் செரிமானத்தை மேம்படுத்தி, வளர்சிதை மாற்றத்தை தூண்டும். ரத்த சர்க்கரை அளவை கட்டுப்படுத்த உதவும். ஊறவைத்தால் கசப்புத்தன்மை குறைந்து, சத்துக்கள் எளிதாக கிடைக்கும்.

4. சப்ஜா விதைகள், ஊறவைக்கும் நேரம்: 10 முதல் 15 நிமிடங்கள்: சப்ஜா விதைகள் வெயில் காலத்தில் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. ஊறவைத்தால் ஜெல்லி போன்ற அமைப்பாக மாறி, சாப்பிட எளிதாகும். உலர்ந்த நிலையில் சாப்பிட்டால் ஜீரண சிரமம் ஏற்படும்.

5. சியா விதைகள், ஊறவைக்கும் நேரம்: 10 முதல் 20 நிமிடங்கள் : சியா விதைகள் நார்ச்சத்து, ஒமேகா-3 கொழுப்பு அமிலம் மற்றும் புரதம் நிறைந்தவை. ஊறவைத்தால் ஜெல்லி போன்ற அமைப்பாக மாறி, சத்துக்கள் உடலால் எளிதில் உறிஞ்சப்படும்.

6. சோயாபீன்ஸ், ஊறவைக்கும் நேரம்: 8 முதல் 12 மணி நேரம்: சோயா உணவுகள் புரதம் நிறைந்தவை. ஊறவைக்காமல் பயன்படுத்தினால் என்சைம் செயல்பாடு பாதிக்கப்பட்டு ஜீரண சிரமம் ஏற்படும். ஊறவைத்தால் தீங்கு விளைவிக்கும் தன்மைகள் குறைந்து, சமைப்பதற்கும் சாப்பிடுவதற்கும் ஏற்றதாக மாறும்.

## மண்ணெண்ணெய்க்கு ஏன் நீல நிறம்? - இதன் பின்னணியில் உள்ள ‘நிற’ உண்மை இதுதான்!



குறைவான வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு இந்திய அரசு மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்குகிறது. பெட்ரோலிய சுத்திகரிப்பின் மூலம் நிறமற்ற எளிதில் தீப்பற்றக்கூடிய ஹைட்ரோகார்பன் எரிபொருளான மண்ணெண்ணெய் மக்களுக்கு விநியோகிக்கும் போது நீல நிறத்தில் உள்ளது. இதற்கான காரணங்கள் குறித்து இப்பதிவில் அறிந்து கொள்வோம்.

பெட்ரோலை விட குறைந்த ஆவியாகும் தன்மை கொண்ட மண்ணெண்ணெய் பொதுவாக அடர் நீல நிறத்தில் இருப்பதற்கு சாயமிடுதல் என்ற செயல்முறை காரணமாக இருக்கிறது. சட்டவிரோதமாக மண்ணெண்ணெய் விற்பனை செய்வதை தடுப்பதற்காகவே பெட்ரோல் மற்றும் டீசல் உடன் நீல நிற சாயம் சேர்க்கப்படுகிறது.

எண்ணெயில் கரையக்கூடிய சால்வென்ட் ப்ளூ 35 (SOLVENT BLUE 35) அல்லது ஆயில் ப்ளூ 35 (OIL BLUE 35) என்ற சாயத்தை மண்ணெண்ணையில் கலக்கின்றனர். இது எளிதில் மண்ணெண்ணெயுடன் கலந்து நீல நிறத்தை கொடுப்பதாக தி ஹிந்து மற்றும் எகனாமிக்ஸ் டைம்ஸ் (2025-2026) அறிக்கை கூறுகிறது.

### நீல நிறக் காரணம்

பெட்ரோல் டீசல் உடன் நீல நிறம் கலந்த மண்ணெண்ணையை கலக்கும்போது எளிதாக இதனை கண்டுபிடிக்கலாம். மானியவிலையில் மண்ணெண்ணெய் வழங்கப்படுவதால் சட்டவிரோதமாக மற்ற எரிபொருட்களுடன் கலக்கப்படுவதை தடுக்க இந்த நீல நிறம் உதவுகிறது. சட்டவிரோத வியாபாரிகள் மானிய விலை மண்ணெண்ணெயை பெட்ரோல் நிலையங்களில் விற்க நினைத்தால் நீல நிறத்தை வைத்து எளிதில் அடையாளம் காணமுடியும்.

சில சிறப்பு விதிமுறைகளின் படி குறிப்பிட்ட அளவில் இந்த நீல நிறச் சாயத்தை பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகமும் எண்ணெய் சந்தைப்படுத்துதல் நிறுவனங்களும் சேர்க்கின்றன. மனித ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்காத வகையில் ஒரு லிட்டர் மண்ணெண்ணையில் மிகச் சிறிய அளவே நீல நிற சாயம் சேர்க்கப்படுகிறது. ஆனாலும் பெட்ரோலிய சுத்திகரிப்பின் மூலம் கிடைக்கும் மண்ணெண்ணையை குடிப்பதோ சாப்பிடுவதோ ஆபத்தானது என்பதை மறக்கக்கூடாது.



1950 ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் மானிய முறையில் மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்படுகிறது. அப்போதிருந்தே நீல நிறச்சாயம் பயன்படுத்தப்பட்டு வருவதாக கூறப்படுகிறது. உலகம் முழுவதும் உள்ள நாடுகளிலும் இந்த முறை பயன்படுத்தப்படுகிறது. காலங்கள் மாறிய இன்றைய டிஜிட்டல் யுகத்திலும் நேரடிப் பணப் பரிமாற்றம் (DIRECT BENEFIT TRANSFER) மூலம் மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.

முறைகேடுகளை தவிர்க்கவும் மண்ணெண்ணையை அடையாளம் காணவும் இன்றளவும் நீல நிறம் பயன்படுத்தப்படுகிறது.

சமையல் அடுப்புகள், விளக்குகள், ஜெட் என்ஜின் எரிபொருளாக இருக்கும் மண்ணெண்ணெய் தொழிற்சாலைகளிலும் பயன்படுத்தப்படுகிறது. 150 டிகிரி செல்சியஸ் முதல் 275 டிகிரி செல்சியஸ் கொதிநிலை கொண்ட சிறந்த திரவ எரிபொருளாக மண்ணெண்ணெய் உள்ளது.

எல். பி. ஜி பற்றாக்குறை நிலவும் இந்நேரத்தில் நெருக்கடியை தீர்க்க மண்ணெண்ணெய் பயன்பாடு அதிகரித்துள்ளது.

# அப்பாவி" அண்ணன் - "அதிமேதாவி" தம்பி!



கந்தசாமி ஒரு எதார்த்தமான மனிதர். கிராமத்திலிருந்து சென்னைக்கு தன் தம்பி விவேக் வீட்டிற்கு வந்திருந்தார். விவேக் ஒரு பெரிய ஐடி கம்பெனியில் வேலை பார்க்கும் "அதிமேதாவி". அண்ணனை ஒரு நவீன உணவகத்திற்கு (RESTAU-RANT) அழைத்துச் சென்றான்.
உணவகத்தில்:
வேயிட்டர் வந்து மெனு கார்டைக் கொடுத்தார். அதில் ஒரு சாதாரண காபியின் விலை 250 ரூபாய் என்று இருந்தது.
கந்தசாமி: (அதிர்ச்சியுடன்) "தம்பி, ஒரு காபி 250 ரூபாயா? எங்க ஊர்ல ஒரு கட்டு சந்தனக்கட்டையே இந்த விலைக்குக் கிடைக்கும்டா!"
விவேக்: "அண்ணே, இது 'ப்ரீமியம்' ஹோட்டல். இங்க காபி மட்டும் தர மாட்டாங்க, கூடவே 'சர்வீஸ்' மற்றும் 'ஆம்பியன்ஸ்' (அமைதி) தருவாங்க. அமைதியா இருங்க."
காபி வந்தது. குடிக்கும்போது கந்தசாமிக்கு ஒரு சந்தேகம்.
கந்தசாமி: "ஏம்பா தம்பி, காபி குடிக்கிறப்ப எதுக்கு அந்த மூலையில ஒருத்தர் வயலின் வாசிச்சுக்கிட்டே இருக்கார்?"
விவேக்: (பெருமையாக) "அண்ணே, அதுதான் 'லைவ் மியூசிக்'. நாம சாப்பிடும்போது இசை கேட்டா செரிமானம் நல்லா ஆகும். அதுக்கும் சேர்த்துதான் காபி விலை அதிகம்."
பில் வரும் நேரம்:
பில் 600 ரூபாய் வந்தது. விவேக் கெத்தாக தன் கிரெடிட் கார்டை நீட்டினான். மெஷினில் கார்டை தேய்த்தபோது "DECLINED" (பணம் இல்லை) என்று வந்தது. விவேக் பதறிப்போய் இன்னொரு கார்டை கொடுத்தான், அதுவும் வேலை செய்யவில்லை.
வேயிட்டர்: "சார், உங்க கார்டுல பணம் இல்லை போல. கேஷ் இருந்தா குடுங்க."
விவேக் சட்டைப் பையைத் தடவினான், பர்ஸ் காலியாக இருந்தது. தம்பி முகம் வேர்க்கத் தொடங்கியதைக் கண்ட கந்தசாமி மெல்ல எழுந்தார்.
கந்தசாமி: "தம்பி, நீ இரு... நான் பார்த்துக்கறேன்."
கந்தசாமி மெல்ல அந்த வயலின் வாசிப்பவரிடம் சென்றார். அவரிடம் ஏதோ கிசுகிசுத்தார். அடுத்த நிமிடம், அந்த வயலின் கலைஞர் வாசிப்பதை நிறுத்திவிட்டு ஓடிவந்து, வேயிட்டரிடம் தன் பையிலிருந்து 600 ரூபாயை எடுத்துக் கொடுத்தார்.
வெளியே வந்ததும்:
விவேக்கிற்கு ஒரே ஆச்சரியம். "அண்ணே! என்ன இது அதிசயம்? அந்த மியூசிக் ஆளு எதுக்கு நமக்காக காசு கட்டினாரு? அவருக்கு என்ன சொன்னீங்க?"
கந்தசாமி: "அட ஒன்னுமில்லப்பா... நீதான் சொன்னியே, 'மியூசிக் கேட்டா செரிமானம் ஆகும்'னு. நான் அவர்கிட்ட போய், *'தம்பி, உங்க பாட்டைக் கேட்ட என் தம்பிக்கு வயிறு சரியில்லாம போயிருச்சு, அதனால அவன் பில்லை நீங்களே கட்டிருங்க'*ன்னு சொன்னேன். அவர் பயந்து போய் பணத்தைக் கட்டிட்டாரு!" விவேக்: (தலையில் அடித்துக்கொண்டு) "அண்ணே... அவர் பயந்து கட்டல, நான் வாசிக்கிறது அவ்வளவு மோசமானு கவலைப்பட்டு கட்டியிருக்கார்! இதுல ஒரு 'ஆம்பியன்ஸ்' கேக்குதா உங்களுக்கு?" கந்தசாமி: "எனக்கு ஆம்பியன்ஸ் வேணாம் தம்பி... ஆளை விட்டா போதும்னு ஓடி வந்தேன்!"

**லால்குடி வெ நாராயணன்**

# ஊசி முனை காதுக்குள்ளே..



அதிகாலை நேரம்.. வீட்டு முன் கோலம் போட்டுக்கொண்டிருந்தார் அகிலா பாட்டி. அவர் போட்ட பூக்கோலத்தைப் பார்த்தபடி பெண்கள் வாக்கிங் சென்றனர். அந்த நேரத்தில் ஒரு ஆட்டோ வேகமாக வந்தது.யாரது என்று அகிலா பாட்டி நிமிர்ந்து பார்த்தபோது ஆட்டோ அவரது வீட்டு முன் வந்து நின்றது.ஆட்டோவிலிருந்து குணசேகர் இறங்கினார்.அடுத்ததாக அவரது மனைவி சியாமளா, மகன் சுந்தர் ஆகியோர் இறங்கினார்கள். சியாமளாவின் இடுப்பில் இரண்டு வயது பெண் குழந்தை இருந்தது. அந்தக் குழந்தையைத் தவிர அனைவரது கண்களிலும் மூக்குக் கண்ணாடி சிரித்தது. குணசேகரைப் பார்த்ததும் அகிலா பாட்டி உற்சாகமானார்." ஏய். என் பேரன். குணசேகரா..வா .வா..,சியாமளா ..புள்ளைகளை கூட்டிட்டு வாம்மா." என்று சிரித்த முகத்துடன் வரவேற்றார்.குணசேகரன் புன்னகையுடன்," பாட்டி நல்லா இருக்கியா" என்று கேட்க," நல்லா இருக்கேன் அப்பா.." என்றபடி குணசேகரனின் பெட்டிகளை தூக்க முயன்றார்.அதைப்பார்த்த குணசேகரன் " வேண்டாம் பாட்டி..நானே தூக்கிட்டு வர்ரேன்" என்று சொல்ல,அகிலா பாட்டியோ.. "விடுறா. நான் தூக்கிட்டு வர்ரேன்" என்றபடி பெட்டிகளை தூக்கிக்கொண்டு வீட்டுக்குள் சென்றார். குணசேகர் ஆட்டோக்காரருக்கு பணத்தைக் கொடுத்துவிட்டு வேகமாக பாட்டியைப் பின்தொடர்ந்து சென்றார். ஓட்டு வீடு..விசாலமான அறைகள். குணசேகர் அறைக்குள் சென்று பேண்ட் சட்டைக்கு விடை கொடுத்துவிட்டு வேட்டிக்கு மாறினார். சியாமளா அவசரமாக நைட்டியை அணிந்து கொண்டார். குழந்தை கைஅசைத்து சிரித்துக்கொண்டிருந்தது. குணசேகரின் மகன் சுந்தர்," அப்பா பசிக்குது" என்க ,அவர் ஒரு பிஸ்கட் பாக்கெட்டை எடுத்துக்கொடுத்தார். அவன் அதைப் பிரித்து ஒவ்வொன்றாக விழுங்கத் தொடங்கினான். அதை அகிலா பாட்டிப் பார்த்தாள்." ஏய் குணசேகரா..உன் புள்ள சுந்தர் பல் விளக்கிட்டானா? என்று கேட்க," இல்லை பாட்டி..அவன் பசிக்குதுன்னு கேட்டால் உடனே ஏதாவது திங்கக் கொடுத்தாகணும்.இல்லன்னா அழுது உருண்டு கலவரத்தை உண்டு பண்ணிடுவான்.." என்க,அகிலா பாட்டி," ம்..அழுவானா.?" என்று கேட்டார்.குணசேகர்," ஆமா பாட்டி...அப்படி பழகிட்டான்.சரி பாட்டி பஸ்சிலே சென்னையிலே இருந்துவந்தது ஒரே களைப்பா இருக்கு..நான் குளிச்சிட்டுவர்ரேன்" என்று சொல்லிவிட்டு வீட்டின் பின்னால் உள்ள பாத்ரூமுக்குச் சென்றார். சியாமளா மெல்ல," அகிலா பாட்டி.. இங்கே டீவி இருக்கா? என்று கேட்க," அதெல்லாம் இல்லம்மா?" என்றார். அதைக்கேட்ட சியாமளா," என்ன டீவி இல்லையா..சீரியல் பாக்காம என்னால இருக்க முடியாதே.." என்க,அகிலா பாட்டி மெல்ல," ஏம்மா..முதலில் குளிச்சிட்டு வா..நான் இட்லி அவிச்சி வைக்கிறேன்..சாப்பிடு" என்று சொல்ல, சியாமளா சலித்துக்கொண்டு," சரி பாட்டி.." என்றாள்.குணசேகரன் குளித்துவிட்டு வந்தவுடன் சியாமளா பாத்ரூமுக்குச் சென்றாள். 2 வயது பெண்குழந்தையை குணசேகரன் பார்த்துக்கொண்டார்.பாட்டி சியாமளா மெல்ல,"குணசேகரா! குழந்தைக்கு உன் பொண்டாட்டி தாய்ப்பால் கொடுத்தாளா?" என்று கேட்க, குணசேகரன் மெதுவாக " இரண்டு மாசம் கொடுத்தா..அப்புறம் புட்டிப்பாலுதான்" என்று சொல்ல," அதான் புள்ளே சத்துப்பிடிக்காம இருக்கு.." என்றார் பாட்டி அகிலா. அதை குணசேகர் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. சிறிது நேரத்தில் சியாமளா குளித்துவிட்டு வந்தார்.பிஸ்கட் தின்று கொண்டிருந்த மகன் சுந்தரைப் பார்த்து," டேய்..எந்திரிடா..பல்விளக்கி குளிச்சிட்டு வரலாம்" என்க,அவன்," பொறும்மா..இன்னும் இரண்டு பிஸ்கட்டு இருக்கு சாப்பிட்டுவிட்டு வருகிறேன்" என்று அடம்பிடித்தான். சியாமளா அவனிடம்,"இருக்கட்டும் குளிச்சிட்டு வந்து சாப்பிடலாம்" என்று அவனை இழுத்துக்கொண்டு பாத்ரூமுக்குள் நுழைந்தாள். அவனை பல்துலக்கவைக்க.. சியாமளா சமரச பேச்சவார்த்தை நடத்திக்கொண்டிருந்தார்." சரிடா.. பல் விளக்கு.. உனக்கு கார்டூன் பிக்சர் பாக்க போன் தர்ரேன்" என்று சொல்ல,சுந்தர் வேகமாக பல் துலக்கினான்.அடுத்து குளிப்பதற்கு பிகு பண்ணினான்." டேய்..நீ இன்னும் சின்னப்புள்ளையா இரண்டாம் வகுப்பு படிக்கிறே..இனி நீயா குளிக்கணும். நீயா பல் துலக்கணும்" என்று சியாமளா சொல்ல,சுந்தர்," ம்.. மாட்டேன்..அம்மா..நீதான் என்னை குளிப்பாட்டவேண்டும்" என்று பிடிவாதம் பிடிக்க,அவனை குளிப்பாட்டி விட்டாள் சியாமளா.பின்னர் பாத்ரூமிலிருந்து வீட்டின் முன்பகுதிக்கு அவர்கள் வந்தனர். அவர்களைப்பார்த்த அகிலா பாட்டி," ம்..உட்காருங்க.. இட்லி சூடா இருக்கு..சாப்பிடுங்க" என்று சொல்ல," சரி பாட்டி" என்றாள் சியாமளா. பின்னர் தரையில் மூக்கு கண்ணாடியை நன்றாகத் துடைத்துப்போட்டுவிட்டு,ஊசி நூலை கோர்க்க முயற்சி செய்தார்.ஐந்து நிமிடப் போராட்டம்..ஊசி முனைக்குள் நூல் நூழையவே இல்லை." என்ன இப்படி இருக்கு..நூல் நுழையவே மாட்டேங்குது." என்றார் சியாமளா. அதைப்பார்த்த பாட்டி அகிலா சிரித்தாள். " கொடு நான் ஊசியிலே நூலை கோர்க்கிறேன்" என்றபடி சியாமளாவிடம் ஊசி நூலை கையில் வாங்கினார்.எந்தவிதப் பதட்டமும் இல்லாமல் உடனே ஊசியில் நூலை கோர்த்தார்.அவர் கண்ணாடி எதுவும் போடவில்லை.அதைப்பார்த்த குணசேகர் மகிழ்ச்சியில்," பாட்டி பாராட்டுகள்" என்று அகிலா பாட்டியின் கைகளைப்பிடித்துக் குலுக்கினார்." பாட்டி கண்ணாடி போடாமலேயே ஊசியிலே நூலை கோர்த்திட்டிய.. அருமை.பாட்டி உங்களுக்கு இப்போ வயசு என்ன ஆகுது?" என்று கேட்க," 80 வயசாச்சு பேரா" என்றார் சியாமளா பாட்டி.அதைக்கேட்ட குணசேகரன்," இல்லைப் பாட்டி..உங்களுக்கு இபுபோ வயசு 18" என்று சொல்லி சிரித்தார். பாட்டி சிரிக்கவில்லை." குணசேகரா.. நீ எப்பவும் லேப்டாப்பும் கையுமா இருக்கா..உன் மனைவி எப்பவும் டீவி சீரியல் பாக்கிறதில ஆர்வமா இருக்கா..உன் மகன் சுந்தர் செல்போன் பார்க்கிறதிலே வெறியா இருக்கான்.அதனால..மூணு பேரும் இப்பவே கண்ணாடி போட்டிருக்கிய. லேப்டாப் பாக்கிறதையும் செல்போன் பாக்கிறதையும் குறைங்க" என்றார். அதைக்கேட்ட குணசேகர்," சரி பாட்டி..நீங்க 80 வயசிலேயும் கண்ணாடி போடல..கண்பார்வை நல்லா இருக்கு.உடம்பும் நல்லா திடகார்த்திரமா இருக்கு..அது எப்படி" என்று கேட்க,பாட்டி பேசினார்." குணசேகரா..நான் டீவியும் பாக்கிறதில்லை..செல்போனும் பாக்கிறது இல்லை.நல்லா குளிர்ந்த நீரில் குளிப்பேன்.கண்களை குளிர்ச்சியாவைச்சிருப்பேன்.அதனால என் கண்கள் நல்லா தெரியுது.. நாம இயற்கை விவசாயம் பண்ணுறம்.அதில விளையுற நெல்லு,காய்கறி,பழங்கள் எல்லாம் உடலுக்கு நல்ல ஆரோக்கியத்தைத் தருகிறது..அதனால இந்த வயசிலேயும் என் உடல் நல்லா இருக்கு" என்றார். குணசேகரன் யோசிக்கத் தொடங்கினார்.அப்போது பாட்டி அகிலா,,," டேய்..குணசேகரா..உனக்கு இரண்டு வயசா இருக்கும்போது உன் பெற்றோர் இறந்துட்டாங்க..உன்னை நான் வளர்த்து பெரியவனாக்கினேன். நீ திருமணமாகி சென்னைக்கு வேலைக்குப் போனபிறகு உன் வாழ்க்கை முறையும் உணவு முறையும் மாறிப்போச்சு.." என்று பாட்டி சொல்லிக்கொண்டிருந்த போது சிறுவன் சுந்தர், பீசாவைச் சாப்பிட்டபடி" அம்மா..வயிறு வலிக்குது" என்று கத்தினான்.அதைக் கேட்ட சியாமளா," ஏய் பாத்ரூம் போயிட்டுவாடா..எல்லாம் சரியாகிடும்" என்று சொல்ல,அவன் பாத்ரூமை நோக்கி ஓடினான். பாட்டி உடனே," சின்னபயலுக்கு இந்த பீசா பர்கர் கொடுக்கிறதை நிறுத்துங்க," என்று சொல்ல,சியாமளா மெல்ல," ஐங்புட்டை நிறுத்தினா.. சுந்தர் அழுவான்,,,,, " என்றாள். பாட்டி மென்மையாக,"நீங்க முதலில் இயற்கை உணவுக்கு மாறுங்க.. உங்களைப் பாத்து புள்ளைகளும் இயற்கை உணவுக்கு மாறிடும்..இதோ தூங்குதே சின்ன கைக்குழந்தை அதுக்காவது கண்ணாடி போடாம இருக்க பாத்துக்குங்க" என்று கண்கலங்கியபடி சொல்ல,குணசேகரன் " பாட்டி நீங்க சொல்கிறபடி செய்கிறோம்" என்று சொல்ல,அகிலா பாட்டியின் முகத்தில் ஆனந்த வெள்ளத்தைக் காண முடிந்தது. வீட்டு முன் பாட்டி போட்ட கோலத்தை குணசேகரன் பார்க்க எழுந்து சென்றான்.அந்தக்கோலம் கலையாமல் புன்னகை செய்தது.

**-கோ.சுரேஷ்குமார்**
கோவில்பட்டி

# விக்கிரமாதித்தன் கதைகள் 4

**.A.S.GOVINDA RAJAN**

## ஏழுநிலை மாடம் கட்டின கதை



இந்த ஆண்டு விக்கிரமாதித்ய மன்னனுக்கு ஒரு மகன் பிறந்தான். குழந்தையின் ஜாதகத்தை கணிக்குமாறு ஜோதிட திலகமான மிஹிரர் என்பவரிடம் தந்தார். அவரும் பார்த்து மன்னா, உன் மகனுக்கு ஆயுள் பலம் கிடையாது. ஏழாவது வயதில் இவனுக்கு மரணம் ஏற்படும் எனறார். மன்னன் இதை மாற்ற வழியே இல்லையா? சொல்லுங்கள் என்று தவித்தான். எந்த பரிஹாரத்தாலும் இவனது உயிரைக் காப்பாற்ற இயலாது என்றதும் விக்ரமாதித்யன் உள்ளத்தில் எப்படியும் மகனைக் காப்பாற்றியே தீருவேன் என்ற தீர்மானம் செய்தான்.

மிஹிரரோ விதியை மாற்ற இயலாது. விக்கிரமாதித்யன் என் மகனை எந்த மிருகமும் நெருங்காது பாதுகாப்பேன் என்றான். அதற்காக ஏழுநிலை மாடம் கட்டினான். ஏழாவது மாடத்தில் சகல வசதிகளுடன் மகனைத் தங்க வைத்தான். கீழ் தன் இருப்பிடத்தை வைத்துக் கொண்ட மன்னன் கண்ணும் கருத்துமாகத் மகனைப் பாதுகாத்தான். கடைசியில் இளவரசனின் ஏழாவது வயதும் பிறந்தது. ஒவ்வொரு நாளும் மகனை மேல் மாடியில் சென்று பார்த்து வந்தான். ஒரு நாள் மன்னன் தன் மகனைப் பார்த்துவிட்டு மகிழ்ச்சியோடு வந்தான். அப்போது ஜோதிடரும் மன்னனுடன் இருந்தார். ஜோதிடரே ! என் மகன் மகிழ்ச்சியுடன் விளையாடிக் கொண்டிருக்கிறானல்லவா? ஆம் மன்னா. இன்னும் ஒரு நாழிகைப் பொழுதில் அவன் உயிர் பிரிந்து விடும். மன்னா, என் ஜோதிடம் பொய்க்காது.


ஒரு மிருகத்தால் அவன் உயிர் பிரிவது அரைநாழிகை பொழுதில் நடக்கும். மன்னன் ஒரு சேவகனை அழைத்தான். நீ உடனே மாடிக்குச் சென்று இளவரசனைப் பார்த்து விட்டு வா எனக் கூறி அனுப்பினான். சேவகனும் பார்த்துவிட்டு மகாராஜா, நமது இளவரசர் பந்து விளையாடிக்கொண்டு இருக்கிறார் என்று பணிவுடன் கூறினான்.

மன்னன் ஜோதிடரைப் பார்த்துப் புன்னகைத்தான். மன்னா சேவகன் பாதிவழியில் இறங்கிக் கொண்டிருக்கும் போதே இளவரசர் உயிர் பிரிந்து விட்டது. மிஹிரர் கூற மன்னன் மேல் மாடத்திற்கு ஓடினான். அங்கே ரத்த வெள்ளத்தில் மகன் இறந்து கிடப்பதைக் கண்டு அலறினான். இத்தனை பாதுகாப்பிருந்தும் இது எப்படி நடந்தது? மன்னா, கலங்காதே நீ கட்டிய இந்த ஏழாவது மாடியில். அழகான தூண்களில் யாளியின் உருவம் செதுக்கப் பட்டுள்ளது. யாளிகள் வாயைத் திறந்து கொண்டு இருப்பதைப் பார் யாளியின் கூர்மையான பற்கள் இளவரசனின் பிடரியில் குத்தி அவன் உயிர் பிரிந்துள்ளது.

தங்களின் ஜோதிடத்தை நான் எளிதாக நினைத்துவிட்டேன். தாங்கள் சாதாரண மிஹிரர் அல்ல. இனி வருங்கால சரித்திரம் தங்களை வராஹமிஹிரர் என்று பாராட்டும். விக்கிரமாதித்யன் சபையில் ஒன்பது அறிஞர்களுள் வராஹமிஹிரரும் இடம் பெற்றார்.

# உறவுகள் மேம்பட A to Z வரிசையில் வழிமுறைகள்

மனிதன் தன் அறிவியல் ஆற்றல் மூலம் வாழ்க்கையை வசதியாக்கிக் கொண்டான். ஆனால் இனிமையாக்கிக் கொள்ள தவறிவிட்டான்.




இனிய வாழ்க்கைக்கு சுமுகமான உறவு அவசியம் அது மேம்பட வழிகாட்டுகிறது இந்த ஆங்கில எழுத்துக்களின் A TO Z வரிசையில் வார்த்தைகள்!

A - APPRECIATION
மற்றவர்களின் நிறைகளை மனதாரப் பாராட்டுங்கள்.

B - BEHAVIOUR
புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரம் இல்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.

C - COMPROMISE
அற்ப விஷயங்களைப் பெரிது படுத்தாதீர்கள். மனம் திறந்து பேசி சுமூகமாக தீர்த்துக் கொள்ளுங்கள்.

D - DEPRESSION
மற்றவர்கள் புரிந்து கொள்ளவில்லையே என்று சோர்வடையாதீர்கள்.

E - EGO
மற்றவர்களை விட உங்களை உயர்வாக நினைத்துக் கொண்டு கர்வப்படாதீர்கள்.

F - FORGIVE
கண்டிக்கக்கூடிய அதிகாரமும் நியாயமும் உங்கள் பக்கம் இருந்தாலும், எதிர்த் தரப்பினரை மன்னிக்க வழி இருக்கிறதா என்று பாருங்கள்.

G - GENUINENESS
எந்த விஷயத்தையும் நேர்மையாகக் கையாளுங்கள்.

H - HONESTY
தவறு செய்தால் உடனே மன்னிப்பு கேட்பதைக் கௌரவமாகக் கருதுங்கள்.

I - INFERIORITY COMPLEX
எவரையும் பார்த்து பிரமிக்காதீர்கள் நான் ஏன் இப்படி இருக்கிறேன் என்ற தாழ்வு மனப்பான்மையை விடுங்கள்.

J - JEALOUSY
பொறாமை வேண்டவே வேண்டாம் அது கொண்டவனையே கொல்லும்.

K - KINDNESS
இனிய இதமான சொற்களை மட்டுமே பயன்படுத்துங்கள்.

L - LOOSE TALK
சம்பந்தமில்லாமலும் அர்த்தமில்லாமலும் பின் விளைவு அறியாமலும் பேச வேண்டாம்.

M - MISUNDERSTANDING
மற்றவர்களைத் தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள்.

N - NEUTRAL
எப்போதும் எந்த விஷயத்தையும், முடிவு எடுத்துவிட்டுப் பேச வேண்டாம். பேசிவிட்டு முடிவு எடுங்கள் நடுநிலை தவறாதீர்கள்.

O - OVER EXPECTATION
அளவுக்கு அதிகமாக எதிர்பார்ப்பு வைக்காதீர்கள். தேவைக்கு அதிகமாக ஆசைப்படாதீர்கள்.

P - PATIENCE
சில சங்கடங்களை சகித்துத்தான் ஆகவேண்டும் என உணருங்கள்.

Q - QUIETNESS
தெரிந்ததை மாத்திரமே பேசுங்கள் அநேகப் பிரச்னைகளுக்குக் காரணம், தெரியாததைப் பேசுவதுதான் கூடுமானவரை பேசாமலே இருந்துவிடுங்கள்.

R - ROUGHNESS
பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டாதீர்கள்.

S - STUBBORNNESS
சொன்னதே சரி, செய்ததே சரி என பிடிவாதம் பிடிக்காதீர்கள்.

T - TWISTING
இங்கே கேட்டதை அங்கேயும், அங்கே கேட்டதை இங்கேயும் சொல்வதை விடுங்கள்.

U - UNDERESTIMATE
மற்றவர்களுக்கும் மரியாதை உண்டு என்பதை மறவாதீர்கள்.

V - VOLUNTARY
அடுத்தவர் இறங்கி வரவேண்டும் என்று காத்திராமல் நீங்களே பேச்சை முதலில் தொடங்குங்கள். பிரச்னை வரும்போது எதிர்த்தரப்பில் உள்ளவரின் கருத்துக்களுக்கும் காது கொடுங்கள்.

W - WOUND
எந்தப் பேச்சும் செயலும் யார் மனதையும் காயப்படுத்தாமல் இருக்கட்டும்.

X - XEROX
நம்மை மற்றவர்கள் எப்படி நடத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறோமோ, அப்படியே மற்றவர்களை நாம் நடத்துவோம்.

Y - YIELD
முடிந்தவரை விட்டுக் கொடுங்கள் விட்டுக் கொடுப்பவர்கள் கெட்டுப் போவதில்லை; கெட்டுப் போகிறவர்கள் விட்டுக் கொடுப்பதில்லை.

Z - ZERO
இவை அனைத்தையும் கடைப் பிடித்தால் பிரச்னை என்பது பூஜ்ஜியம் ஆகும்.

கடைபிடித்து பாருங்கள் அன்பும் கருணையும் இன்முகமும் இயல்பாகவே ஓங்கிவிடும்.

வாழ்க வளமுடன்

M.ராதாகிருஷ்ணன்
வாணியம்பாடி-635751

தினம் ஒரு தலைவர்கள்

# ஜார்ஜ் ஜோசப் வரலாறு

ஜார்ஜ் ஜோசப் ரோசாப்பூத் துரை என அழைக்கப்பட்டஜார்ஜ் ஜோசப் (GEORGE JOSEPH, சியார்ச்சு சோசப்பு 5 சூன் 1887 5 மார்ச்சு 1938) கேரளாவைச் சேர்ந்த இந்திய விடுதலைப் போராட்ட வீரர்; வழக்குரைஞர் ; 1937-ஆம் ஆண்டு சென்னை சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்; இதழாசிரியர்; காந்தி, ஜவஹர்லால் நேரு போன்ற தலைவர்களுடன் நேரடித் தொடர்பில் முன்னின்றவர். கேரளத்தில் நடைபெற்ற வைக்கம் கோவில் இருக்கும் தெருவில் நுழையும் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட கிறித்துவர். ஆங்கில அரசு குற்றப் பரம்பரை சட்டத்தை செயல்படுத்திய போது, அது தொடர்பாகப் பலரின் வழக்கைத் தானே முன்வந்து நடத்தி வெற்றி கண்டவர். கேரளாவில் பிறந்தாலும் தமிழகத்தை மையமாகக் கொண்டு தன்னை மிகச்சிறந்த தேசியவாதியாக அடையாளப்படுத்திக் கொண்டவர்.

1887ம் ஆண்டு கேரளாவின் திருவாங்கூர் பகுதியின் செங்கானூரில் சிரியன் மரபுவழிக் கிறித்தவப் பிரிவில் (ஆர்த்தடாக்சு) பிறந்தவர் பின்னர் கத்தோலிக்க கிறித்தவ சபைக்கு மாறினார். சென்னை கிறித்துவக் கல்லூரியில் முதுகலைப் பட்டம் பெற்று, பின்னர் இங்கிலாந்தில் பாரிஸ்டர் பட்டம் பெற்றார். கேரளத்திற்கு திரும்பியபோது ஆங்கிலேய அரசாங்கம் பல உயர் பதவிகளைத் தர இருந்த நிலையில் தந்தையாரின் வற்புறுத்தலையும் மீறி அந்தப் பதவிகளை ஏற்க மறுத்தார். அவரின் திருமணமும் ஆங்கில அரசில் உயர்பதவி வகித்த குடும்பத்தில் நடந்தேறியது. அப்போதும் அவர் ஆங்கிலேயர் தந்த பதவிகளை ஏற்க மறுத்தார்.

கிறித்தவராகப் பிறந்தாலும் காந்தியின் எதிர்ப்பையும் மீறி வைக்கம் போராட்டத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியவர். தனது மகளுக்கு மாயா என புத்த மதப் பெயரை வைத்து அனைத்து மதத்தினரையும் மதிப்பவராக இருந்தார். பின்னர் வழக்குரைஞர் தொழிலில் ஈடுபடலாம் எனத் தமிழகத்திற்கு வந்தவருக்குச் சென்னை போதிய ஒத்துழைப்பைத் தராத நிலையில் மதுரையில் தனது வழக்குரைஞர் தொழிலைத் தொடங்கத் திட்டமிட்டு 1909 -இல் மதுரையில் குடியேறினார். மதுரையில் நடைபெற்ற பல வழக்குகளின் போது குறுக்கு விசாரணைகளில் சிறந்து விளங்கினார்.

1918களில் மதுரைப் பகுதிகளில் பிரமலைக் கள்ளர் சமூகத்தினரைக் குறிவைத்து ஆங்கிலேயர் குற்றப்பரம்பரைச் சட்டத்தைச் செயல்படுத்தி அம்மக்களை கொடுமைப் படுத்தி வந்தனர். வழக்கின் கொடுமைகளைச் சம்பந்தப்பட்டவர்களே சரிவர உணரமுடியாத காலத்தில் ஜார்ஜ் ஜோசப் எதிர்ப்பு தெரிவித்து பலரின் வழக்கைத் தானே முன்வந்து நடத்தி வெற்றி கண்டார். எப்போதும் தனது சட்டையில் ரோசாப்பூவை ஜார்ஜ் இடம்பெறச் செய்திருந்த நிலையில் கள்ளர் சமூக மக்கள் அவரை ரோசாப்பூதுரை என்று செல்லமாக அழைத்து வந்துள்ளனர். பின்னாளில் இவரைப் பார்த்தே ஜவஹர்லால் நேரு சட்டையில் ரோசாப்பூவைச் சேர்த்துக் கொண்டதாகவும் கூறப்படுகிறது தொழிலாளர்களின் பிரச்சினைகளில் இவர் மிகவும் அக்கறை காட்டினார். 1918ஆம் ஆண்டில் சிதறிக்கிடந்த தொழிலார்களை ஒன்றுதிரட்டி அவர்களுக்காகத் தொழிற்சங்கம் ஏற்படுத்தினார். 1919ஆம் வருஷத்தில் இராமநாதபுரத்தில் நடந்த மாநாட்டுக்கு வரவேற்புக் கமிட்டித் தலைவராக இருந்து ஜார்ஜ் ஜோசப் செயல்பட்டார். தொழிலாளர்களின் மீது அதிக அக்கறை கொண்டதால் மதுரை தொழிலாளர் சங்கத்தின் மூலம் கூலி உயர்வு, வேலை நேரக் குறைப்பு ஆகிய போராட்டங்களில் ஈடுபட்டதுடன் பல வழக்கினையும் நடத்தியுள்ளார். போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள்மீது போடப்பட்ட பொய் வழக்கினை எதிர்த்து வாதாடி வெற்றிபெற்றார். அந்நாளில், மதுரை நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையைக் காண அதிகளவில் தொழிலாளர்கள் கூடிய நிலையில் காவலர்கள் கூட்டத்தைக் கலைப்பதாகக் கூறி 2 தொழிலாளர்களைத் துப்பாக்கி சூட்டின் மூலம் கொன்றனர்.

விடுதலைப் போரில் பங்கு

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே மகாத்மா இந்திய சுதந்திரப் போரைத் தலைமை ஏற்று நடத்து முன்பாகவே ஜார்ஜ் ஜோசப் 1917இல் போராட்டத்தில் ஈடுபட்டவர். அந்தக் காலத்தில் அரசியல் போராட்டங்கள் வலிமையடையாமலும், தீவிரமான அரசியல் இயக்கங்கள் நேரடியாகச் சுதந்திரம் பெற போதுமான அளவில் நடவடிக்கைகள் எடுக்காத காலகட்டத்தில் இந்தியர்களின் பிரச்சினைகளை இங்கிலாந்தில் உள்ள பிரித்தானிய ஆட்சியாளர்களுக்கு எடுத்துச் சொல்வதற்காக இந்திய தலைவர்களைக் கொண்ட குழுவொன்று இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டது. அந்தக் குழுவில் இடம்பெற்ற மூன்று பேர் உறுப்பினர்கள் சேலம் பி.வி. நரசிம்மையர், மாஞ்சேரி ராமையா, மதுரை ஜார்ஜ் ஜோசப் ஆகியோராவர். இவர்கள் இங்கிலாந்துக்குப் பயணம் புறப்பட்டுக் கப்பலில் சென்றனர். ஆனால் இங்கிலாந்து அரசாங்கம் இவர்களது வரவை விரும்பவில்லையாதலால் தடைசெய்தது. ஜிப்ரால்டர் வரை இவர்கள் போன கப்பல் போய்ச்சேர்ந்தபோதும், இங்கிலாந்துக்குச் செல்ல முடியாமல் இவர்கள் இந்தியா திரும்ப நேர்ந்தது.[ ஜார்ஜ் மதுரையிலிருந்து கொண்டே கேரளத்தில் நடைபெற்ற பல போராட்டங்களுக்குத் தலைமையேற்று நடத்தினார். பல போராட்டங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட நிலையில் இந்திய விடுதலைப் போராட்டக்களத்திலும் இறங்கினார். பால கங்காதர திலகர் மற்றும் அன்னி பெசன்ட் ஆகியோரின் ஹோம்ரூல் இயக்கத்தில் மாணவர்கள் சேரக் கூடாது என்று ஆங்கில அரசு சட்டம் இயற்றியபோது துணிச்சலுடன் அதை எதிர்த்துப் போராடினார். அப்போது தான் சுயநிர்ணயக் கொள்கையில் இந்தியாவின் கருத்தைத் தெரிவிக்கும் ஹோம்ரூல் இயக்கத்தின் குழுவில் இடம்பெறுமளவிற்கு விடுதலைப் போராட்டத்தின் உயர்ந்த இடத்திற்குச் சென்றார்.

இந்தக் காலகட்டத்தில்தான் மகாத்மா காந்தியடிகள் இந்திய



சுதந்திரப் போரில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அவர் அறிவித்த ஒத்துழையாமை இயக்கம் மதுரை ஜார்ஜ் ஜோசப்பை பெரிதும் கவர்ந்தது. அதில் முழுவதுமாக ஈடுபடலானார். ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபடுவதற்காக, பெரும் வருவாய் ஈட்டித்தந்துகொண்டிருந்த தனது வழக்குரைஞர் தொழிலை உதறித் தள்ளினார். ஆங்கில பாணியிலான தனது உடை பழக்கத்தை மாற்றிக்கொண்டு தூய முரட்டுக் கதராடை அணையலானார். மகாத்மா அறிவித்த எல்லா போராட்டங்களிலும் ஜார்ஜ் ஜோசப்தான் முன்னணியில் இருந்தார். கேரளம், தமிழ்நாடு என இருமாநிலங்களின் போராட்டக் களத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திய நிலையில் தான், காந்தியின் நட்பும், தோழமையும் ஜார்ஜ் ஜோசப்புக்குக் கிட்டியது. 1919 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற ரௌலட் சட்ட எதிர்ப்பு பொதுக் கூட்டத்தில் தமிழில் வ. உ. சி யும், தெலுங்கில் ஹரிலோத்தமராவும் பேச, ஆங்கிலத்தில் ஜார்ஜ் ஜோசப் பேசினார். 1920 களில் கிலாபத் இயக்கத்தில் இந்தியா முழுதும் சிறுபான்மைத் தலைவர்களை ஒருங்கிணைக்கும் மிகப்பெரிய பணியைச் செய்து, மிகப்பெரிய அளவில் கூட்டத்தைத் திரட்டினார்.

மோதிலால் நேருவுடன் நெருங்கிய தொடர்பில் இருந்த ஜார்ஜ்ஜோசப் மோதிலாலின் மூத்தமகள் விஜயலட்சுமி - சையத் உசேன் காதல் விவகாரத்தில் தலையிட்டுச் சமாதானப்படுத்தும் அளவுக்கு மோதிலாலின் குடும்பத்தினருடன் நல்ல உறவில் இருந்தார்.

ஜவஹர்லால் நேருவின் தந்தை மோதிலால் நேரு அலகாபாத் நகரத்திலிருந்து "தி இண்டிபெண்டன்ட்" எனும் பெயரில் ஒரு இதழ் நடத்தினார். அதற்கு ஜார்ஜ் ஜோசப் சில காலம் ஆசிரியராக இருந்தார். அப்பொழுது அந்தப் பத்திரிகையில் வெளியான கட்டுரைகளுக்காக இவரிடம் மன்னிப்புக் கேட்குமாறு கூறப்பட்டது. தான் எழுதிய கட்டுரைக்காக மன்னிப்பு கேட்க மறுத்ததால் அலகாபாத்தில் கைதுசெய்யப்பட்டு 18 மாதம் சிறை தண்டனையையும் அனுபவித்தார். இவரது சிறை தண்டனை நைனிடால் எனும் இடத்தில் கழிந்தது. சிறையில் இவருடன் இருந்த முக்கியமான தலைவர்களில் ஜவஹர்லால் நேருவும் ஒருவர். சிறையிலிருந்து விடுதலையான பின்பு, அப்போது மகாத்மா காந்தி நடத்தி வந்த "யங் இந்தியா" எனும் பத்திரிகைக்கு இவர் ஆசிரியரானார். அந்தப் பத்திரிகை வாயிலாக இவர் எழுதிய கட்டுரைகளின் மூலம் இவர் பல தேசபக்தர்களை உருவாக்கினார். சுதந்திரக் கிளர்ச்சி படித்த மக்கள் உள்ளங்களில் எழ இவரது எழுத்துக்கள் காரணமாயிருந்தன. உலகத் தலைவர்கள் பலருடன் இவர் கடிதத் தொடர்பு வைத்திருந்தார். அவர்களில் ராம்சே மக்டனால்டு, அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்ட் ஆகியோரும் அடங்குவர்.

மேலும் தி சவுத் இந்தியன் மெயில், சத்தியார் கிரதி என்ற கையெழுத்து இதழ் , தேசபக்தன் போன்ற பல சுதந்திர போராட்ட கால இதழ்களில் ஆசிரியராகவும், உதவி ஆசிரியராகவும் இருந்தார். சீரிய புரட்சிக் கருத்துகளை மக்களிடம் கொண்டு செல்லவும் அவர் தவறவில்லை.

காங்கிரசும் ஜோசப்பும்

எந்த ஒரு கருத்தினையும் துணிச்சலுடன் தெரிவிப்பவராக இருந்ததனால் பல நேரங்களிலும் எதிர்க் கருத்து கொண்டு காங்கிரசிலிருந்து வெளியேறி மீண்டும் சேர்ந்துள்ளார். ஒரு முறை காங்கிரசுக் கட்சியிலிருந்து விலகியபோது காந்தி வருந்திக் கடிதம் எழுதியுள்ளார். ஜவஹர்லால் நேருவின் தலைமையில் காங்கிரஸ் கட்சியின் அமைப்பு நிலை மற்றும் விதிகளை உருவாக்கிட அமைக்கப்பட்ட பல குழுக்களிலும் இடம்பெற்றார். 1929ல் மதுரை நகர சபைத் தேர்தலில் ஜார்ஜ் ஜோசப் போட்டியிட்டபோது உள்ளூர் காங்கிரசுக்காரர்களே இவரைத் தோற்கடித்த வரலாறும் உண்டு.

பல்வேறு புகழுக்கும், பெருமைகளுக்கும் சொந்தக்காரரான விடுதலை வீரர் ஜார்ஜ் ஜோசப்பின், தியாகமும், வீரமும் மறைக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சியினரே இவரது வளர்ச்சியையும், உண்மையையும் விரும்பவில்லை. இதனால் ஒரு கட்டத்தில் தீவிர அரசியல் பணியில் இருந்து விலகிக் கிறித்தவத்தில் தனது கவனத்தைச் செலுத்திய நிலையில் இந்திய விடுதலையைக் காணாது 1938-ஆம் ஆண்டு மார்ச் 5 ம் தேதி சிறுநீரகக் கோளாறு காரணமாக மதுரை அமெரிக்க மிஷன் மருத்துவமனையில் காலமானார். மதுரை புது நல்லமுத்துப் பிள்ளை ரோட்டில் உள்ள கல்லறைத் தோட்டத்தில் இவரது உடல் அடக்கம் செய்யப்பட்டு இன்றும் கள்ளர் சமூக மக்களால் அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது. கக்கன் உள்துறை அமைச்சராக இருந்தபோது ரோசாப்பூதுரைக்கு மார்பளவு சிலையை யானைக்கல் பகுதியில் அமைத்துப் பெருமைப்படுத்தியுள்ளார்.

# சற்றுப் பொறுத்திருப்போம்... சரியான நேரத்தில் ‘ஜன நாயகன்’ வெளியாகும்



‘ஜன நாயகன்’ படம் இணையத்தில் வெளியானது தொடர்பாக பலரும் தங்களது கண்டனங்களையும், படக்குழுவுக்கு ஆதரவையும் தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில், ‘ஜன நாயகன்’ படத்தில் நடித்த நடிகை பூஜா ஹெக்டே அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில்,

எனது அன்பிற்குரிய ரசிகர்களே!

ஒரு திரைப்படம் என்பது, எண்ணற்ற மணிநேர உழைப்பு, படைப்பு சார்ந்த துணிச்சலான முயற்சிகள், தனிப்பட்ட தியாகங்கள் மற்றும் உங்களுக்குச் சாத்தியமான மிகச்சிறந்த அனுபவத்தை வழங்க வேண்டும் என்ற நம்பிக்கையுடன் ஒவ்வொரு நாளும் தவறாமல் களத்தில் நின்ற ஒரு குழுவின் கூட்டு முயற்சியின் விளைவாகும்.

எங்கள் திரைப்படம் இணையத்தில் கசிந்திருப்பதைப் பார்ப்பது, எனக்கு மட்டுமல்லாமல், இத்திரைப்படத்தில் பணியாற்றிய ஒவ்வொரு தனிநபருக்கும் மிகுந்த மனவேதனையை அளிக்கிறது.

இப்படம் சட்டவிரோதமாகக் கசியவிடப்படுவதையும், பகிரப்படுவதையும் பார்ப்பது மிகவும் கடினமான ஒன்றாகும். இது வசூல் சார்ந்த எண்களைக் குறித்த கவலை அல்ல; மாறாக, இத்திரைப்படத்தில் பணியாற்றிய ஒவ்வொரு கலைஞரும் தொழில்நுட்பக் கலைஞரும் தங்களுக்கு உரித்தான மரியாதையை இழக்க நேரிடுகிறதே என்பது குறித்த கவலையாகும்...

மேலும், விஜய் சாரின் கடைசிப் படத்தை, ’கடைசி முறையாக’, பெரிய திரையில், உரிய முறையில் ஒன்றாகக் கூடி நின்று கொண்டாடி ரசிக்கும் உரிமை நம் அனைவருக்கும் இல்லையா?

எனவே, நாம் இப்படத்தை உரிய முறையிலேயே காண்போம்... சற்றுப் பொறுத்திருப்போம். சரியான நேரத்தில் இப்படம் வெளியாகும்.

திரைப்படத் திருட்டுத்தனத்தை (Piracy) நாம் ஒருபோதும் ஊக்குவிக்க வேண்டாம். அதன் மூலமே சினிமாவும், கலைகளும் தொடர்ந்து உயிர்ப்புடன் நிலைத்திருக்க முடியும் என்று கூறியுள்ளார்.



சின்னத்திரையில் மிகவும் பிரபலமான முன்னணி நடிகைகளில் ஒருவர் நடிகை பார்வதி. இவர் சன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகி வரும் எதிர்நீச்சல் தொடர்கிறது சீரியலில் கதாநாயகியாக நடித்து வருகிறார்.
இவர் இன்ஸ்டாகிராமில் மிகவும் ஆக்டிவாக இருக்கும் பிரபலம் ஆவார். அவ்வப்போது தனது லேட்டஸ்ட் புகைப்படங்களை இன்ஸ்டா பக்கத்தில் பதிவிட்டு வரும் பார்வதி, தற்போது சேலையில் எடுத்துக்கொண்ட அழகிய போட்டோஷூட்டை வெளியிட்டுள்ளார்.

# ’யூத்’ படத்தின் OTT அப்டேட்



அசுரன், விடுதலை 2, வாத்தி போன்ற திரைப்படங்களில் நடிகராகவும், தனுஷிடம் உதவி இயக்குநராகவும் பணியாற்றியவர் கென் கருணாஸ். தற்போது ‘யூத்’ படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமாகியுள்ளார்.

இப்படத்தை அவரே எழுதி, இயக்கியுள்ளார். படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ளார். இதில் அனிஷ்மா அனில்குமார், சூரஜ் வெஞ்சரமூடு, தேவதர்ஷினி, பிரியன்ஷி யாதவ் போன்றோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

கல்லூரி மாணவர்களின் வாழ்க்கை, கல்லூரியின்போது ஏற்படும் காதல், நட்பு போன்றவற்றை மையமாக கொண்டு எடுக்கப்பட்ட இப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்று வசூலையும் குவித்தது.

இந்நிலையில், கடந்த மாதம் வெளியான ‘யூத்’ படம் ஓ.டி.டி.யில் வெளியாவது குறித்த அறிவிப்பு தற்போது வெளியாகி உள்ளது.

அதன்படி, ‘யூத்’ படத்தை தமிழ், இந்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளில் வருகிற 16-ந்தேதி முதல் நெட் ஃபிளிக்ஸ் ஓ.டி.டி. தளத்தில் கண்டு மகிழலாம்.



இந்த ஆண்டு தென்னிந்திய சினிமாவில் பிளாக்பஸ்டர் ஹிட்டான திரைப்படங்களில் ஒன்று Couple Friendly. இப்படத்தில் கதாநாயகியாக நடித்து ஒட்டுமொத்த இளைஞர்களின் மனதையும் கொள்ளை கொண்டுள்ளார் இளம் நடிகை மானசா வாரணாசி.
இவர் அடுத்ததாக சசிகுமாருடன் இணைந்து நடிக்கவிருப்பதாக சமீபத்தில் தகவல் வெளிவந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில், நடிகை மானசா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தன்னுடைய லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை பதிவு செய்துள்ளார்.

# "ஜனநாயகன்" படம் வெளியாவதற்கு முன் கசிந்திருப்பது தவறு இல்லை..?





ஹெச். வினோத் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவாகி உள்ள படம் ‘ஜன நாயகன்’. இப்படம் சான்றிதழ் காரணமாக வெளியாகாமல் இருந்த நிலையில் இணையத்தில் முழு படமும் வெளியாகி படக்குழு மற்றும் திரையுலகினரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. முழு படமும் இணையத்தில் வெளியானது தொடர்பாக படத்தயாரிப்பு நிறுவனம் சட்ட நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதனிடையே, ‘ஜன நாயகன்’ படம் இணையத்தில் வெளியானதற்கு பலரும் கண்டனமும், படக்குழுவுக்கு ஆதரவும் தெரிவித்து வருகின்றனர்.

அந்த வகையில், நடிகர் சூரி எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"ஜனநாயகன்” படம் வெளியாவதற்கு முன் கசிந்திருப்பது தவறு இல்லை... நேரடியான திருட்டு.

இது ஒரு படத்தை மட்டும் பாதிக்காது...

நூற்றுக்கணக்கான மனிதர்களின் உழைப்பையும் வாழ்க்கையையும் தாக்கும் செயல்.

இது சினிமா பிரச்சனை மட்டும் இல்லை...

உழைப்பை மதிக்காத மனநிலை. இதற்கு ஒரே பதில் கடுமையான நடவடிக்கை.

நாங்கள் உருவாக்குவது படம் இல்லை... நம்பிக்கை.

அதை காக்குவது பொறுப்பு இல்லை... கடமை என்று பதிவிட்டுள்ளார்.

"ஜனநாயகன்” படம் வெளியாவதற்கு முன் கசிந்திருப்பது தவறு இல்லை... நேரடியான திருட்டு.

இது ஒரு படத்தை மட்டும் பாதிக்காது... நூற்றுக்கணக்கான மனிதர்களின் உழைப்பையும் வாழ்க்கையையும் தாக்கும் செயல். இது சினிமா பிரச்சனை மட்டும் இல்லை...

உழைப்பை மதிக்காத மனநிலை. இதற்கு ஒரே பதில் கடுமையான...

# ரஜினி, தனுஷ் வீட்டிற்கு வெடிகுண்டு மிரட்டல் வெடிகுண்டு செயலிழப்பு நிபுணர்கள், காவல்துறையினர் சோதனை.



நடிகர்கள் ரஜினிகாந்த் மற்றும் தனுஷ் வீடுகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது.

சென்னை போயஸ் கார்டனில் உள்ள நடிகர்கள் ரஜினிகாந்த், தனுஷ் வீடுகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, டிஜிபி அலுவலக கட்டுப்பாட்டு அறைக்கு வந்த மின்னஞ்சலின் அடிப்படையில் வெடிகுண்டு செயலிழப்பு நிபுணர்கள், காவல்துறையினர் சோதனை நடத்தினர்.

சோதனை செய்ததில் வெடிகுண்டு மிரட்டல் புரளி என தெரியவந்த நிலையில், மிரட்டல் விடுத்த நபர் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பின்னணி பாடகி ஆஷா போஸ்லே மாரடைப்பால் மருத்துவமனையில் அனுமதி



மூத்த பின்னணிப் பாடகி ஆஷா போஸ்லே உடல்நலக்குறைவு காரணமாக தெற்கு மும்பையில் உள்ள ப்ரீச் கேண்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

92 வயதான ஆஷா போஸ்லேவுக்கு இன்று மதியம் வீட்டில் இருந்தபோது மாரடைப்பு ஏற்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதைத்தொடர்ந்து அவர் மருத்துவமனைக்கு அவசரமாகக் கொண்டு செல்லப்பட்டார்.

மருத்துவமனை வட்டாரங்களின்படி, அவர் தற்போது அவசர மருத்துவப் பிரிவில் வைக்கப்பட்டுள்ளார்.

மருத்துவர்கள் அவரது உடல்நிலையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றனர்.

மகாரஷ்டிராவின் சாங்கியில் 1933 ஆம் ஆண்டு பிறந்த ஆஷா போஸ்லே மறைந்த புகழ்பெற்ற பாடகி லதா மங்கேஷ்கரின் சகோதரி ஆவார்.

எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக ஆஷா போஸ்லே பல்வேறு மொழிகளிலும் ஆயிரக்கணக்கான பாடல்களை பாடியுள்ளார்.

2000ல் தாதாசாஹிப் பால்க்கே விருதும் 2008ல் பத்மவிபூஷனும் இரண்டு முறை தேசிய திரைப்பட விருதும் பெற்றவர் ஆஷா போஸ்லே.

தமிழில் ஹே ராம் படத்தில் வரும் 'நீ பார்த்த பார்வைக்கொரு நன்றி' உட்பட இளையராஜா இசையில் பல்வேறு பாடல்களை ஆஷா போஸ்லே பாடியுள்ளார்.



தற்போது முன்னணி நடிகையாக வளர்ந்து வருகிறார் கயாடு லோஹர். டிராகன் என்ற ஒரே ஒரு படத்தில் நடித்ததால் அவர் புகழின் உச்சிக்கே சென்ற நிலையில் தற்போது ஏராளமான படங்களில் நடித்து வருகிறார். தமிழ் மட்டுமின்றி மலையாளம் மற்றும் தெலுங்கிலும் அவருக்கு அதிகம் வாய்ப்புகள் தேடி வருகிறது.

கயாடு லோஹர் தற்போது அழகிய சேலையில் கியூட் ஆக போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் புகைப்படங்களை பாருங்க.

# திருமணம் முறிவுக்கு சினிமா காரணம் அல்ல

1980 கால கட்டங்களில் ரசிகர்களின் கனவு கன்னியாக திகழ்ந்தவர் அம்பிகா. ஒரே காலகட்டத்தில் சகோதரிகளான அம்பிகாவும் ராதாவும் முன்னணி கதாநாயகிகளாக ஜொலித்து வந்தனர்.

திருமணம் ஆன பின் இருவருக்கும் சினிமாவில் இடைவெளி ஏற்பட்டது. இந்நிலையில் அம்பிகா கணவருடன் கருத்து வேறுபாடு காரணமாக விவகாரத்து பெற்றார். இதைத்தொடர்ந்து மீண்டும் சினிமாவில் குணச்சித்திர கதாபாத்திரங்களில் நடித்து வரும் அம்பிகா சின்னத்திரை தொடர்களிலும் நடித்து வருகிறார்.

இந்நிலையில் திருமணம் முறிவு குறித்து அவர் அளித்த பேட்டியில், எந்தத் துறையில் இருந்தாலும் 2 பேருக்கும் செட் ஆகவில்லை என்றால் அது முறிந்து விடும். எவ்வளவு சம்பளம் வாங்கினாலும் பிரிய வேண்டும் என்றால் பிரிந்துதான் ஆக வேண்டும். அரசியலில் இருக்கும் 2 பேர் பிரிந்தால் அரசியல் காரணம் அல்ல. அதேபோல் சினிமாவும் காரணமில்லை. என்னை நல்லவள் என்று சொல்வதால் நான் நல்லவளாகிவிட மாட்டேன். கெட்டவள் என சொல்வதால் கெட்டவளாகிவிட மாட்டேன். வீட்டில் பிரச்சனை இருப்பவர்கள் கெட்டதை பேசுவார்கள் என்றார்.



# அடுத்த மாதம் தொடங்கும் 'புரொடக்ஷன் நம்பர் 23' படத்தின் படப்பிடிப்பு







பிரபல இயக்குநர் மணிரத்னம் 'தக்லைஃப்' படத்தை தொடர்ந்து, தனது அடுத்த படத்தை நடிகர் விஜய் சேதுபதியை வைத்து இயக்குகிறார். இப்படத்தில் விஜய் சேதுபதிக்கு ஜோடியாக சாய் பல்லவி நடிக்கிறார். விஜய் சேதுபதியுடன் முதல் முறையாக சாய் பல்லவி இணையும் இப்படத்திற்கு 'புரொடக்ஷன் நம்பர் 23' என தற்காலிகமாக பெயரிடப்பட்டுள்ளது.

லைகா புரொடக்ஷன்ஸ் மற்றும் இந்தியா டாக்கீஸ் தயாரிக்கும் இப்படத்திற்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்க உள்ளார். படத்தின் கதைகளம், நடிகர்கள் மற்றும் தொழில்நுட்பக் குழுவினர் குறித்த விவரங்கள் வெளியாகவில்லை.

இதனிடையே, 'புரொடக்ஷன் நம்பர் 23' திரைப்படத்தின் படப்பிடிப்பு மே மாதம் 14-ந்தேதி தொடங்கவுள்ளது. முன்னதாக இப்படத்திற்கான விளம்பரப் படப்பிடிப்பு (Promo shoot) இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளது.

இதனை தொடர்ந்து, வரும் நாட்களில் இப்படத்தின் அப்டேட்கள் அடுத்தடுத்து வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.



# 'துரந்தர் 2' திரைப்படத்துக்கு தடை இல்லை



பாலிவுட் சினிமாவின் முன்னணி ஹீரோவான ரன்வீர் சிங் நடிப்பில் பிரமாண்டமான பொருட்செலவில் உருவாகி வெளிவந்துள்ள திரைப்படம் துரந்தர் 2 . இத்திரைப்படம் கடந்த மாதம் 19-ந்தேதி திரையரங்குகளில் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் இத்திரைப்படத்தை தமிழக திரையரங்குகளில் நிறுத்தி வைக்க வேண்டும் என மதுரையைச் சேர்ந்த டி.ராகேஷ் என்பவர் வழக்கு தொடர்ந்து உள்ளார்.

தேர்தல் நடத்தை விதிகள் கடந்த மார்ச் 15-ந்தேதி முதல் அமலில் உள்ள நிலையில் இப்படத்தில் அரசியல் தொடர்பாக ஒரு சார்பான கருத்துகள் இருப்பதால் துரந்தர் 2 திரைப்படத்தை தமிழக திரையரங்குகளில் தற்போதைய நிலையில் திரையிட தடை விதிக்க வேண்டும் என கோரிக்கை வைத்திருந்தார்.


தேர்தலுக்கு பின் துரந்தர் 2 திரைப்படத்தை தமிழகத்தில் வெளியிட அனுமதிக்கலாம் எனவும் தெரிவித்து உள்ளார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ. தர்மதாதிகாரி, நீதிபதி அருள் முருகன் அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் சார்பில், தமிழகத்திலும் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான மத்திய அரசின் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் தேசியப் பாதுகாப்பு கொள்கைகளை இப்படம் பாராட்டும் வகையில் உள்ளதால் இத்திரைப்படம் திரையிட்டிருப்பது, நடைமுறையில் உள்ள தேர்தல் நடத்தை விதிகளுக்கு எதிரானது என்று வாதிடப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், மனுதாரர் ஆதாரமற்ற ஒரு குற்றச்சாட்டை முன் வைப்பதாகவும், திரைப்படத்தின் எந்தப் பகுதிகள் தேர்தல் நடத்தை விதிகளை மீறுகின்றன என்பதைக் குறிப்பிடவில்லை எனவும் தெரிவித்தனர். மத்திய திரைப்படச் சான்றிதழ் வாரியம் வழங்கிய சான்றிதழை மனுதாரர் எதிர்க்கவில்லை எனக்கூறி வழக்கை தள்ளு படி செய்தனர்.

படங்கள், வெப் சீரிஸ், ஆல்பம் பாடல்கள் என பலவற்றில் தோன்றி ரசிகர்களை அதிகம் கவர்ந்து வருபவர் சம்யுக்தா விஸ்வநாதன். அவரது நடனத்திற்கு அதிகம் ரசிகர்கள் இருக்கிறார்கள்.

இன்ஸ்டாவில் அவரை 5.5 லட்சம் ரசிகர்கள் பின்தொடர்ந்து வருவாது குறிப்பிடத்தக்கது. தற்போது சம்யுக்தா செம ஹாட் ஆன உடையில் கவர்ச்சி போஸ் கொடுத்து போட்டோஷூட் எடுத்து இருக்கிறார். அந்த புகைப்படங்கள் தற்போது ரசிகர்களை கவர்ந்து இணையத்தில் வைரல் ஆகி இருக்கிறது.

# ஏப்ரல் 24-ந்தேதி ரீ-ரிலீஸ் ஆகும் 'ரன்'



தமிழில் வெளியாகி வெற்றி பெற்ற முன்னணி நடிகர்களின் படங்களை டிஜிட்டலில் புதுப்பித்து மீண்டும் ரிலீஸ் செய்து வருகிறார்கள். ஏற்கனவே ரஜினியின் 'பாட்ஷா', 'பாபா', கமல்ஹாசனின் 'வேட்டையாடு விளையாடு', 'ஆளவந்தான்', விஜயகாந்தின் 'கேப்டன் பிரபாகரன்', விஜயின் 'சச்சின்', சூர்யாவின் 'வாரணம் ஆயிரம்', தனுசின் 'யாரடி நீ மோகினி' உள்ளிட்ட பல படங்கள் மீண்டும் திரையிடப்பட்டன.

அந்த வரிசையில், மாதவன் நடிப்பில் வெளியாகி ரசிகர்களின் வரவேற்பை பெற்ற 'ரன்' திரைப்படம் மீண்டும் வெளியாக உள்ளது.

கடந்த 2002-ம் ஆண்டில் லிங்குசாமி இயக்கத்தில் மாதவன், மீரா ஜாஸ்மின் இணைந்து நடித்து வெளியான படம் 'ரன்'. காதல், ஆக்ஷனில் உருவான இத்திரைப்படம் மிகப்பெரிய வெற்றியை பெற்றது. இப்படத்தில் வித்யாசாகர் இசையில் உருவான பாடல்களும் ஹிட் ஆனது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், 23 ஆண்டுகளுக்கு பிறகு 'ரன்' திரைப்படம் புத்தம் புது பொலிவுடன் தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகாவில் விரைவில் வெளியாகும் என இயக்குனர் லிங்குசாமி தெரிவித்து இருந்தார். அதன்படி, 'ரன்' திரைப்படம் கோடை விடுமுறையையொட்டி வருகிற 24-ந்தேதி வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.






## மகிழ்வு என்பது யாதெனில்

விழிகள் கண்டு
இதயம் உணர்ந்து
இதழில் வெளியாகும்

சுற்றம் சூழலும்
நட்பின் கூடலும்
நல்லதொரு மகிழ்வாகும்

இணையரின் புரிதலில்
இன்பம் தோன்றி
மகிழ்வெனும் கடலில்
வெண்முத்தாய் நனி நல்கும்


மனதின் நினைவுகள்
மண்ணில் செயலானால்
மகிழ்வுகள் மனம் நிறைக்கும்

தித்திக்கும் தீந்தமிழ்
எத்திக்கும் புகழ் கொண்டால்
மொழியின் புகழால்
சிந்தை நிறைந்து சீராகும்
மனதில் மகிழ்வு
பொங்கி வரும்

இடர் வரும் நேரம் துயர்
போக்கும் நிவாரணியாய்
நீளும் கைகளில் மகிழ்வு
தெரியும்

சோம்பல் விடுத்து
குறிக்கோள் எடுத்து
கொள்கையின் போராட்டத்தில்
மகிழ்வு புரியும்

பொன்னும் பொருளும்



மகிழ்வில்லை
பூக்கும்
புன்னகையில்
உதிர்க்கும்
சொற்களில்
கொடுக்கும்
கரங்களில்
மகிழ்வின் மீட்சி
மனதில் உறவாடும்.

**தமிழ்நிலா**

---



என் மனசு எட்டும்
தூரத்தில்தான்
நீ இருக்கிறாய்.

உனக்கான இருக்கை
காலியாகவே இருக்கிறது
நீ வராத போது.

ஒரு சொல் ஒரு பார்வை
ஒரு ஸ்பரிசம்
போதுமென்று



தோன்றுகிறது
உன்னைப்
பார்க்குமுன்..
போதாமல்
போகிறது
பார்த்ததும்.

**ரிஷபன்**

---

## பலி !

தீனியும், தண்ணீரும்
கொடுத்து வளர்த்தும்
ஆட்டிற்கு தெரியாது...
தன்னை பலியிட தான்
வளர்த்தப்படுகிறோம் என்று.

காதலை எதிர்க்கும்
பெற்றோர்கள் தன்
மகளுக்கு அவசரமாய் வேறு
திருமணம் செய்து வைப்பது
போல.... !

**எம்.பி.தினேஷ்** , கோவை

---



## தருமமும், நாடும்

"தருமத்தின் வாழ்வுதனைச்
சூது கவ்வும் தருமம் மறுபடி
வெல்லுமெனு மியற்கை
மருமத்தை நம்மாலே உலகங்
கற்கும்" வாடா தீரெனச்
சொன்னான் பாரதியும்;
அருச்சுனனோ இங்கில்லை!
கண்ண னில்லை!
காண்டீபம் அதுவெங்கே
தெரிய வில்லை.
பொறுமையினை நாம்புனித
மென்றே கொண்டே
பொய்களிலே நம்நாட்டைக்
கெடுத்தோ மய்யா!

இதுவாநம் இயற்கையெனக்
கேட்டுப் பார்ப்போம்
எதிர்காலம் அடமானம்
ஆகிப் போச்சோ? புதியபல
கொள்கைகளும் திறனும்
ஆய்வும் பொங்காதோ
நம்நடுவில் பிரளயம் போலே!
எதுவும்நாம் துணிந்திடுவோ
மென்ற வீரம் இனிமேனம்
மந்திரமாம் துணிவே
தெய்வம் புதியதொரு



சமுதாயம்
நம்முன்
நாட்டிப்
போற்றிடுவோம்
நம்மக்கள்
திறமை
தன்னை.

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை

---

## வாக்குறுதி

பசித்தவருக்கு அமு தூட்டும்
காமதேனு போல் எனக்கு
எந்த நேரமும் காதலூட்டும்
தே வ தை நீ! தேர்தல் நேர
வாக்குறுதி போலல்லாமல்
எனக்காக நீ சொன்னதை
மட்டுமல்லாமல்
சொல்லாததையும் செய்யும்
இல்லத்திற்குள் நுழைந்த
காமதேனு நீ!
பார்த்துக்
கொண்டேயிருக்க லாம்
உன் அழகை!
பேசிக் கொண்டேயிருக்கலாம்
உன்னுடன்!
ரசித்துக்கொண்டேயிருக்கலாம்
நீ பாடுவதை!
கா த லி த் து க்
கொ ண் டே யி ரு க் க லா ம்
உன்னை!
இப்படியெல்லாம் எழுதிக்
கொண்டேயிருக்கலாம்
உன்னைப் பற்றி!
எனக்கான நேரம்
இனி மேல் ஒவ்வொரு
நொடியும் உன்னுடன்
உனக்காக மட்டுமே!

## வேட்பாளர்

நான் வாக்காளிக்க விரும்பும்
ஒரே வேட்பாளர் நீ மட்டும்
தான் என் அழகிய பேரன்பே!
நீ சொல்வதை மட்டுமல்ல
சொல்லாததையும் கூட
எனக்காக நிறைவேற்றும்
கா த ல் த லை வி நீ!
வாழ்நாள் முழுவதும் நான்
வாக்களிக்க விரும்பும்
வேட்பாளர் உன்னைத்தவிர
வேறு எவரேனும் உளரோ
என்ன?! உன்னைப் போல்
தங்க மங்கைகள்
எங்குமிருப்பதால்தான்
கார்மேகங்கள் புவனத்தைத்
தவறாமல் ஈரமாக்குகின்றன!
இன்னா நாற்பதை ஒரு சில
பெண்கள் கடைபிடித்தாலும்
இனியவை நாற்பதை
வாழ்க்கை முழுவதும் பரவச்
செய்வது உன்னைப்போன்ற
தேவதைகள் தான்!
நீ என்னுடன் இருக்கும்
வரையில் நம் கா த லா ட் சி
மிக அழகாக(வே) நகரும்!

## சின்னம்

அத்தை மகள் ரத்தினமாக
இருந்தாலும் (கூட)
மு த் த த் தி ற் கு



அனுமதிக்காத குலேபகாவலி
ஸ்டைல் ராஜகுமாரி நீ!
எத்தனையோ மாதர்களைச்
சந்தித்திருந்தாலும் என்
மதுவான மாது நான்
உன்னைப்பார்க்கும் போது
மட்டுமே கவிதை நழுவி நம்
காதலில் விழுகிறது!
நம் கா த லு க் கெ ன் று
ஒரு சின்னத்தை நியமிக்க
விரும்பினால் எனக்காக உன்
அன்பான அம்பு விழிகளையே
சின்னமாக நியமித்து விடு!
உன்னைப்பற்றி எழுதினால்
மட்டுமே என் கவிதைகள்
ரசிக்கத்தக்க வகையில்
அழகாக இருக்கிறது!
என் வேண்டுதல்களை
மட்டுமே நிறைவேற்றப் பிறந்த
கா த ல் தே வி நீ!
எனக்கு உன்னிடமிருந்து
வரம் வேண்டாம்!
வரமாக நீயே வா
என் பேரன்பே!

## கொடி

காதலாக இருந்தாலும்
கவிதையாக இருந்தாலும்
மிகச் சரியாகக்
கொள்கையைக்கடைப்பிடிக்கும்
மங்கையர் திலகம் நீ!
நம் கட்சிக் கொடி
பறப்பதற்கென்றே
அதைக் காதலா(க)ல்
நீயே நெய்திருக்கிறாய்!
நீ ஆசையாக
அசைப்பதால் தான்
நம் காதல் கொடி நாள்
முழுவதும் பறந்து
கொண்டேயிருக்கிறது!
கற்பகத் தரு போல
நம் காதல் கொடி
நாம் நினைத்ததை யெல்லாம்
நிறைவேற்றி நம் காதலை
வசந்தமாக்குகிறது!
அழகிய கனவுகளையும்
ஆனந்தக் கற்பனைகளையும்
கொண்டே எப்பொழுதும்
வெற்றி நடை போடுகிறது
இந்தக் காதல்!
இந்த அன்பில் நாம் இருவர்
மட்டுமே பயணியர்!

## தேர்தல்

குன்னக்குடி
வைத்தியநாதனின்
வயலினிசை போல் உன்
அழகான முத்தங்களை
என் அதரங்களில்
இசைப்பவள் நீ!
நீயோ அல்லது நானோ
தேர்தலில் போட்டியிட்டால்
நமக்கு இதயம் சின்னத்தைத்
தானே கேட்போம்!
நம் இருவருக்கும்
தனித்தனியாக இதயங்கள்
இருந்தாலும் நம் காதல் ஒன்று
தானே! உன்னை நினைக்கும்
போது மட்டும் என்
இதயத்திலிருந்து வெளியே
மழையாகப் பொழிகின்ற
இந்த அழகிய அழகான
உணர்வுகளும்
உணர்ச்சிகளும்!
எனக்கு ஓர் அனுமதி
வழங்கி விடு என் இனிய
உயிர்க்காதல் அன்பே!



மாதா பிதா குருவிற்குப்
பிறகு நான்
எப்பொழுது(ம்)மே
உன்னை வணங்க
வேண்டும்!

**முத்து ஆனந்த்**
வேலூர்

---



## கூட்டுக் குடும்பமே மேல்!

நேரிசை வெண்பா!

ஒற்றுமை நல்ல
ஒழுங்குடன் எப்போதும்
பற்றுடன் அன்பேதான்
பாங்காக..உற்றவகை
ஈட்டும் ஒருங்கை
இனிமையாய் வாழ்ந்திட
கூட்டுக் குடும்பமே மேல்!

குருதி உறவுகள்
கூடவே வாழ்ந்தால்
அருமைக் குடும்பம்
அழகாய்ப்..பெருமையைக்
காட்டுமே கண்ணாக
எஞ்ஞான்றும் பாரினில்
கூட்டுக் குடும்பமே
மேல்!

## உடன்பிறப்பைக் கொண்டாடு!

நேரிசை வெண்பா!

நன்றியை அன்பை
நலமுடன் காணவே
பொன்றாப் பொலிவாய்
உடன்பிறப்பாய்..ஒன்றிய
நாளையே கொண்டாடி
நாமும் மகிழ்வமே
ஆளுமை யோடே அழகு!

பிணைப்பை வலுப்படுத்த
பீடுநடை போட்டு
மணக்கும் உறவையே
மாண்பாய்..இணக்கமுடன்
கொண்டாடி எந்நாளும்




கூர்ந்தே
மகிழ்வமே
பண்போடு
பாசமும்
சேர்த்து!

**முனைவர் இராம. வேதநாயகம்**
திருவண்ணாமலை.

---

# நூல் விமர்சனம்

தாய்மொழி தமிழே !
தொகுப்பு ஆசிரியர் : மருத்துவ கலாநிதி முனைவர் வே.த. யோகநாதன் !
அலைபேசி : 94431 64467
நூல் விமர்சனம்
கவிஞர் இரா .இரவி !
வெளியீடு : அனைத்துலகத்தமிழ்மன்றம், செட்டியப்பட்டி பிரிவு, சின்னாளப்பட்டி, திண்டுக்கல் மாவட்டம், விலை : ரூ. 75.




வலி மிகுந்த புலம் பெயர்ந்த வாழ்க்கையிலும் ஈழத்தமிழர்கள் தமிழுக்காக தங்களால் முடிந்த பங்களிப்பை இன்முகத்துடன் செய்து வருகிறார்கள். ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்து திருச்சியில் வாழ்ந்து வரும் மருத்துவ கலாநிதி முனைவர் வே.த. யோகநாதன் அவர்கள், "தாய்மொழி தமிழே" என்ற தலைப்பில் 49 கவிஞர்களிடமிருந்து கவிதைகள் பெற்று தொகுத்து தனது கவிதையும் சேர்த்து அழகிய நூலாக வெளியிட்டு உள்ளார்கள். மொத்தம் 50 கவிதைகள் உள்ளன. "தாய்மொழியைப் பற்றி சிந்திக்கும் உணர்வை ஊட்டுவதற்காக உருவாக்கப்பட்டதே இத்தொகுப்பு"நூலின் நோக்கத்தை எழுதி உள்ளார். கும்பம் கூ (பெப்ரவரி21) உலக தாய்மொழி தினத்தை முன்னிட்டு வெளியிட்டு உள்ளார்கள். பாராட்டுக்கள். சில தொகுப்பாசிரியர்கள் தனது கவிதையை முதலில் பிரசுரம் செய்வார்கள். ஆனால் இவர் எனது கவிதையை முதலில் பிரசுரம் செய்து அவரது கவிதையை இறுதியாக பிரசுரம் செய்துள்ளார்.இது அவருடைய பொதுநல நோக்கை பறைசாற்றுவதாக உள்ளது" பாராட்டுக்கள். தமிழன்னைக்கு அணி சேர்க்கும் விதமாக வந்துள்ளது. மிக நன்று. உலக உருண்டையின் மீது உலகின் முதல் மொழியான தமிழின் தாய் தமிழ்த் தாய் அமர்ந்து இருப்பது போன்ற அட்டைப்படம் மிக நன்று. உலக வரைபடமும் கீழே உள்ளது. பின் அட்டையில் நூலின் நோக்கத்தை எழுதி உள்ளார். நூலின் இறுதி பக்கத்தில் 37 கவிஞர்களின் புகைப்படமும் உள்ளது. அடுத்த பதிப்பில் கவிஞர்களின் அலைபேசி என்னையும் பிரசுரம் செய்தால் நன்றாக இருக்கும். இந்நூலில் பங்குப்பெற்றுள்ள கவிஞர்கள் அனைவருமே தொடர்ந்து இயங்கி வரும் படைப்பாளிகள். எனவே ஒரு சில கவிதையை மட்டுமே மேற்கோள் காட்டினால் மற்றவர்கள் வருந்தக்கூடும். எனவே எல்லாக் கவிஞர்களின் இரண்டு வரிகள் மட்டும் மேற்கோள் காட்டி உள்ளேன்.

1.கவிஞர் இரா இரவி ஈடு இணையற்ற இனிமையின் சிகரம் தமிழே! எண்ணிலடங்கா சொற்களின் சுரங்கம் தமிழே!

2. செந்தமிழ் வாணி கவிஞர் ச. மல்லிகா, கோவை. இன்றும் என்றும் அமுத மொழி! அழிவு இல்லா வாழும் மொழி!

3. கவிஞர் வெற்றிப் பேரொளி திருக்குவளை கலைகளில் வாழும் உயிராற்றல் இன்று வலைத்தளம் ஆளும் பேராற்றல் - செம்மொழிப் பேராற்றல்.

4. கவிஞர் திருமதி சாந்தி யோகா, திருச்சி. டும் டும் மென பொங்கு தமிழர் விழிக்கட்டும் எம் தமிழ்ப் பண்பினை உலகம் அறியட்டும்.

5.கவிஞர் காசி, அருப்புக் கோட்டை. ஆதி காலந் தொட்டே வடிவிலும் ஒளியிலும் மேன்மை ஏற்றது தமிழே!

6.கவிஞர் த.அனந்தராமன்,துறையூர். காலமெல்லாம் உன்னை சுவாசித்ததால் தமிழே புகழுடம்பு அழியவில்லை!

7. ஒலிச்சித்தர் அரிமா சை. பிச்சை மொஹிதீன், பீமநகர். தந்தத்திற்கு இணையாகும் அதன் மதிப்பு - அது தந்ததற்கு நாம் என்ன செய்தோம்? அதற்கு.

8. கவிஞர் த. கருணைச் சாமி, தேனி மொழி வாழ்ந்தால் எந்த இனமும் இனிதே அழியாமல் வேரூன்றி நிற்கும் செழித்த பலா.

9. கவித் தென்றல் பூவை. பெ.து. ராதா, சென்னை. அன்னைத்தமிழே ஆருயிர் மருந்து! அகிலமே போற்றும் சுவை விருந்து!

10. கவிஞர் ச. சேகர், மே.க. கோட்டை. ஓராயிரம் மொழிகள் உலகினில் இருந்திட்டாலும் ஒப்பில்லா மொழி நம் தமிழ் மொழி

11. கவிஞர் சையத் முகமது, கிருஷ்ணகிரி. பெற்றவளாய் வளர்த்தாய் தமிழே! கற்றவனை ஆக்கும் தமிழே!

12. முனைவர் மரிய தெரசா, சென்னை. தொன்றுதொட்டு மிளிர்ந்திட்ட தமிழும் இன்று! தொலைந்திடுமோ என்கிற அச்சம் நெஞ்சில்

13. முனைவர் பட்ட ஆய்வாளர் சு. சித்ரா புலியூர் நாகரிகம் என்ற பெயரில் நாடிதுடிப்பினை இழந்து வாடும் கூட்டத்தில்

14. கவிஞர் மு. இராம பாண்டியன், மதுரை. கடையில் தமிழில்லை உடையில் தமிழில்லை மடையனாய் வாழ்ந்து மாந்தமிழை உடைக்கிறாய்

15. கவிஞர் முனைவர் ந. கிருட்டினமூர்த்தி, காரைக்கால். இயற்கை, வானம் நிலவுப் பெண்ணின் பஞ்சு மெத்தைப் படுக்கையறை.

16. கவிஞர் ஈழபாரதி, புலிவலம் எலும்புக் கூடுகளோடும் பிணக்குவியலோடும் நீதி கேட்டு நிற்கிறோம் கண்களைக் கட்டிக்கொண்டு வேடிக்கை பார்த்த சர்வதேசமே கண்களைத் திறந்து பார்.

17. கவிஞர் காற்று (எ) கலைவாணி கிருட்டிணன்,கோவை பல மொழிகள் பரந்து வரும் உலகில் - ஆதிப் பழங்குடியின் முதல் மொழியாய்த் தேறி

18. கவிஞர் ம. பாவலன், புதுச்சேரி. சாதிமத பிரிவற்றச் சமத்துவத் தமிழே! சாகாத வரம்பெற்ற சரியான தமிழே!

19. மருத்துவர் கவிஞர் ஜெ. ஜெயந்தி, கடலூர். திகைப்பூட்ட வைக்கும் திருக்குறளை திருவள்ளுவர் தந்திட உதவிய தமிழே!

20. பாவலர் சீனி. சுந்தரமூர்த்தி , ஆவடி, சென்னை. வாழ்க்கைக்கு வழி கட்டும் புறநானூறாய் வளம்கொழிக்க அகம் மகிழ அகநானூறாய்

21. கவிஞர் க. கிருஷ்ணன், கழுகுமலை. வா வெண்ணிலா ஆயிரம் கவிஞர்கள் பண்ணுடன் பாட இளமைக் காதலர் புத்துணர்ச்சி பெற்றிட

22. கவிஞர் நா. பொன்னுச்சாமி, புதுச்சேரி வள்ளுவர் வகுத்திட்ட மான்புகொள் நல்வழியில் உள்ளத்தைப் பதித்தே உயர்ந்தோங்கி நாம் வாழ்ந்தால்

23. கவிஞர் அ.ம.ம. சண்முகலிங்கம், நீலகிரி. அகரத்தில் உயிர்த்த ஆதிமொழித் தமிழே! அகிலத்தின் மூத்தக்குடி நீ தானே தாயே!

24. முல்லைக் கவிஞர் இராதா கண்ண(தாச)ன், கோவை. காட்டு வெள்ளம் தடுப்பதற்கு அணையா? கழனி நெல்லை அளப்பதற்கு முறமா?

25. கவிஞர் குமுதா ஆறுமுகம், மதுரை. தமிழ்த்தாயே! நீ வெல்வாய் இனியது கண்கூடு ஆட்சி செய் நீயே! இவ்வுலகம் என்றும் உன் வீடு.

26. வள்ளுவர் அடிப் பொடி முனைவர் வி. ஆனந்தகுமார், திருப்பூர். செந்தமிழை தினம் படித்தால் சிந்தனயில் பூ மலரும் தமிழே!

27. கவிமாமணி தகடூர்த் தமிழ்க்கதிர், தருமபுரி. தாய்மொழி ஏற்கும் கீழ்மை கண்டிடக் கூசும் நெஞ்சம்.

28. கவிதாயினி மணி அர்ஜுனன், நீலகிரி வாழ - நல்வழி காட்டும் தெவிட்டாத தேன்மொழியே போற்றி! வாழ்வின் ஒளியே! வாட்டமுறாத் தமிழே! போற்றி! போற்றி!

29. கவிஞர் தடாகம் காசு. குணசேகரன் பாரதி! எட்டயபுரத்து எரிமலை அவர் ஏழ்மையில் வாழ்ந்த பனிமலை.

30. கவிஞர் இரா. முத்தழகன், ஆரணி. தலை தந்த வள்ளல் குமணனைக் குவலயம் போற்றுவோம் போற்றுவோம் நாளும் நற்றமிழையே !

31. கவிஞர் ஔவை இரா. நிர்மலா, காரைக்கால் பெண்கள் தாலியை எரிவதை மறந்து ஆணும் தாலி அணிந்திடச் செய்வோம்!

32. மருத்துவர் கவிஞர் அருணா, மதுரை. ஆன்றோர் வாக்கினிலே அசீர்வதிக்கப்பட்டாயே ! அப்துல் கலாம் வார்த்தைகளில் செதுக்கப்பட்டாய்.

33. கவிஞர் அருமன் பாரதி, கரூர் மதிப்பால் குதித்த குழந்தை நிமிர்ந்து பார்க்கையில் அப்போது அடிப்பது அதற்கு அம்மாவின் வாடையல்ல. வாசனை.

34. கவிஞர் சு. பாரதி பாக்கியம், தேனி முடக்கிப் போட்டான் நின்னை முகமூடியாய் வந்த ஆங்கிலத்தால்

35. கவிஞர் கருவை வேணு, கரூர் பாதகச் செயல் செய்துவிட்டு பார்க்காதது போல் இருப்பவர்களா.

36. கவிஞர் எஸ். சுப்பையா, தஞ்சாவூர். முப்பால் குடித்து வளர்ந்து மூவேந்தர் வழி நடந்து மூப்பால் சற்று தளர்ந்து முகநூல் கண்ட தமிழே!

37. கவிஞர் கே.ஆர். மூர்த்தி, கண்டியூர். என்னை எனக்குள் அறிய வைத்து என் நெஞ்சமெல்லாம் நீயாக வாழ்ந்து விட்டு

38. புலவர் ஜெ. சண்முகம், சீர்காழி மொழி வளரச் சிலை மட்டும் போத தென்பேன்! மழலையர்க்கு முதற்கல்வி தமிழே வேண்டும்.

39. கவிஞர். நா. சக்தி மைந்தன், நன்னிலம் ஆள்வேன் இந்த உலகை அன்னை அவள் மீதாணை - அடடா மாளவில்லை அவள் மாண்பு மகிமை அதை சொல்ல.

40. கவிஞர் தா.பி. சுந்தர், விளாங்குடி, மதுரை. செம்மொழிக் கீடாகா மொழிகளை செவி மடுத்தாலும் இனிமை பிறக்காது.

41. கவிஞர். இரா. இரவிச்சந்திரன், சென்னை. மாசறுபொன்னே வலம்புரி முத்தே! என சொன்னது சிலப்பதிகாரம்!

42. கவிஞர் செ. வெங்கடேசன், புதுச்சேரி சாமி பெயரால் நடக்கும் சங்கதிகள் மறையட்டும் சங்கடங்கள் தீர்ந்து சமத்துவம் பொங்கட்டும்.

43. கவிஞர் சிவராசா. செல்வகுமார், தஞ்சாவூர். பிரபஞ்சம் உள்ள வரை நீ...! நீ உள்ளவரை நாங்கள்.

44. கவிஞர் மு. சடகோபன், சேரன்மாதேவி உலகமெங்கும்! உலகத்தமிழனின் தாய்மொழியால் ஊக்கம் தரும்! ஆக்க செயல்களின் உயிராய்!

45. கவிஞர் இரா. கிரிஜா சுந்தர், திருவனந்தபுரம் தமிழ் என்றால் அமுது என்றறிவோம்! தமிழ் என்றால் நம் உயிர் என்றுணர்வோம்.

46. கவிஞர் மு. வடிவேல், பழனி கள்ளமில்லாத் தாய்மொழி தமிழை! எல்லாத் திசையிலும் எழுதி வைப்போம்!

47. கவிஞர் பழனிவேல் சேலம் கிளி மொழியே என் தமிழ் மொழியே! உன் வாய் மொழியே இனிக்குதடி

48. கவிஞர் கி. வசந்தா காஞ்சிபுரம் பொதிகையின் தென்றலானது தமிழ்! கவிதையில் மின்னலானது தமிழ்!

49. கவிஞர் நீலமலை ஜே. பி. உதகைமலை தமிழனே நீ பெற்றிருக்கிறாய் தலை நிமிரு உனக்குண்டு வரலாறு இனி உனக்குள் வர வேண்டாம் ஒற்றுமையின்றி தகராறு.

50. கவிஞர் ஆ.ச. செல்வராசு, தேவனூர் தனிமனிதனுக்குத் தேவை தன்மானம் வெகுமானம் தந்திடுமே வரு(ம்) மானம்

51. இந்த நூலின் தொகுப்பாசிரியர் கவிதை, தமிழன்னை மைந்தன் வே.த. யோகநாதன் வேணும் தமிழா தாயக வேட்கையின் வெற்றியதைக் காணும் நாள் வரத்தோள் கொடுக்க தமிழர்களை மாற்றிடம்மா? பெரும்பாலான கவிஞர்கள் தாய்மொழி தமிழே என்ற பொது தலைப்பிலேயே எழுதி உள்ளனர். ஒரு சிலர் மட்டுமே வேறு தலைப்பில் எழுதி உள்ளனர். கவிஞர் அருமன் பாரதி எழுதிய ஒரே கவிதை இரண்டு முறை வந்துள்ளது. அடுத்தப் பதிப்பில் தவிர்த்திடுங்கள். முயற்சிக்குப் பாராட்டுக்கள்.






## புதுயுகம் படைப்போம்

எத்தனை முறை அழித்தாலும்
புதிய பரிணாமத்தோடு
வாழை மரம்,,,

தலையை சீவி தரையில்
வீழ்த்தினாலும்
சிரித்துக்கொண்டே பூக்கள்,,,

சுட்டாலும்
வெண்மைதரும் சங்கு,,,,

நீரில் கரைத்தாலும்
நெருப்பில் எரித்தாலும்
கருக்காமல் தங்கம்,,

நீ மட்டும் ஏன் தோழா?
சின்ன சோதனைக்கும்
சுனங்கிப்போகிறாய்,,,!

ஏற்றமும்,,,இறக்கமும்
வருவதும்,,போவதும்
வாழ்வில் வாடிக்கைதானே,,,
புறப்படு தோழா
புதுயுகம் படைப்போம்,,

## தமிழ் வாழ்க

தமிழுக்கு
தனியிடம் வேண்டும்
தரணியில் என்றும்– ஆனால்
பழையப் பேப்பர்காரன்கூட

ஆங்கிலப்
பேப்பருக்குதானே
அதிக விலை
தருகிறான்,,,?!

நாகை
ஆசைத்தம்பி
கோவை

---

1. எதற்கு என்னுடன்
வருகிறாய் என்று நிழலை
கேட்டேன்என்னைத் தவிர
உன்னுடன் கடைசி வரை
யாரும் வரப்போவதில்லை
என்று சொன்னது நிழல்

2. படித்தவன் படிப்பால்
உயர்வான் படிக்காதவன்
படிப்படியாக உயர்வான்
உழைத்தால் உயர்வு நிச்சயம்

3. உன்னிடம் இருப்பு
உள்ளவரை மட்டுமே
உங்க வீட்டு வாசலில்
உறவினர்களின் செருப்பு
கிடக்கும்

4. புருஷன் பேசும் போது
பொண்டாட்டி குறுக்கே
பேசாமல் இருந்த காலம்
எல்லாம் விசு காலத்தோட
முடிஞ்சு போச்சு

5. விட்டுப்போன வந்து
பிஞ்சு போன செருப்பு மாதிரி
அதை தச்சுபோட்டாலும்
பிச்சுக்கிட்டு தான் போகும்

--------------------

1. சொந்தக்காரங்க ஊசி
மாதிரி கோர்த்து விடுவாங்க
குத்தியும் காட்டுவாங்க

2. ஒரே நேரத்தில் 9
ரியாக்ஷன் கொடுப்பது
பெண்கள் குணம்
ஒன்பதிலும் ஒன்று மேல்
புரியாமல் முழிப்பது
ஆண்களின் குணம்

3. யாரோ ஒருவரின்
நிராகரிப்புக்காக
கவலைப்படாதே
துணிக்கடையில் பல பேரால்
ஒதுக்கப்பட்ட துணியும்
யாரோ ஒருவருக்கு பிடிக்கும்

4 சொந்தக்காரனும் சரி
பிச்சைக்காரனும் சரி
நம்மிடம் காசு இல்லை
என்றால் மதிக்க மாட்டார்கள்

5. கர்வம் தலைக்கேறிய
அறிவாளியாக இருப்பதை
விட அன்பான முட்டாளாக
இருப்பதே மேல்

நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி



## ஒண்மை ஓமியோபதி மருத்துவம்!

நேரிசை வெண்பா!
ஒத்ததை ஒத்ததே
ஒண்மைக் குணப்படுத்தும்
வித்தகக் கொள்கையே
வீறுடன்..சத்தெனக்
காணுமே ஓமியோவில்
கற்கண்டாய் முக்காலும்
பேணுமே நல்லுடலைப்
பேண்!

இரண்டாம் பெரிய
இன்மருத்துவம்தான்
அரிதான ஓமியோஅன்பாய்..
விரைந்திடநோய்போக்கும்
நன்மையேகாணுமே
நொந்தவர்க்குப்பாய்போக்கும்
பண்பாகத் தான்!

முனைவர்
இராம.வேதநாயகம்
திருவண்ணாமலை.

---

## வாழ்க்கை

காலத்திடமிருந்து
பேனாவை வாங்கி
துன்பம் விதியை
எழுதியபோது இன்பம்

விடுமுறையில்
சென்றிருந்தது.
காத்திருப்போம்
அதன்
வருகைக்கு.

கே. பி.
ஜனார்த்தனன்

---



என்னை இழுக்கும்
அந்த தூண்டிலுக்கு
கண்களென்று
யார் பெயரிட்டது?!

நமது தனியறையில்
வந்த பிறகு அறைக்குள்
நிலவை பார்க்க
வேண்டுமென்றாய்
எதுவும் யோசிக்காமல்
உன்னையே காட்டினேன்!

உன் சாரை பாம்பு
பார்வையில்
விஷமில்லையென்றாலும்
உள்ளுக்குள் ஏறுகிறது
காதல்!

அப்படியெல்லாம்
இரக்கமில்லாமல்
ஒரேயடியாய் பார்க்காதே
உருகி போகிறேன்
இரவில் வரும்
குல்பி ஐஸ்ஸாய்!


வாயில்லா ஜீவனாக
இருந்ததால் என்னவோ
உன் செல்லங்கள் பெற்றும்
உள்ளுக்குள் இருக்கும்
காதலை சொல்லாமல்
இருக்கிறது!

பாவக்கணக்கை
என் மீதே எழுதிக்
கொள்கிறேன் தயவு செய்து
என்னை உன் இதயக்கூட்டில்
கைதியாய் அடைத்து விடு!

கோயிலுக்கு நீயும் கூட
வந்ததால் கடவுள் எதுவென
மறந்து போனேன்!


ஒரு கவிதையே
கவிதை
எழுதுவதை
இங்கே தான்
காண்கிறேன்!

லி.நௌஷாத்
கான்



## பூ.. விட்டப் பாப்பாவும்.. சேத்தி விட்ட செல்லப்பாவும்.!

காக்காக் கடி கடிச்சக்
கொடுத்தக் காலத்திலே
பள்ளிக்கூட சினேகிதியை
மறக்க முடியலே.!

கிட்டிப்புள்ளு ஆடிவந்த
காலத்திலே.. கட்டப்பய
நட்பை என்னால் மறக்க
முடியலே.!

கோலிக்குண்டு பம்பரத்தை
ஆடும் மரத்தடியிலே..
ஊஞ்சல் கட்டி ஆடியதை
மறக்க முடியலே.!

கெலிஞ்சிப்பழம்.. நவ்வாப்
பழம் பறிக்கும் வயதிலே..
கண்மாயிலே போட்ட ஆட்டம்
இன்னும் மறக்கலே..!

தேருமுட்டி குள்ளிருந்து
பீடி குடிச்சதை.. ஊருவுட்டு
வந்தப் பின்பும் மறக்க
முடியலே!

இராத்திரியில் கூத்துப்
பார்க்க வாடகை
சைக்கிள்.. கூத்துப்பார்க்க
போனயிடத்தில் கொத்து
புரோட்டா..

டூரிங்கு டாக்கீசில்
மதுரைவீரனாய்.. மாறியதை
என்னாலே மறக்க முடியலே.!

பூ. விட்டு சேத்தி சொன்ன
அந்த பருவத்தை..
கண்ணாடி போட்டப் போதும்
பார்க்க முடியலே..!

அவரவர்கள் எங்கெங்கோ
பிரிந்து சென்றோமே..
ஒன்றாய் சேர்ந்து வாழ்ந்த
காலத்தை மறந்து
போகுமோ?

அம்மா அப்பா. அண்ணன்
தம்பியை.. அக்காத் தங்கை..
அன்பு நண்பனை
ஓய்வுபெற்ற காலத்திலும்
மறக்க முடியுமா? உசிரு
இருக்கும் நேரம் வரை
மறக்க இயலுமா?

வே.கல்யாண்குமார்.

---

## அட்டைப்பூச்சி உறவுகள்..

இரத்தம் உறிஞ்சாது
உயிர் வதைத்து எல்லாம்
உறிஞ்சும்..

தன்னுயிர் வாழ தன்மானம்
முதலாக எல்லாம் உதிர்த்துச்
செய்யும்...

உணர்வுகளைக் காயமாக்கும்
உண்மைகளை மறைக்கும்
நடிக்கும் நாடகமாக்கும்
கூச்சமும் குற்றவுணர்வும்
இல்லாமல் தான் மட்டுமே
வாழத் துடிக்கும்..

கவனமாய் கலவரம்
செய்யும்.. நெருங்கிய
உறவில் நெருப்பு வைத்தே
குளிர் காயும்
காசுத்திமிரில் உறவை
சூதாடும்..

தன் சுயநலம் புணர்ந்து
பிறர் நலத்தைப் புதைக்கும்...

கோபங்காட்டும்
கொள்கை உதிர்க்கும்
இதுவும் வாழ, தம் வயிறு
கழுவ ஓடும் கூட்டம்..

ஆயுள் முழுக்க
அட்டைப்பூச்சி இவை

இரத்தம்
உறிஞ்சாது
உயிர்
வதைத்து
எல்லாம்
உறிஞ்சும்..

ஹரணி
தஞ்சாவூர்

1. எதையும் பொறுமையோடு
தேடு பொறாமையோடு
தேடாதே

2. வாழ்க்கையை சிலர்
மட்டும் வாழ்கிறார்கள்
பலர் அதை
நகர்த்துகிறார்கள்

3. நல்லதை எதிரி
சொன்னாலும் கேளு
கெட்டதை நண்பன்
சொன்னாலும் கேட்காதே

4. விருந்தாளியின் பசியை
போக்கிவிட்டு வீதிக்கு
வந்துவிடும் வாழை இலை
போன்றது நல்லவர்களின்
வாழ்க்கை

5. பணம் இருப்பவர்களை

ஆடவைக்கும்
இல்லாதவர்களை
வாட
வைக்கும்
உழைப்பவர்களை
தேட
வைக்கும்

நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி

---

மறக்கவே முடியாத
ஒரு முகம் ஒரு குரல் ஒரு
பெயர் ஆனால்
மறைக்கப்பட்டதென்னவோ
என்னுள் மட்டுமே

நீ இருந்த
இடத்தில்
அனைத்தும்
இருக்கிறது
ஆனால் அந்த
அனைத்தும்
எனக்கு ஒன்றும் இல்லை

கவிஞர் பாலசந்தர்
மண்ணச்சநல்லூர்

---

## முரணே அரண்...!

எல்லாம் முடியும்
என்பவனே...
என்னினிய இளைஞனே!
இணக்கம் இல்லாதது
எல்லாம் பிணக்கம்
என்று பொருள் குவிந்தால்
பரம்பொருளின் மீதே
பழி வந்து சேரும்...
அனைத்தும் ஒன்றென்ற
அத்வைதமும் அகத்தின்
தரம் அகிலத்தில் நிலைத்து
அற்புதம் காணவே
அப்படி வகுத்தது காண்...
எதார்த்த வாழ்வில்
இன்பமும் துன்பமும்
ஏற்றமும் இறக்கமும்
எதிரும் புதிராய் கோலோச்சி
கொடி கட்டினால் தான்
குவலயத்து இயக்கம்
குறையின்றி கூர்மைப் படும்
என்பதை கவனத்தில் ஏற்றி
காரியத்தில் தெளிவாகு...
எதிர்மறைகள் எல்லாம்
நேர்மறைகளின் நிலைத்த
இருப்புக்கு நங்கூரம்
என்பதை தெளிவாய்
உணர்ந்தால்தான்
தரணியில் திடமாய் நீ
தடம் பதிக்கலாம்...
ஆகவே இளைஞனே...
முரண்களைக் கண்டு
முகம் சுளித்து
முகாரி பாட வேண்டாம்...
மூளைச் சுருக்கங்களில்
முறையற்ற கறையாய்
முத்திரைப் பதித்து
வேண்டத் தகாத பட்டியலில்
சேர்த்து பகையாக்கிட
வேண்டாம்... முரண்கள்
இல்லை யென்றால் உனக்கு
முன்னேற்றம் இல்லை
முனைந்து செயல் புரிய
முழுத் தகுதியும் இல்லை...
தொல்லையே இல்லாத
தொட்டாற் சிணுங்கியாக நீ
தொடர்வதில் பெருமை
உண்டோ உனக்கு?
முடிவே இல்லாத
முரண்களின்
அணிவகுப்பில் தான்
மதிக்கவே முடியாத
மனித குல மாண்பின்
மெகா ரகசியம்
உயர் மனம் போல்
ஒளிந்துள்ளது என்பதை
ஒரு போதும் மறவாமல்
ஓயாமல் நினை...
இன்னும் ஒரு நுட்பம்
சொல்வேன்...தவறாது
இதயத்தில் கல்வெட்டாய்

கொள்!
முரண்
படுதல்
அறிவு அதில்
இசைவு
பாடுதல்
பேரறிவு!

நெல்லை குரலோன்
பொட்டல் புதூர்



## மழை

சூலுற்ற மேகங்களின்
குழந்தைகள்
விழுவதென்னவோ பூமியின்
மடியில்!

இடி மேளம் கொட்ட, மின்னல்
ஒளி வீச, மண் வாசனை
கிளப்பும் மழை வாசனை!

மலையிலே ஜரிகையாய்
புரண்டு, நதியிலே குமரியாய்
பெருக்கெடுத்து,
கடலிலே ஐக்கியமாகும்
மங்கை. இடையிலே பல

வண்ண ஜாலம்.
விண்ணுக்கும்
மண்ணுக்கும்
ஒரு நீர்ப்
பாலம்!

வானின்
அருட்கொடைக்கு
மனிதன் காட்டுவதோ
கருப்புக் குடை!

மீனா சேகர்

---

## சிரிப்பு

நஞ்சான நினைவுகளை
நெஞ்சத்தில் மறைத்து
வெளியில் மலர்ந்த
முகத்தோடு ஓர் சிரிப்பு

கலங்கிய கண்களில்
கண்ணீரின் தடங்கள்
தெரியாமல் புன்னகை
முகமூடியோடு ஓர் சிரிப்பு


யாருக்கும் புரியாத
வேதனையில் ஒளிந்திருக்கும்
சொல்ல முடியாத
உணர்வுகளோடு ஓர் சிரிப்பு

கர்வத்தோடு மற்றவரை
தாழ்த்தி பொய்யான
பெருமையை நிழலாகக்
கொள்ளும் அகங்காரச்
சிரிப்பு

சிரிப்புகள் பலவிதம்...
நாடகமில்லா நடிப்பு
வாழ்க்கை வேடத்தில்
வலியை மறைக்கும் ஓர்

மொழி...
உண்மையை
மறைக்கும்
நிசப்தக்
கலையே...

நா.பத்மாவதி
கொரட்டூர்

மாறுமோ நெஞ்சம்?
சொத்துக் குவிப்பில்
முதலிடம் சொகுசு
ஆடம்பரத்தில் பின்னுவார்
மனுவில் சொத்தைக்
குறைப்பார் ஓட்டுக்கு
நடையாய் நடப்பார்
உல்லாசத்திற்குக்
குறைவில்லை வாக்குறுதிகள்
பேச்சோடு சரி
வெற்றிக் கனி பறித்ததும்
தொகுதியை மறந்து
விடுவார் துரோகம்
கைவந்த கலை அரசியல்

அட்டவணையை
நன்கு
உணர்ந்தும்
மக்கள்
மாறவில்லை

பி. பழனி,
சென்னை.

---

## காதல் பாடல்

இருவிழி கண்ட உன்
அழகை என் இதயம்
கவிதையாய் வடிக்கிறது
வாழ்க்கை துணையே நீயாக
என் நெஞ்சம் உன் மஞ்சம்
கேட்கிறது, (இரு)

மலரின் மணமும்
மங்கையின் மணமும்
மனசை ஏதோ செய்கிறது
இளமையின் இனிமை
புதுமையாக உன்னை
துணையாய் நினைக்கிறது,
(இரு)

வெறிச்சோடி கிடக்கிறது
வீதியெல்லாம்~ உன்
கொலுசொலி கேட்காத
நிமிடங்களில்
தரிசாய் கிடக்குது~என்
இதயம்~உன் தரிசனம்
கிடைக்காத பொழுதுகளில்,
(இரு)

நாகை ஆசைத்தம்பி
கோவை

## துண்டுக் கவிதை.!

துண்டுதான் துண்டுதான் துண்டுதான்.. நின்றுதான்
பேசுகின்றேன்.! சுய நினைவுடன் பேசுகிறேன்.!

கண்டுதான்.. கண்டுதான் கண்டுகொள்ள வேண்டுமென..
காதோடு பேசுகின்றேன்! நான் துண்டுதான் பேசுகிறேன்.!

இன்று எவர் துண்டணிய விரும்புகின்றார்? இளம்
தலைமுறைக்கு எடுத்து நான் கூறுகிறேன்!

துண்டு இல்லா கிராமங்கள் இல்லை அது ஒரு காலம்.!

தோளிலே துண்டு போட்டால் நமக்கு மதிப்பு.!
இடுப்பிலே அதனைக்கட்ட பிறருக்கு மதிப்பு!

தலையிலே துண்டுகட்ட களத்திலே விளையாட்டு!
தலைப்பாகை என்பார்கள் அதுவொரு சீராட்டு.!

துண்டுதான் சட்டை.. துண்டுதான் கோமணம்
துண்டுதான் காந்தியின் அடையாளம்.!
துண்டினால் துடைப்பதே துண்டுக்கு வெகுமானம்!

துண்டை உதறி தோளில் போட்டால்..
புறப்பட்டு விட்டதாக அர்த்தம்.! என் துண்டில் எதும் இல்லை
என்பதே அதற்கு அர்த்தம்.!

துண்டுகள் படுக்கை விரிப்பாக மாறும்.! குளிருக்கு
போர்வையாகும்..! வெயிலுக்கு விசிறி யாகும்.. குடையுமாகும்!
கண்ணீரைத் துடைக்கும்.. இன்னலில் உதவும் உடுகை
இழந்தவன் கைபோல் ஆங்கே இடுக்கண் களையும்
நண்பனுமாகும்!

சண்டை வந்தால் துண்டைக் கீழேப் போட்டு ஓடினால்..
துண்டைக் காணோம்! துணியைக் காணோம்! இது
பழமொழியாகும்!

துண்டைத் தலையில் போட்டு நடந்தால்.. சோகம் சோகம்
என்றது உலகம்! இடத்தைப் பிடிக்க துண்டை போடும்..
முகத்தை மறைக்க முக்காடு போடும்.!

துண்டைப் போட்டு தாண்டித்தானே.. சத்தியம்
செய்வார்..!தன்மானம் அது நீதியின் அடையாளம்..
துண்டைப் போட்டுத் தாண்டுவேன் என்பார்!

துண்டை போட்டு மூடித்தானே மாடுகளை இங்கே விலை
பேசும்!/~ பட்ஜெட்டில் கூட பற்றாகுறையெனில்
அங்கே துண்டு விழும்;

பிறக்கும் போது குழந்தையைத் தாங்க துண்டு தானே முந்தி

வரும்.! இறக்கிற போதும் கோடித் துண்டு
வேட்டியும் தானே கூட வரும்.!

துண்டோ துண்டு.. துண்டை நினைத்தால்
எந்தனுக்குப் பாட்டு வரும்! மேடையில் துண்டு
போட்டால் பெருமையன்றோ கூட்டி வரும்!

வே.கல்யாண்குமார்.

---

## "காலுடைந்த நாய்"

சாலை நடுவே
"க்ரீச்" பிரேக் உடைத்துச்
சென்றது சதையாய் பரவிய
வலியின் பெயர் நாய்!

ஒரு கால் எலும்பு வெளியில்
தெரிய... மற்ற மூன்று
கால்களும் அதைத் தாங்க
மறுக்க... உயிரே
தன் உடலைத் தூக்க
மறுக்கும் துர்தருணம்!

அது குரைக்கவில்லை....
தொண்டையில் குரல் இல்லை
அழுகை மட்டும்
மண்ணை நனைக்க....

“ஓடு!” என்று கத்தும்
கார் ஹார்ன்கள்
அதன் காதுகளில்
“சாவு!” என்றே
கேட்கின்றன!

மனிதர்கள் நின்று
பார்க்கிறார்கள்;
ஒருவர் கைபேசியை
எடுக்கிறார் வலைதள
பதிவுக்காய்...இன்னொருவர்
மூக்கை மூடுகிறார்
நாயின் வலி நாற்றமாம்...
யாரும் உதவவில்லை!

சிதலமானது
நாயுடல் மட்டுமல்ல
மனிதத்தின் முகமும்!

ஒரு குட்டி அருகில் வந்தது
பால் தேடும் வாயால்
ரத்தத்தை நக்குகிறது!

அக் கணத்தில்
உலகமே ஊனமாகிறது!



உடைந்தது அங்கே
காலல்ல கருணையெனும்
குணம்!

முகில் தினகரன்
கோயமுத்தூர்

---

## ஹைக்கூ ( சென்ரியு )

தேவதை சாத்தான்
இரண்டும் உண்டு
மனதில் !



ஓராயிரம் அதிர்வுகள்
கண்டதும் உள்ளத்தில்
அவள் புன்னகை !

தங்கக்கூண்டும்
சிறைதான் கிளிக்கு !

வெல்வேன் என்ற
நினைப்பே முதல் வெற்றி !

ஆடிப்பட்டம்
தேடி விதைத்தனர்
வீட்டடி மனை கற்கள் !

படியில் பயணம்
நொடியில் மரணம்
படித்துவிட்டு படியில் !

கரம் சிரம் புறம்
நீட்டாதீர்கள்
படித்துவிட்டு நீட்டினர் !

மாற்றுத்திறனாளி
நிற்கையில்
மாற்றுத்திறனாளி
இருக்கையில் மற்றவர்கள் !

அன்று தொண்டு
இன்று கொள்ளை
கல்வி நிறுவனங்கள் !



உருவமின்றியும்
தாலாட்டியது
கிளைகளை
தென்றல் !

கவிஞர் இரா .இரவி






















WANTED

வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுபவரும் அனுகவும். 8668107106













Special Invitation
To Retired Senior Housewives Businessmen Bankers CAs NRIs Age.30 to 70.Qualification. SSLC/Graduate

★ To Restart Your Second Innings With A Career Business Opportunity


- Flexible Timing Unlimited Incentive.
- No Target Work From Home Training Provided
- For Successful Business.

Contact Mr.Irudaya Raj
Ph.9486634780


RS.999/-
Best MLM Software Development Company In India
At Easy EMI
9853719337
7436914247
www.mlmperfect.com


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


தெய்வம்
விளம்பர முகவர்கள் &
விற்பனை பிரதிநிதிகள் தேவை
• அருள்தரும் தெய்வம் மாதம் இருமுறை பக்தி இதழுக்காக
• பகுதிநேர / முழு நேர வாய்ப்புகள்
• கமிஷன் அல்லது மாத ஊதிய அடிப்படையில்
• மாதம் Rs. 20000 முதல் Rs. 50000/- வரை ஈட்ட சிறந்த வாய்ப்பு
CALL / WHATSAPP: 7789941009
இன்றே இணையுங்கள்!


VINAYGA ENTERPRISES
WANTED
COMPUTER OPERATOR
( FEMALE )
ONIDA AUTHORISED SERVICE CENTRE
CONTACT: 9962116238
ADDRESS: BHEEMANNA PETTAI, BHEEMANNA 1ST STREET, ALWARPET CHENNAI



Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
பேப்பர்பாய்
8122664699


TAMIL
TELECALLER
JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009


தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diplomo/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


HAPPY
Birthday
K.சரண்யா


Happy Birthday
தனஞ்செயன்


WANTED
— MARKETING EXECUTIVES —
We are hiring Marketing Executives (Male/Female) for immediate openings.
Full-Time / Part-Time
Salary: ₹30,000 - ₹50,000
Open to all, including Retired / VRS candidates and Job Seekers.
Location: All Over Tamil Nadu
Contact: 7789941009

## WANTED
MATRIMONY & EVENT ORGANISER EXPERIENCED

Managers: Age 35 yrs to 60 yrs. ( Female)
Qualf: Any. Exp : 10 yrs + Any.
Salary: Rs.20,000 to 30,000

Telecaller -Staff: (Female): -4 Nos
Qualf: +2 & Above with computer Knoweldge, fluent in Tamil & English.
Salry : RS.10,000

Call/wapp: 9438610756

ADVERTISE WITH US
CONTACT US
9438610756

WANTED: FEMALE ANCHORS
- Age 18 to 35
- Good Looking
- Work from Home (Full-time/Part-time)

Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889

## ! WANTED !
Muslim Lady Accounts Assistant

Qualification: B.Com / Tally Knowledge Required
Company: Perfume Manufacturing Company
Location: Chrompet



Contact: 99401 46318

உங்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு
உங்கள் ஜோதிடர் 9940374962
D.சக்திவேல்
அனுபவம் வாய்ந்த பாரம்பரிய ஜோதிடர்

கைரேகை ஜோதிடம் (ஆண்களுக்கு வலது, பெண்களுக்கு இடது)
முகக் குறிப்பு
கண் பார்வை கணிப்பு (ஆண்களுக்கு வலது, பெண்களுக்கு இடது)

வீடு மனை வாங்க விற்க அணுகவும்

நல்ல நேரங்கள் கணிப்பு
ராகு காலங்கள் பற்றிய தெளிவு

இன்றே அழையுங்கள்: D. சக்திவேல் - 9940374962

கவனத்தில் கொள்க:
- குளிகை காலம் நல்ல விவகாரங்கள் செய்தால் மேலும் வளர்ச்சி
- இராகு காலம் முடிந்த பிறகு நல்லது செய்யவும்
- எமகண்ட காலத்தில் வைத்தியம் பார்க்கக் கூடாது.

Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com

keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers

Internship:
- Clinical Training
- Counseling Practice
- Case Work

Jobs:
- Social Worker
- Jr Psychologist
- Rehab Counselor

Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com

## WANTED
JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ, வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம், மேட்டுக்குப்பம்- சென்னை-97

ஆட்கள் தேவை
வார சம்பளத்திற்கு
லேபர் வேலைக்கு ஆட்கள் தேவை
உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்
OMR பெருங்குடி சென்னை
Contact
9790979539

## WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp
94386 10756

## WANTED:
செக்யூரிட்டி வேலைக்கு ஆண்கள் தேவை
- வானகரம் பைபாஸ் ரோடு
- முகப்பேர்
- அம்பத்தூர்
- பட்ரவாக்கம்
- பெரம்பூர்
- மாதவரம்
- திருமுல்லைவாயல்

Ph. 9344183870
Ph. 8807470107
Call now for more details and interview.
APPLY NOW

SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

SADHANA DEVI.K
CAR WASH SUPREME
Car Wash & Detailing
- Car Foam Pressure Wash
- Teflon Coating
- Ceramic Wax Treatment
- Under Chassis Painting
- Interior Foam Wash / Stain Remover
- Paint Correction / Protection

We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.

## WANTED
M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift
7540003588

அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
தமிழ் மாதமிருமுறை இதழ்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..

## WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872



# பல்சுவை களஞ்சியம்




# சிறுவர்கள், முதியவர்களின் நலனுக்காக நாம் செய்யவேண்டியவை பற்றி பரந்த உரையாடலுக்கு செல்ல வேண்டும்

சிறுவர்கள், முதியவர்கள் ஆகிய இரு தரப்பினரையும் பாதுகாத்தல், பராமரித்தல், அவர்களுக்காக சமூகம் நிறைவேற்றவேண்டிய பொறுப்புகள் மற்றும் கடமைகளை சரியாக நிறைவேற்றுவது ஒரு நாட்டின் நல்ல நிலையை எதிர்பார்க்கும் அனைவரதும் பொறுப்பாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

சிறுவர் தினத்திலும் முதியோர் தினத்திலும் அவர்களின் நலனுக்காக நாம் செய்ய வேண்டியவை பற்றி பரந்த உரையாடலுக்கு செல்ல வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய தினம் (ஒக். 1) கொண்டாடப்படும் உலக சிறுவர் தினம், உலக முதியோர் தினம் ஆகியவற்றை முன்னிட்டு சஜித் பிரேமதாச வெளியிட்ட வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

சர்வதேச சிறுவர் தினமும் சர்வதேச முதியோர் தினமும் ஆண்டின் ஒரே நாளில் கொண்டாடப்படுவது மிகவும் அர்த்தமுள்ள கொண்டாட்டமாகும்.

'இன்றைய சிறுவர் நாளைய முதியவர்' என்ற சொற்றொடர் சிறுவர்கள் மற்றும் முதியவர்கள் பற்றிய நல்ல புரிதலை நமக்கு வழங்குகிறது. சிறுவர்களின் பாதுகாப்பு என்பது சமூகத்தின் நல்வாழ்வாகும்.

சமூகத்தின் நல்வாழ்வை எதிர்காலத்திற்கு பரம்பரையாக்கும் முதியவர்கள் என்பவர்கள் ஒரு நாட்டின் முன்னோடி, சிறந்த முன்மாதிரிகளை குறியீடாக்கும்



குழுவாகும். இந்த இரு குழுக்களையும் பாதுகாத்தல், பராமரித்தல் மற்றும் அவர்களுக்காக சமூகம் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் மற்றும் கடமைகளை சரியாக நிறைவேற்றுவது ஒரு நாட்டின் நல்ல நிலையை எதிர்பார்க்கும் அனைவரின் பொறுப்பாகும்.

நமது சமூகத்தின் கலாசாரத்தை வளர்க்கும் நான்கு முக்கிய மத போதனைகளின் வழிகாட்டுதல்கள் நமக்கு பாரம்பரியமாக கிடைத்துள்ளன. இந்த ஒவ்வொரு மத வழிகாட்டுதலிலும், நாம் பழக்கப்படுத்திக்கொண்ட நல்ல நடத்தைளைப் பேணுதல், சிறுவர் மற்றும் முதியவர் நமது பொறுப்பு என்று நமக்கு காட்டப்பட்டுள்ளது.

அதன்படி, தற்போதைய சமூகத்தில் சிறுவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் முதியவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை பரிசீலிக்கும்போது, இந்த இரு குழுக்கள் மீதும் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

ஒருபுறம் சிறுவர் துஷ்பிரயோகம், முதியவர்களுக்கு செய்யப்படும் புறக்கணிப்பு தற்போது பெருமளவில் பதிவாகும் பின்னணியில், சிறுவர்கள் மற்றும் முதியவர்கள் குறித்து சமூகத்தை விழிப்புணர்வு செய்வதற்கான திட்டங்கள் மேலும் பலப்படுத்தப்பட வேண்டும்.

இந்த ஆண்டு சிறுவர் தினத்தின் கருப்பொருள் 'சிறுவர்களின் உரிமைகளுக்காக முன்நிற்போம்' என்பதாகும். சிறுவர்களின் உரிமைகள் குறித்து சமீப காலத்தில் பாராளுமன்றத்திலும் சமூகத்திலும் தீவிரமான கலந்துரையாடல் உருவாகியுள்ளது. இது குறித்து செயல்படும்போது, நமக்கு பாரம்பரியமான கலாச்சார அடித்தளம், சாராம்சம் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடந்த காலத்தில் காட்டப்பட்ட போதனைகளை புறக்கணித்து செயல்பட முடியாது. எனவே சிறுவர்களின் உரிமைகளுக்காக முன்நிற்கும்போது, நாம் இவை அனைத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும்.'நமது நல்வாழ்வு மற்றும் நமது உரிமைகள்' என்ற கருப்பொருளுடன் கொண்டாடப்படும் முதியோர் தினத்தில், அந்த கருப்பொருளிலேயே முதியவர்கள் பற்றிய விளக்கம் நமது பொறுப்புகள் பற்றிய நினைவூட்டலும் செய்யப்பட்டுள்ளது. இலங்கையின் முதியோர் மக்கள்தொகை வேகமாக அதிகரித்து வருகிறது.

சமீபத்திய அறிக்கை ஒன்று காட்டியது என்னவென்றால், இலங்கையின் மக்கள்தொகையில் நூறு வயதை தாண்டிய ஏறக்குறைய ஐநூற்று நாற்பத்து ஏழு பேர் இருக்கின்றனர் என்பதாகும்.

முதியோர் மக்கள்தொகை என்பது சிறந்த கல்வி கற்ற, அனுபவங்களால் நிறைந்த குழுவாகும்.

அதேபோல் நமது நாட்டின் சுகாதார சேவை காரணமாக நல்ல சுகாதார நிலையுடன் இருக்கும் குழுவாகவும் உள்ளது. எனவே முதியோர் மக்கள்தொகையை நாட்டின் வளர்ச்சியில் பயனுள்ள வகையில் இணைத்துக்கொள்வது நமது பொறுப்பாகும். இது நமது நல்வாழ்வுக்காகவும், அவர்களுக்காக நாம் பாதுகாக்க வேண்டிய உரிமையாகவும் உள்ளது. இது குறித்து அரசாங்கம் சரியாக சிந்தித்து செயல்படுகிறதா என்பது கேள்விக்குரியது. சிறுவர்கள் மற்றும் முதியவர்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட நாளை ஒரு நாளுக்கு மட்டும் வரையறுக்காமல், ஆண்டு முழுவதும் நமது கடமை மற்றும் பொறுப்பாக செயல்படுத்த அர்ப்பணிப்போம். இந்த ஆண்டு சிறுவர் தினத்திலும் முதியோர் தினத்திலும் அவர்களின் நலனுக்காக நாம் செய்ய வேண்டியவை பற்றி பரந்த உரையாடலுக்கு செல்ல வேண்டும் என்பது என் நம்பிக்கை என்று குறிப்பிட்டுள்ளார்.

# மீம்ஸ்











## விடுகதை



| | |
|---|---|
| ஒரு குகை, 32 வீரர்கள், ஒரு நாகம் அந்த குகை எது? | வாய் |
| மரத்தின் மேலே தொங்குது மலைப் பாம்பல்ல. அது என்ன? | விழுது |
| மரத்தின் மேலே தொங்குது மலைப் பாம்பல்ல. அது என்ன? | விழுது |
| பேச்சுக் கேட்குது பேசுபவர் தெரியவில்லை. அது என்ன? | வானொலிப் பெட்டி |
| நான் பார்த்தால் அவன் பார்ப்பான், நான் சிரித்தால் அவன் சிரிப்பான் அவன் யார்? | முகம் பார்க்கும் கண்ணாடி |
| கட்டிய சேலையை அவிழ்க்க நினைத்தால் கண்ணீரும் கம்பலையும்தான்? | வெங்காயம் |

# பயனுள்ள சமையல் டிப்ஸ்

* சாதம், கஞ்சி போன்ற உணவுகளில் பாதாம், முந்திரி அல்லது பன்னீர் துண்டுகளை தூவி சாப்பிட கொடுக்கலாம். அவை உணவுக்கு சுவையும், நறுமணமும் சேர்க்கும்.
* புளிக்குழம்பு வகைகளில், சிறிது உருளைக்கிழங்கு சேர்த்தால், ருசியுடன் நிறமும் மேம்படும்.
* கோழி இறைச்சி, மீன் போன்றவற்றை வேகவைக்கும் முன்பு சிறிது எலுமிச்சை சாறு சேர்த்தால், சுவையாகவும் மிருதுவாகவும் இருக்கும்.
* மீன் வதக்கும் போது, மஞ்சள் தூள் மற்றும் சிறிது தயிர் சேர்த்து 10 நிமிடங்கள் ஊற வைக்கவும். மீன் மென்மையாகவும் வாசனையுடன் சுவையாகவும் இருக்கும்.
* சாதம், குழம்பு, வறுவல் போன்ற உணவுகளை உடனடியாக பரிமாறாமல் சில நிமிடங்கள் மூடி வைத்தால் நறுமணம் நீடிக்கும்.



# ஜோக்ஸ்



ராமு: தற்காப்புக்காக என்னென்ன வித்தைகள் தெரிஞ்சு வச்சுருக்கீங்க?

சோமு: மாவு ஆட்டுறது, தோசை சுடுறது.. அடிக்க வந்தா ஓடுறது..

அவன்: எங்க அம்மா அப்பவே சொல்லுச்சு.. நான் தான் கேக்கல..

இவன்: என்ன சொன்னாங்க

அவன்: நான் தான் கேக்கலையே!

-------------------------------

நபர் 1: ஆப்பரேஷன் தியேட்டரில்ல இருந்து ஏன் ஓடி வந்தீங்க?

நபர் 2: ஆப்பரேஷன் ஸ்டார்ட் பண்ணுனதும், நர்ஸ் வந்து பதட்டப்படாதீங்க, உணர்ச்சி வசப்படாதீங்க, தைரியமா இருங்க, இது சின்ன ஆப்பரேஷன் தான்னு சொன்னாங்க

நபர் 1:அதுக்கு எதுக்கு ஓடுனீங்க, நல்லா தானே சொல்லிருக்காங்க..

நபர் 2: நர்ஸ் என்ட்ட சொல்லல, டாக்டர்ட சொல்லிட்டு இருந்தாங்க



-------------------------------

டாக்டர்: நம்ம ஆஸ்பிட்டல் விளம்பரத்துக்கு நச்சுன்னு ஒரு பஞ்ச் சொல்லுங்க

நர்ஸ்: கூட்டிட்டு வாங்க, தூக்கிட்டு போங்க.. பணம் எங்களுக்கு, பொணம் உங்களுக்கு..

Samayam Tamilசோறு முக்கியம் பிகிலு.. ஒரு கிலோ அரிசிக்கு அமெரிக்காவில் மல்லுகட்டும் நம்மூர் மச்சான்ஸ்!

-------------------------------

டீச்சர்: இந்த பீரியடு முழுக்க வெளியே நில்லு, அப்பதான் உனக்கு அறிவு வரும்

ஸ்டுடண்ட்: அப்பொ நீங்க பாடம் எடுத்தா, அறிவு வராதா டீச்சர்?

டீச்சர்: ஏன் டா நோட்டுல பால் கணக்கு, மளிகை கணக்கு எல்லாம் எழுதி வச்சிருக்க?

ஸ்டுடண்ட்: நீங்க தான சார் வீட்டு கணக்கு எழுதிட்டு வரச் சொன்னீங்க!



# ஜோதிடம் அறிவோம்



## பாலகனாய் வந்த பரம்பொருள்!



திருவாதவூரர் என்ற மாணிக்கவாசகப் பெருமான் இறைவனை உருகிப் பாடிய திருமுறைப் பாடல்களே திருவாசகம்.

காலங்கள் தோறும் இதன் புகழ் உலகெங்கும் பரவிய வண்ணம் உள்ளது என்பதே இதன் சிறப்புக்கு அடையாளம். எட்டாம் திருமுறையில் இரண்டாம் பதிகமாக அமைவது கீர்த்தித் திருஅகவல். சிவனது திருவருள் புகழ்ச்சி முறைமையை தில்லையில் பாடினார் மாணிக்கவாசகர்.

இப்பதிகத்தில் "ஓரி' எனப்படும் திருத்தலத்தில் தனது பக்தையைக் காக்க பரம்பொருளாகிய இறைவன் பச்சிளம் பாலகனாக வடிவெடுத்த அற்புதம் குறிப்பிடப்பட்டுள்ளது. திருவிளையாடல் புராணத்தில் "விருத்த குமார பாலர் ஆன படலம்' என்று இந்த வரலாறு விளக்கப்பட்டுள்ளது.

இதனால் ஓரியூர் திருக்கோயில் இறைவர் சேயும் ஆனவர் என்று அழைக்கப்படுகிறார். அம்பாள் பெயர் மட்டுவார் குழலியம்மை. மேற்குப் பார்த்த கோயில். மாதாந்திர பெர்ணமியன்று சுவாமி, அம்பாளுக்கு சிறப்பு அலங்காரம் நடைபெறுகிறது.

இங்கு வந்து தரிசிப்பவர்களுக்கு வாழ்க்கையில் தொடரும் சகலவிதமான துன்பங்களும் விலகும். கன்னிப் பெண்களுக்கு மனதுக்கேற்ற மணாளன் வரனாக அமைவான். குழந்தை பாக்கியம் இல்லாமல் வருந்தும் தம்பதியர்க்கு நல்ல சந்தான பாக்கியம் கிடைக்கும். நோய்கள் அகன்று பூரண நலம் கிடைக்கும். இளமையும், தீர்க்க ஆயுளும் கிட்டும் என்பது நம்பிக்கை.

மதுரை மாட்டுத்தாவணி, திருவாடானை, தேவகோட்டை, சுந்தரபாண்டியன் பட்டிணம் ஆகிய ஊர்களில் இருந்து ஓரியூருக்கு நேரடிப் பேருந்து போக்குவரத்து உள்ளது.

## தொழில், வியாபாரம் பெருக





புதியதாக தொழில், வியாபாரம் துவங்குபவர்கள், ஏற்கெனவே தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு நஷ்டம் ஏற்பட்டு வருந்துபவர்கள், அதில் பெரிய அளவில் லாபம் காண இயலாமல் தவிப்பவர்கள் எனப் பலருக்கும் நற்பலன் தரும் வகையில் ஆகச் சிறந்த பிரார்த்தனைத் தலமாக விளங்குகிறது, திருவாரூர் மாவட்டத்துக்கு உள்பட்ட 32 அய்யம்பேட்டை எனப்படும் ஐயன்பேட்டை செட்டியப்பர் கோயில்.

புராண சிறப்புடைய திருவீழிமிழலை தலத்தில் நிகழ்த்தப்பட்ட தெய்வீகத் திருமணம் மிகுந்த விசேஷமானது. இந்தப் புராண நிகழ்வுடன் தொடர்புடைய ஏராளமான ஊர்கள் திருவீழிமிழலையைச் சுற்றி அமைந்துள்ளது. அவற்றுள் ஒன்றுதான் ஐயன்பேட்டை.

முற்காலத்தில் திருவீழிமிழலைக்குரிய ஆவண வீதியாக, அதாவது அங்காடித் தெருவாக அமைந்திருந்த பகுதி இது. பின்னர் தனித்த ஊராகி விட்டது. இங்கு அமைந்துள்ள புகழ்பெற்ற சிவாலயம்தான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில்.

இத்தலமானது திருவீழிமிழலையுடன் கொண்டுள்ள தொடர்பைப் பற்றி அறிய வேண்டுமெனில், நாம் சற்று தேவார காலத்துக்குப் பின்னோக்கிச் செல்ல வேண்டும்.முன்னொரு சமயம், திருவீழிமிழலையில் தங்கியிருந்த திருஞானசம்பந்தர், அப்பர் சுவாமிகள் ஆகிய இருவரும் இறையருளால் தினந்தோறும் படிக்காசு பெற்று, மக்களின் உணவுப்பஞ்சம் தீர்த்த வரலாறு நாம் அறிந்த ஒன்றுதான்.

மக்களின் பசியைப் போக்கிடுவதற்கான உணவுத் தயாரிக்கும் பணிக்குத் தேவையான மளிகைப்பொருள்களை தினசரி படிக்காசுகளை அளித்து எங்கு வாங்குவது என்கிற ஐயம் ஏற்பட்டது.

அப்பொழுது, "ஐயன் பேட்டையில் பொருள்களை வாங்கி, ஆண்டார்பந்தியில் உணவு படைத்திடுக!' என அசரீரியாக இறையின் திருவாக்கு ஒலித்தது.

மடத்துப் பணியாளர்கள் கொண்டு வந்த பொற்காசைப் பெற்றுக்கொண்டு அவர்களுக்குத் தேவையான பொருள்களை அளிப்பதற்காக இத்தலத்து அம்மையப்பரே வணிகத் தம்பதியராக உருவெடுத்து வந்த கதை அதிசயமானது.

ஆம். இத்தலத்து மீனாட்சி அம்மை கையில் படியுடன் வந்து தானியங்களை அளந்தமையால், "படியளந்தநாயகி' எனப்படுகிறாள். அதேபோல் கையில் தராசுடன் பொருள்களை நிறுத்துக் கொடுத்து வியாபாரம் செய்த இத்தலத்து சுந்தரேஸ்வர சுவாமி "செட்டியப்பர்' என வழங்கப்படுகிறார். பிற்பாடு இத்திருக்கோலத்துடனேயே அம்மையப்பர் இத்தலத்தில் நிலைத்து நின்றுவிட்டனர் என்கிறது தலபுராணம்.

கிழக்கு நோக்கிய அழகிய மூன்று நிலை ராஜகோபுரம். உள்ளே விஸ்தாரமான நந்தி மண்டபம். மூலஸ்தானத்தில் சிறிய திருவினராகக் காட்சி தருகிறார் ஸ்ரீ சுந்தரேஸ்வரர். அவருக்கு இடது பாகத்தில் மகாமண்டபத்தில் தெற்கு நோக்கியவளாய் தனி சந்நிதியில் காட்சி தருகிறாள் அன்னை மீனாட்சி.

மகா மண்டபத்தின் வடகிழக்கு மூலையில் படியளந்தநாயகி, செட்டியப்பர் திருவுருவங்களை சுதாமூர்த்தமாக எழுந்தருளச் செய்துள்ளனர். இவர்களுக்கும் ஆராதனை செய்யப்படுகிறது. இதே அமைப்புடைய உலோகத் திருமேனியரை உற்சவ காலங்களில் மட்டும் தரிசிக்க இயலும். சிவாலயத்துக்குரிய பரிவாரங்களான கன்னி மூலை கணபதி, சுப்பிரமணியர், தட்சிணாமூர்த்தி, துர்கை, மகாலட்சுமி, சண்டிகேஸ்வரர், பைரவர்ஆகியோர் அவரவர்களுக்குரிய சந்நிதிகளில் முறையே நிலைப்படுத்தப்பட்டுள்ளனர். இரு கரங்களில் தாமரை மலர்களை ஏந்தியுள்ள அமர்ந்த நிலை மகாலட்சுமி அழகிய திருவினள். வித்தியாசமான அருட்கோலமுடைய பைரவர் இத்தலத்துக்குரிய மற்றொரு சிறப்பு.

விஷக்கடிகளால் பாதிப்பு அடைந்தவர்கள் இந்த பைரவரை வழிபட்ட பிறகு அருகில் தனித்த கோயிலில் அருளுகின்ற சீதளை எனப்படும் முத்துமாரியம்மனை வழிபட பூரண நிவாரணம் கிடைப்பது இன்றளவும் கண்கூடு. இத்தலத்து சிவபெருமானின் ஆக்ஞைபடி விஷ பாதிப்புகளை அகற்றியருளுகிறாள் அன்னை முத்துமாரி என்கிற சம்பிரதாயம் நிலவுகிறது.

இத்தலத்துக்கு ஆண்டு முழுவதுமே வணிகர்கள் வந்து வணங்கிச் செல்கிறார்கள். குறிப்பாக மாதாந்திர பரணி நட்சத்திர தினங்களில் இங்கு செய்யப்படும் ஆராதனைகள் சிறப்பானவை. அதேபோன்று வருடாந்திர சித்திரை } பரணி வணிகத் திருவிழா திருவாரூர் மாவட்டத்துக்குரிய பிரபலமான திருவிழாக்களுள் ஒன்று. இந்த வருடத்துக்குரிய திருவிழாவானது ஏப்ரல் 18}ஆம் தேதி நடைபெற இருக்கிறது.

தொழில், வியாபாரத்தைப் போற்றிடும் இந்த தனித்துவமான விழாவில் வணிகர்கள் தரிசனம் செய்வார்கள். அந்த சமயத்தில் குங்குமம், மஞ்சள், உப்பு, தானியங்கள் போன்றவற்றை பிரசாதமாக அளிப்பது கோயில் வழக்கம். இவற்றைப் பெற்றுச் செல்பவர்கள் தங்கள் வீடுகளில் பூஜை ஸ்தானங்களில் அவற்றை வைத்து வணங்குகின்றனர். உற்சவ மூர்த்தங்களான அம்மையப்பர் இருவரும் கையில் வெள்ளியாலான தராசு மற்றும் படி ஆகியவற்றுடன் விசேஷ காலங்களில் பவனி வருவது சிறப்புக்குரியது. தலவிருட்சம் வில்வம். பொற்றாமரைக் குளமும், அரசலாறும் தீர்த்தமாக விளங்குகின்றன.

பல்வேறு சிறப்பு வாய்ந்த இந்தக் கோயிலில் ஏப்ரல் 12 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 9.30 மணிக்கு மேல் 10.30 மணிக்குள், நூதன மகா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. மயிலாடுதுறை } திருவாரூர் வழித்தடத்தில், பூந்தோட்டத்துக்கு அருகில் உள்ள மருதுவாஞ்சேரி எனும் ஊரிலிருந்து 2 கி.மீ. தொலைவில் ஐயன் பேட்டை செட்டியப்பர் கோயில் அமைந்துள்ளது.

## பங்குனி உத்திர திருவிழா



கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை அருகே நூற்றாண்டு பழமை வாய்ந்த வேளிமலை குமாரசுவாமி கோவிலில் பங்குனி திருவிழா இன்று நடைபெற்றது.

முருகப் பெருமானின் திருக்கல்யாணத்தையொட்டி, பாரம்பரிய குறவர் படுகளம் நிகழ்வு நடைபெற்றது. நூற்றாண்டு பழமை வாய்ந்த வேளிமலை குமாரசுவாமி கோவிலில் பங்குனி உத்திரத் திருவிழாவில் முருகப்பெருமானின் திருக்கல்யாணத்தையொட்டி, பாரம்பரிய குறவர் படுகளம் நிகழ்வு நடைபெற்றது.

வள்ளியுடன் முதியவர் வேடத்தில் செல்லும் முருகப்பெருமானை, வள்ளியின் உறவினர்களான குறவர்கள் தடுப்பதும், அவர்களுடன் சண்டையிட்டு வெற்றிபெற்ற முருகன் தனது உண்மையான உருவத்தை வெளிப்படுத்தும் நிகழ்வுகள் நடித்துக் காட்டப்பட்டன. இதை ஏராளமான பக்தர்கள் கண்டுகளித்தனர்.

## மழை பெய்ய வேண்டி சிவபெருமானுக்கு இளநீர் அபிஷேகம்

கன்னியாகுமரி ரெயில் நிலைய சந்திப்பில் குகநாதீஸ்வரர் கோவில் உள்ளது. இந்த கோவில் ஆயிரம் ஆண்டு பழமையானது ஆகும். தஞ்சை பெரிய கோவிலை கட்டுவதற்கு முன்பே மாமன்னன் ராஜராஜ சோழன் இந்த கோவிலை கட்டி உள்ளார். இங்கு குகன் என்ற முருககடவுள் ஈஸ்வரனை (சிவபெருமான்) வழிபட்டதால் இக்கோவிலுக்கு குகநாதீஸ்வரர் கோவில் என்று பெயர் வரக் காரணமாயிற்று.

இந்த கோவிலில் உள்ள மூலஸ்தான கருவறையில் குமரி மாவட்டத்திலேயே மிக உயரமான ஐந்தரை அடி உயர சிவலிங்கம் அமைந்து உள்ளது.

வரலாற்று சிறப்புமிக்க இந்த கோவிலில் விசேஷ நாட்களில் சிவபெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். பொதுநலன் கருதியும் சிறப்பு பூஜைகள் நடைபெறும். அவ்வகையில், நாட்டில் கோடை வெப்பம் நீங்கி மழை பெய்ய வேண்டி குகநாதீஸ்வரருக்கு இன்று 1008 இளநீர் அபிஷேகம் நடந்தது.

இதையொட்டி அதிகாலை 6 மணிக்கு கோவில் திருநடை திறக்கப்பட்டு நிர்மால்ய பூஜையும் விஸ்வரூப தரிசனமும் நடந்தது. அதைத் தொடர்ந்து அபிஷேகமும் தீபாராதனையும் நடந்தது.

பின்னர் குகநாதீஸ்வரருக்கு எண்ணெய், மஞ்சள் பொடி, களப பொடி, பால், தயிர், இளநீர், பன்னீர், சந்தனம், விபூதி,நெய், தேன்,பஞ்சாமிர்தம் மற்றும் புனித நீரால் சிறப்பு அபிஷேகம் நடந்தது. அதைத் தொடர்ந்து கருவறையில் அமைந்து உள்ள குகநாதீஸ்வரருக்கு 1008 இளநீர் அபிஷேகம் நடந்தது.

அதன்பின்னர் அலங்கார தீபாராதனையும் பக்தர்களுக்கு அருட்பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சியும் நடந்தது.





## சீயாத்தமங்கை வன்மீகநாதர் கோவிலில் கால பைரவருக்கு அபிஷேகம்



நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம், சீயாத்தமங்கை மெயின் ரோட்டில் வன்மீகநாதர் கோவில் உள்ளது. இந்த கோவிலில் காலபைரவர் தனி சன்னிதியில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். இந்த கோவிலில் ஒவ்வொரு தேய்பிறை அஷ்டமியன்றும் பைரவருக்கு சிறப்பு பூஜை நடைபெறுவது வழக்கம்.

அதன்படி இன்று தேய்பிறை அஷ்டமியையொட்டி சிறப்பு பூஜை நடைபெற்றது. மஞ்சள், சந்தனம், பால், பன்னீர், தயிர், தேன், இளநீர், மாப்பொடி, திரவியப்பொடி உள்ளிட்ட பொருட்களால் கால பைரவருக்கு சிறப்பு அபிஷேகம் நடந்தது. பின்னர் வண்ணமலர்களால் அலங்கரிக்கப்பட்டு தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

சிறப்பு பூஜையில் சீயாத்தமங்கை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். பூஜையில் பங்கேற்ற பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

## வெண்ணெய்த்தாழி கண்ணன திருக்கோலம்



திருநின்றவூர் ஸ்ரீமத்ஸவித்ரி நாயிகா சமேத ஸ்ரீ பக்தவத்சலப் பெருமாள் விஸ்வாவசு பங்குனி பிரம்மோத்ஸவம் – 2026 எட்டாம் திருநாள் காலை வெண்ணெய்தாழி கண்ணன திருக்கோலம்

## ஸ்ரீ கேசவர் பிரம்மோற்சவம்



எங்கள் ஸ்ரீ கேசவர் பிரம்மோற்சவம் நேற்று காலை நாள் 8 வெண்ணைத்தாழி கண்ணன்

## அழகர் கோயில் ஸ்ரீகல்யாண சுந்தரவல்லி தாயார்



அழகர் கோயில் ஸ்ரீகல்யாண சுந்தரவல்லி தாயார்.

## ஸ்ரீ கள்ளபிரான் பெருமாள் திவ்ய சேவை



ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ கள்ளபிரான் பெருமாள் திவ்ய சேவை.

## கண்ணாடி அறை சேவை.



திருஎவ்வுள் ஸ்ரீவைத்ய வீரராகவ பெருமாள் பல்லவ உத்ஸவம் நான்காம் நாள் காலை கண்ணாடி அறை சேவை.

## அவதார கட்டம்



திருமயிலை ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் சன்னதி பல்லவ உத்ஸவம் இரண்டாம் நாள் – புராண படனம் – அவதார கட்டம்.

# பெருமாள் தாயார் வெள்ளி பல்லக்கில் திருவீதி புறப்பாடு









பங்குனி ப்ரஹ்மோற்சவம் 8ம் திருநாள் காலை வெண்ணெய்த்தாழி அலங்காரத்தில் பெருமாள் தாயார் வெள்ளி பல்லக்கில் திருவீதி புறப்பாடு @ Kumbakonam Uppiliappan Kovil

# ராசிபுரம் வளர்ச்சிக்கு தொடர்ச்சியாக பணியாற்றுவேன் மதிவேந்தன் உறுதி

**இராசிபுரம், ஏப். 12:** ராசிபுரம் நகராட்சிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் இரண்டாவது நாளாக அமைச்சர் மதிவேந்தன் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்து, மேற்கொண்ட வளர்ச்சி திட்டங்களை எடுத்துரைத்தார்.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் தொகுதி ராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட சேந்தமங்கலம் பிரிவு ரோடு, மாதுடீ கடை, செட்டியண்ணன் தெரு, காந்திநகர், விநாயகர் கோவில், ராஜகாளியம்மன் கோவில், வி.நகர் கருப்பனார் கோவில் மற்றும் சித்தி விநாயகர் கோவில் உள்ளிட்ட பகுதிகளில் அமைச்சர் மதிவேந்தன் இரண்டாவது நாளாக தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.





அப்போது அவர் பேசுகையில், ராசிபுரம் நகர மக்களின் பயன்பாட்டிற்காக கூட்டுக் குடிநீர் திட்டம், புதிய புறநகர் பேருந்து நிலையம், வேலைவாய்ப்பை உயர்த்த டைட்டில் பார்க், எல்.இ.டி தெருவிளக்குகள், தார் சாலை வசதிகள், சிறுவர் பூங்கா, மினி ஸ்டேடியம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்றார்.

மேலும் திமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டு, மக்களின் தேவைக்கு ஏற்ப புதிய வளர்ச்சி பணிகளும் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் திமுக நகர செயலாளர் என்.ஆர்.சங்கர், நகர மன்ற தலைவர் கவிதா சங்கர், தேர்தல் பொறுப்பாளர் நன்னியூர் ராஜேந்திரன் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# கன்னியாகுமரியில் நாளை விஜய் பங்கேற்க இருந்த பொதுக்கூட்டம் திடீர் ரத்து: காவல்துறை அனுமதி வழங்கிய நிலையில் 'ரோடு ஷோ' நடத்த திட்டம்?

**நாகர்கோவில்,ஏப்.12:** தமிழக வெற்றி கழக தலைவர் விஜய் தமிழகம் முழுவதும் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். இந்நிலையில், இன்று (ஞாயிற்றுக்கிழமை) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 6 தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து அவர் நடத்தவிருந்த பிரம்மாண்ட பொதுக்கூட்டம் திடீரென ரத்து செய்யப்பட்டுள்ளது. கன்னியாகுமரி விவேகானந்தா கல்லூரி மைதானத்தில் பொதுக்கூட்டம் நடத்த கட்சி நிர்வாகிகள் அனுமதி கோரியிருந்தனர். மதியம் 2 மணி முதல் இரவு 10 மணி வரை அனுமதி கேட்கப்பட்ட நிலையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் சில கட்டுப்பாடுகளுடன் மதியம் 2 மணி முதல் இரவு 8 மணி வரை (6 மணி நேரம்) அனுமதி வழங்கியிருந்தார்.

இந்த நிலையில் அவரது பொதுக்கூட்டம் ரத்து செய்யப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளன. கல்லூரி மைதானத்தில் பந்தல் அமைக்கும் பணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. பந்தல் தளவாடங்களை கழற்றும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் ரோடு ஷோவுக்கு மகாதானபுரம் ரவுண்டானா அல்லது சீரோ பாயிண்ட் பகுதியை தவெக நிர்வாகிகள் தேர்வு செய்து அதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

தொடர் பிரசாரம் காரணமாக விஜய்க்கு கடும் தொண்டை வலி ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் அவர் பேசுவதில் சிரமம் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

## தொட்டி திருமஞ்சனம்



நமது ஸ்ரீ கேசவர் பிரமோத்ஸவம் நேற்று மாலை நாள் 8 தொட்டி திருமஞ்சனம்

# சுக்கர வாரம் நம் வாசவி சிறப்பு வழிபாடு







**பொள்ளாச்சி ஏப்.12:** ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் சுக்கிர வாரம் நன்னாளில் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, தங்க ஆபரணங்களால் அலங்காரங்கள், வேத மந்திரங்கள் ஒலிக்க, பக்தி பாடல்களை பாடி, பிரசாதம், நெய்வேத்தியன்களுடன், ஊஞ்சல் உற்சவமும், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு நம் வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# பங்குனி மாதம் தேய்பிறை அஷ்டமி ஸ்ரீகாலபைரவர் சிறப்பு வழிபாடு



**திருவண்ணாமலை, ஏப்.12:** திருவண்ணாமலை மாவட்டம் போளூர் வட்டம் ஆர். குண்ணத்தூர் ஸ்ரீவீரஜம்பேஸ்வரர் ஆலயத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ காலபைரவருக்கு பங்குனி மாதம் தேய்பிறை அஷ்டமி சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், வெற்றிலை மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் ஸ்ரீ கால பைரவரை வேண்டி அருள் பெற்றனர்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம் பிரச்சாரம்



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி சட்ட மன்ற தொகுதியின் அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழக வேட்பாளர் அ.மாலதி அவர்களுக்கு தென்னந்தோப்பு சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்யுமாறு கூட்டணி கட்சியினர் தேர்தல் பிரச்சாரம் செய்தார்கள்.

# மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை பார்வையிட்டு ஆய்வு



**திருவண்ணாமலை ஏப்.12:** மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் பிரதிநிதிகள் முன்னிலையில் திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள் மின்னணு வாக்குப்பதிவு பாதுகாப்பு வைப்பறையில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை





# காட்பாடி ஸ்ரீபக்த ஆஞ்சநேயர் கோயிலில் திருவோண சிரவண தீபம் ஏற்றி வழிபாடு!

**வேலூர், ஏப். 12:** வேலூர் மாவட்டம், காட்பாடி சித்தூர் பேருந்து நிலையத்தில் உள்ள ஸ்ரீபக்த ஆஞ்சநேயர் கோயிலில் திருவோண நட்சத்திரத்தை முன்னிட்டு ஏப்ரல் 11ம் தேதி சிரவண தீபம் ஏற்றி சிறப்பு வழிபாடு நடந்தது. அர்த்த மண்டபத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த மஹாலஷ்மிக்கு சிறப்பு பூஜை நடந்தது.

சிரவணதீபத்தை ஏற்றி பின்பக்கமாக இடமிருந்து வலமாக அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த மஹாலட்சுமி விக்கிரகத்தை மூன்று முறை வலம் வந்து வழிபட்டனர். இதைத் தொடர்ந்து பக்தர்களுக்கு கேசரி, பஞ்சாமிர்தம், சுண்டல், சாம்பார் சாதம் ஆகிய பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டன. குங்குமம், சந்தனம், மஞ்சள், செந்தூரம் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

ஸ்ரீபக்த ஆஞ்சநேயர் வெண்ணெய் காப்பு சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

பூஜைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஸ்ரீரங்கம் ஸ்ரீகண்ணன் பட்டாச்சாரியார் வெகுவிமரிசையாக செய்திருந்தார்.







# சுற்றுலா: சுற்றுலா பயணியரை கவரும் காயத்ரி அணை

கர்நாடகாவில் பல்வேறு மாவட்டங்களில் அணைகள் உள்ளன. அனைத்துமே சுற்றுலா தலங்களாக, சுற்றுலா பயணியரை தன் வசம் சுண்டி இழுக்கின்றன. இவற்றில் காயத்ரி அணையும் ஒன்றாகும்.



மக்களின் குடிநீர் தேவை மற்றும் விவசாயநோக்கத்துக்காக, அன்றைய மன்னராட்சி காலத்தில், அணைகள் கட்டப்பட்டன. கே.ஆர்.எஸ்., லிங்கனமக்கி, ஹேமாவதி, ஹாரங்கி, கபினி, கட்டபிரபா, மல்லப்பிரபா உட்பட, பல அணைகள் உள்ளன. அதே போன்று, சித்ரதுர்காவில் காயத்ரி அணை அமைந்துள்ளது. இயற்கை எழில் மிகுந்த இடத்தில் இந்த அணையை பார்க்க, தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணியர் வருகின்றனர்.

ரூ.40 லட்சம் சித்ரதுர்கா மாவட்டம், ஹிரியூர் தாலுகாவின் ஜவனகொண்டனஹள்ளி பேரூராட்சிக்கு உட்பட்ட கரியாலா கிராமத்தில் சுவர்ணமுகி ஆற்றுக்கு குறுக்கே, காயத்ரி அணை கட்டப்பட்டது. உடையார் காலத்தில், 1963ல் இந்த அணை 40 லட்சம் ரூபாய் செலவில், கட்டப்பட்டது.

அன்றைய சித்ரதுர்கா மாவட்ட போர்டு தலைவராக இருந்த வக்கீல் கெஞ்சப்பா, ஜெயசாமராஜ உடையாரை வரவழைத்து, அடிக்கல் நாட்ட வைத்தார். இந்த அணைக்கு ஜெயசாம ராஜேந்திர உடையார் குடும்பத்தை சேர்ந்த காயத்ரி தேவியை நினைவுகூரும் வகையில், அவரது பெயரே சூட்டப்பட்டது.

காயத்ரி அணை 14,000 ஏக்கர் விவசாய நிலத்துக்கு, நீர்ப்பாசன வசதி தருகிறது. அணை 145 அடி உயரம் கொண்டதாகும். வலது புறத்தில் 16 கி.மீ., கால்வாய், இடது புறத்தில் 7 கி.மீ., கால்வாய் கொண்டுள்ளது.



நிலத்தடி நீர் கர்நாடகாவின் சிறிய அணைகளில், பிரபலமான சுற்றுலா தலங்களில், இதுவும் ஒன்றாகும். தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணியர் வருகின்றனர். அமைதியான சூழ்நிலையில், இயற்கைகாட்சிகள் சூழ்ந்த இடத்தில், காயத்ரி அணை உள்ளது. வார இறுதி நாட்களில் சுற்றுப்புற நகரங்களின் மக்கள், அதிக எண்ணிக்கையில் வருகின்றனர்.

ஆண்டுதோறும் மழைக்காலத்தில் அணை நிரம்புகிறது. இதனால், சுற்றுப்புற கிராமங்களில் நிலத்தடி நீர்மட்டம் அதிகரிக்கிறது.

காயத்ரி அணை ஹிரியூர் தாலுகாவுக்கு மட்டுமின்றி, துமகூரு மாவட்டம், சிரா தாலுகாவின், ஹுனசேஹள்ளி, உஜ்ஜனகுன்டே, மேளகோடே உட்பட பல கிராமங்களின் விவசாயிகளின் உயிர் நாடியாக உள்ளது. இந்த அணை 2017ல் இரண்டு முறை நிரம்பியது. இதை பார்க்க சுற்றுலா பயணியர் கூட்டம், கூட்டமாக வந்தனர். இப்போதும் அணை சுற்றுலா தலமாகவே விளங்குகிறது.

எப்படி செல்வது?

1 பெங்களூரில் இருந்து 150 கி.மீ., சித்ரதுர்காவில் இருந்து 65 கி.மீ., ஹிரியூரில் இருந்து 20 கி.மீ., தொலைவில் காயத்ரி அணை உள்ளது. அனைத்து பகுதிகளில் இருந்தும், ஹிரியூருக்கு அரசு பஸ்கள், ரயில்கள், தனியார் பஸ்கள் இயக்கப்படுகின்றன. ஹிரியூரில் இறங்கி வாடகை வாகனத்தில், அணைக்கு செல்லலாம். கோடைக் காலத்திலும் நீர் இருப்புள்ளது.

2 பார்வை நேரம்: காயத்ரி அணையை பார்க்க நேர கட்டுப்பாடு ஏதும் விதிக்கப்படவில்லை. வனம், மலைகள் சூழ்ந்த இடத்தில் அணை இருப்பதால், இருள் சூழ்வதற்குள் திரும்புவது நல்லது.

3 அருகில் உள்ள தலங்கள்: சித்ரதுர்கா கோட்டை, வாணி விலாஸ் அணை, ஜோகிமட்டி வன விலங்குகள் சரணாலயம்.

# வேலைவாய்ப்பு கார்னர்

## சி.ஏ., முடித்தவருக்கு வேலை

இந்திய பட்டய கணக்காளர் நிறுவனத்தில் (ஐ.சி.ஏ.ஐ.,) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

'எக்சிகியூட்டிவ் ஆபிசர்' பிரிவில் சி.ஏ., 75, சட்டம் 15, ஐ.டி., 10 உட்பட மொத்தம் 109 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: சி.ஏ., / சி.எஸ்., / பி.எல்., / பி.இ., / பி.டெக்.,

வயது: 18-30 (15.4.2026ன் படி)

தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 500.

கடைசிநாள்: 15.4.2026

விவரங்களுக்கு: resource.cdn.icai.org

## பாதுகாப்பு படையில் 233 கான்ஸ்டபிள் காலியிடங்கள்



துணை ராணுவத்தை சேர்ந்த சகஸ்ட்ர சீமா பால் (எஸ்.எஸ்.பி.,) படையில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

'தலைமை கான்ஸ்டபிள்' பிரிவில் கம்யூனிகேசன் 197, எலக்ட்ரீசியன் 29, கால்நடை 5, ஸ்டெவார்டு 2 என மொத்தம் 233 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பிளஸ் 2 / ஐ.டி.ஐ., / டிப்ளமோ

வயது: 18-27 (20.4.2026ன் படி) தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, உடல் தகுதி தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு. விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 100. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.

கடைசிநாள்: 30.4.2026

# ஏப்ரல் மாதம் (2026) வார ராசிபலன்

## 12.04.2026 முதல் 18.04.2026 வரை

### மேஷம்

இந்த வாரம் எல்லா காரியங்களும் அனுகூலமாகும். முக்கிய நபர்களின் சந்திப்பும் அவர்களால் உதவியும் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் பெறும். மனதில் தைரியம் கூடும். சுய நம்பிக்கை உண்டாகும். எடுத்த காரியங்களை செய்து முடிப்பதில் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்ற வாய்ப்புகள் எதிரில் வந்து தோன்றும். வியாபாரம் தொடர்பான செலவு வார இறுதியில் கூடும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு முக்கிய பொறுப்பு கிடைக்கலாம். செயல் திறன் அதிகரிக்கும். குடும்பத்தில் சந்தோஷம் உண்டாகும். பிரிந்து சென்ற குடும்ப உறுப்பினர் மீண்டும் வந்து சேரலாம். கணவன், மனைவிக்கு இடையே இருந்த மனஸ்தாபங்கள் நீங்கும்.

பிள்ளைகள் கல்வி பற்றிய சிந்தனை அதிகரிக்கும். உறவினர் மத்தியில் மரியாதை கூடும். பெண்களுக்கு எதிர்பாராத சந்திப்புகள் உண்டாகும். திடீர் செலவு உண்டாகும்.

### ரிஷபம்

இந்த வாரம் நினைத்த காரியத்தை செய்து முடிக்கும் சூழ்நிலை உருவாகும். பண வசதி கூடும். தெய்வ சிந்தனை அதிகரிக்கும். வாழ்க்கையில் இருந்த அதிருப்தி நீங்கி பிடிப்பு உண்டாகும். எதிர்பார்த்த தகவல் வரும். இடமாற்றம் உண்டாகலாம். எதிர்பாராத திடீர் செலவு ஏற்படும். தொழில் வியாபாரத்தில் திடீர் செலவு ஏற்படும். எதிர்பார்த்த லாபம் குறையலாம். புதிய ஆர்டர்களுக்காக கூடுதலாக அலைய வேண்டி இருக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் அடுத்தவர்களால் திடீர் பிரச்சனை தலை தூக்கலாம். உங்களது கருத்துக்கு மாற்று கருத்து உண்டாகலாம். கணவன், மனைவிக்கு இடையே மனம் விட்டு பேசுவது நன்மை தரும். பிள்ளைகளிடம் கவனமாக பேசுவது நல்லது. பெண்களுக்கு மனதில் இருந்த சோர்வு நீங்கி உற்சாகம் உண்டாகும். எதிர்பார்த்த தகவல் சாதகமாக வரும். பண வரத்து கூடும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காண்பதில் ஆர்வம் உண்டாகும். மனதில் உற்சாகம் ஏற்படும்.

### மிதுனம்

இந்த வாரம் பேச்சின் இனிமை சாதுரியம் இவற்றால் எடுத்த காரியங்கள் சாதகமாக முடிய உதவும். காரியங்களில் தாமதம் உண்டாகலாம்.

அடுத்தவர் பிரச்சனைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரம் மந்தமான நிலையில் காணப்பட்டாலும் வருமானம் வழக்கம் போல் இருக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்த ஒரு வேலையிலும் முழு கவனத்துடன் ஈடுபடுவது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது. கணவன், மனைவிக்கு இடையே இருந்த இடைவெளி குறையும். பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி சிந்தனை அதிகரிக்கும்.

பெண்களுக்கு எந்த காரியத்திலும் ஈடுபடும் முன்பு திட்டமிட்டு செயல் படுவது நல்லது. பண வரத்து தாமதப்படும். மாணவர்களுக்கு கல்வியில் இருக்கும் மந்தநிலை மாற கூடுதல் கவனத்துடன் படிப்பது அவசியம். எந்த வேலையிலும் முழு கவனம் தேவை.

### கடகம்

இந்த வாரம் தடைகள் நீங்கும். எதிர்ப்புகள் விலகும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பண வரத்து எதிர் பார்த்தது போல் இருக்கும். புதிய நபர்களின் நட்பு கிடைக்கலாம். பாதியில் நின்ற காரியங்களை தொடர்ந்து செய்து முடிப்பீர்கள். திடீர் குழப்பம் ஏற்படலாம். தீ, எந்திரம் ஆகியவற்றை கையாளும்போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைத்தாலும் அதிகமாக உழைக்க வேண்டி இருக்கும்.

சரக்குகளை அனுப்பும் போது கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதல் கவனத்துடன் செயலாற்றுவது நல்லது. குடும்பத்தில் சிறு சண்டைகள் உண்டாகலாம். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் அனுசரித்து செல்வது நல்லது. பிள்ளைகளிடம் அன்பாக நடந்து கொள்வது நன்மை தரும்.

பெண்களுக்கு மனதில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். சமையல் செய்யும் போதும் மின் சாதனங்களை இயக்கும் போதும் கவனம் தேவை. மாணவர்களுக்கு கல்வி பற்றிய மனக் கவலை ஏற்பட்டு நீங்கும். பெற்றோர், ஆசிரியர் ஆலோசனை கைகொடுக்கும்.

### சிம்மம்

இந்த வாரம் சுபச் செலவு அதிகரிக்கும். பயணங்கள் மூலம் வீண் அலைச்சலும், காரிய தாமதமும் உண்டாகும். புதிய நட்புகள் கிடைக்கும். எடுத்த காரியங்கள் கை கூடும். அடுத்தவர் செயல்களுக்கு பொறுப்பேற்காமல் தவிர்ப்பது நல்லது. பணம் கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை.

தொழில் வியாபாரம் சுமாராக நடக்கும். கடன் பிரச்சனைகள் கட்டுக்குள் இருக்கும். எதிர்பார்த்த லாபம் கிடைத்தாலும் செலவும் உண்டாகும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிகம் உழைக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்களின் செய்கையால் மன உளைச்சல் ஏற்படலாம். கணவன், மனைவிக்கு இடையே வாக்கு வாதங்கள் உண்டாகாமல் தவிர்ப்பது நன்மை தரும். பிள்ளைகளுடன் சகஜமாக பேசி வருவது நல்லது.

அவர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். பெண்களுக்கு வீண் அலைச்சலும் காரிய தாமதமும் ஏற்படலாம்.

மற்றவர்களுக்காக பொறுப்புக்களை ஏற்பதை தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் எதிர்பார்த்த முன்னேற்றம் காணப்படும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்..

### கன்னி

இந்த வாரம் பண வரத்து அதிகரிக்கும். எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது. காரிய தடைகள் விலகும். பயணங்கள் மூலம் நன்மையை தரும். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தொலைதூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நல்லதாக இருக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த தொய்வு நிலை மாறி முன்னேற்றம் உண்டாகும். லாபம் அதிகரிக்கும். திறமையான பணியாளர்கள் அமைவார்கள்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாக செயல்பட்டு சாதகமான பலன் காண்பார்கள். குடும்பத்தில் இதமான சூழ்நிலை நிலவும்.

உங்களது கருத்துக்களுக்கு மாற்று கருத்துக்கள் இருக்காது. கணவன், மனைவிக்கு இடையே மகிழ்ச்சி அதிகரிக்கும்.

குழந்தைகளின் செயல் பாடுகள் மன திருப்தியை தரும்.

வேடிக்கை வினோதங்களை கண்டு களிக்கும் சூழ்நிலை ஏற்படலாம். பெண்களுக்கு தொலைதூர தகவல்கள் மன மகிழ்ச்சியை தருவதாக இருக்கும். பயணங்களால் சாதகமான பலன் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான விஷயங்கள் சாதகமாக முடியும். திறமை வெளிப்படும்..

### துலாம்

இந்த வாரம் மனம் மகிழும் சம்பவங்கள் உண்டாகும். மன நிம்மதியும், மனோதிடமும் உண்டாகும். தெளிவான சிந்தனையுடன் எதிலும் ஈடுபடுவீர்கள். முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். உற்சாகமாக காணப்படுவீர்கள். திடீர் செலவு உண்டாகும். கவனமாக இருப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் இருந்த தடைகள் நீங்கும். போட்டிகள் குறையும். பழைய பாக்கிகளை வசூலிப்பதில் வேகம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தெளிவாக சிந்தித்து எதனையும் வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். புதன் சஞ்சாரத்தால் புதிய பதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், உற்சாகமும் காணப்படும். கணவன், மனைவிக்கு இடையில் இருந்த பிரச்சனைகள் தீரும். பிள்ளைகள் பற்றிய கவலைகள் நீங்கும்.

உறவினர் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பெண்களுக்கு முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். காரியங்களை செய்து முடிப்பதில் திறமை வெளிப்படும் பண வரத்து கூடும். மாணவர்களுக்கு கல்வியில் நினைத்ததை விட கூடுதல் பாடங்களை படிக்க வேண்டி இருக்கும்.

### விருச்சிகம்

இந்த வாரம் எதிர்பார்த்த பண வரத்து கிடைக்கும். வீண் பிரச்சனைகளை சந்திக்க வேண்டி இருக்கும். எனவே கவனமாக எதிலும் ஈடுபடுவது நல்லது.

தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த உதவிகளும் கிடைக்கும். எந்த காரியத்தையும் ஆராய்ந்து பார்த்து செய்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சலும், பண விரயமும் இருக்கும். புதிய ஆர்டர்கள் கிடைப்பது தாமதமாகும்.

மனதில் வியாபாரம் பற்றிய கவலை ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக பணிகளை கூடுதல் கவனமுடன் செய்வது நல்லது. குடும்பத்தில் நிம்மதி குறையும் படியான சூழ்நிலை உண்டாகும்.

கணவன், மனைவிக்கு இடையே வீண் வாக்கு வாதங்கள் ஏற்படலாம். பிள்ளைகள் நலனில் அக்கறை காண்பீர்கள். உடல்களைப்பும், சோர்வும் உண்டாக லாம்.

கவனமாக இருப்பது நல்லது. பெண்களுக்கு எந்த காரியத்தில் ஈடுபடும் போதும் யோசித்து செயல்படுவது நல்லது. வீண் அலைச்சல் ஏற்படலாம். செலவு கூடும்.

மாணவர்களுக்கு விளையாட்டில் ஆர்வம் உண்டாகும். பாடங்களை கவனமாக படிப்பது முன்னேற்றத்துக்கு உதவும்..

### தனுசு

இந்த வாரம் பண வரத்து திருப்திகரமாக இருக்கும். வாக்கு வன்மை ஏற்படும். விருந்து கேளிக்கை நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள். பெரிய மனிதர்களின் நட்பு கிடைக்கும். பல வகை யோகம் உண்டாகும். புண்ணிய ஸ்தலங்களை தரிசிக்கும் எண்ணம் ஏற்படும். சிலர் யாத்திரை செல்வார்கள். அடுத்தவர்கள் உதவி கிடைக்கும். தொழில் வியாபாரம் நன்றாக நடக்கும். எதிர்பார்த்த ஆர்டர்கள் வந்து சேரும். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்களை சாதகமாக முடியும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் புத்தி சாதூரியத்துடன் நடந்து கொண்டு நன்மை அடைவார்கள். எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கக் கூடும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். புதிய வீடு கட்டுவது, பழைய வீட்டை புதுப்பிப்பது போன்ற பணிகளை தொடங்க முற்படுவீர்கள். கணவன் மனைவிக்கு இடையே மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகளால் பெருமை சேரும்.

அவர்களுக்கு தேவையானவற்றை வாங்கி கொடுத்து மகிழ்ச்சியில் ஆழ்த்துவீர்கள்.

### மகரம்

இந்த வாரம் பண தேவை உண்டாகும். இடமாற்றம் ஏற்படலாம். ஆடை அணிகலன் வாங்குவதன் மூலம் செலவு உண்டாகும். வார மத்தியில் எதிர்பார்த்த பண வரவு இருக்கும். வாகன யோகம் கிடைக்கும். எழுத்து வகையில் எதிலும் சிக்காமல் கவனமாக இருப்பது நல்லது. கூட்டு தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் பார்ட்னர்களுடன் சுமூகமான முறையில் அனுசரித்து செல்வது நல்லது. வீண் அலைச்சல் உண்டாகலாம்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு திடீர் நெருக்கடிகள் ஏற்படலாம் எச்சரிக்கை யாக இருப்பது நல்லது. பயனற்ற பயணங்கள் உண்டாகலாம். குடும்பத்தில் இருப்பவர்களுடன் கவனமாக பேசுவது நல்லது.

கணவன், மனைவிக்கு இடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளின் கல்வி தொடர்பான விஷயங்களில் கவனம் செலுத்துவது நல்லது.

வாக்கு வாதத்தை தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு பண வரத்து திருப்தி தரும். வெளியூர் பயணம் செல்ல நேரலாம்.

தோழிகளுடன் சுமுகமாக பேசி பழகுவது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் வேகம் காணப்படும். சக மாணவர்களிடம் சுமுகமாக அனுசரித்து போவது நல்லது.

### கும்பம்

இந்த வாரம் உடல் ஆரோக்கியம் ஏற்படும். எதிர் பாலினத்தாரால் லாபம் கிடைக்கக் கூடும்.

மற்றவர்களுக்கு உதவிகள் செய்ய நேரிடும். பண வரத்து கூடும். வீண் அலைச்சல் திடீர் கோபம் உண்டாகலாம்.

காரிய வெற்றி தரும். மதிப்பும், அந்தஸ்தும் உயரும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு கடன் பிரச்சனைகள் தீரும். போட்டிகள் குறையும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்தவை நல்லபடியாக முடியும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் சில விஷயங்களை தவறாக புரிந்து கொண்டு சங்கடப்பட வேண்டி இருக்கும். வாக்கு வன்மையால் நன்மை ஏற்படும். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் தீரும். கணவன், மனைவிக்கு இடையில் இருந்த இடைவெளி குறையும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். பிள்ளைகளிடம் அன்பு அதிகரிக்கும்.

பெண்களுக்கு மற்றவர்களுக்கு உதவி செய்வதால் வீண் அலைச்சல் உண்டாகலாம்.

காரிய வெற்றி பண வரவு எதிர்பார்த்த படி இருக்கும். மாணவர்களுக்கு சாமர்த்தியமான செயல்களால் மற்றவர் மனதில் இடம் பிடிப்பீர்கள். பாடங்களில் கவனம் செலுத்துவது அதிகரிக்கும்..

### மீனம்

இந்த வாரம் விருப்பங்கள் கைகூடும். பயன் தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மனதில் தைரியம் உண்டாகும். பண வரத்து குறையும். வாழ்க்கை துணையின் உடல் நலத்தில் கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் திடீர் நெருக்கடி ஏற்பட்டு நீங்கும்.

வழக்கம்போல் வியாபாரம் இருந்தாலும் திடீர் பண தேவை ஏற்படலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்த வேலையை செய்யும் முன்பும் அதுபற்றி அதிகம் யோசிப்பார்கள். சிலருக்கு புதிய வேலையும் கிடைக்கலாம். குடும்பத்தில் சகஜ நிலை காணப்படும். கணவன் மனைவிக்கு இடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும்.

பிள்ளைகள் உங்கள் சொல்படி நடப்பது மனதுக்கு மகிழ்ச்சியை தரும். பெண்களுக்கு காரிய அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக் கும். திடீர் பண தேவை உண்டாகலாம். மாணவர்களுக்கு தொழிற் கல்வி கற்பதில் ஆர்வம் உண்டாகும்.

# குமரி மாவட்டத்துக்கு இன்று விஜய் வருகை: 6 மணிநேரம் மட்டுமே பிரசாரம் செய்ய அனுமதி

**நாகர்கோவில், ஏப்.12:**

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் வருகிற 23-ந் தேதி நடைபெற உள்ளது. தி.மு.க. தலைவரும், முதல்-அமைச்சருமான மு.க.ஸ்டாலின் இரண்டு நகரங்களில் காலை, மாலை என பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார். அதேபோல் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியும் தினமும் பல தொகுதிகளில் வாகன பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். மேலும் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானும் பல்வேறு பகுதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தனது வேட்பாளர்களுக்கு



ஆதரவாக வாக்கு சேகரித்து வருகிறார். அந்தவகையில் சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் தமிழகம் முழுவதும் சூறாவளி பிரசாரம் மேற்கொண்டு விசில் சின்னத்திற்கு வாக்கு சேகரித்து வருகிறார். அதன்படி குமரி மாவட்டத்தில் உள்ள கன்னியாகுமரி, நாகர்கோவில், குளச்சல், விளவங்கோடு, கிள்ளியூர் மற்றும் பத்மநாபபுரம் ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிடும் த.வெ.க. வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்வதற்காக, விஜய் இன்று (ஞாயிற்றுக்கிழமை) குமரி மாவட்டம் வருகிறார். அவர் கன்னியாகுமரி அருகே உள்ள விவேகானந்தர் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகிறார். முன்னதாக பொதுக்கூட்டத்திற்கு அனுமதிகோரி கட்சியின் நிர்வாகிகள் போலீசாரிடம் மனு அளித்திருந்தனர். அதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், பல்வேறு கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன.

அதாவது மதியம் 2 மணி முதல் இரவு 10 மணி வரை அனுமதி கோரப்பட்ட நிலையில், மதியம் 2 மணி முதல் இரவு 8 மணி வரை 6 மணி நேரம் மட்டுமே கூட்டத்தை நடத்த போலீசார் அனுமதி அளித்துள்ளனர்.

விஜய்யின் வருகையை முன்னிட்டு, பாதுகாப்பு மற்றும் மேடை அமைக்கும் பணிகளை ஆய்வு செய்வதற்காக த.வெ.க. மாநில நிர்வாகிகள் ஆனந்த் மற்றும் செங்கோட்டையன் ஆகியோர் (சனிக்கிழமை) குமரி மாவட்டத்திற்கு செல்கின்றனர். அவர்கள் பொதுக்கூட்டம் நடைபெற உள்ள இடத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்வதுடன், மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட நிர்வாகிகளுக்கு தேவையான ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்க உள்ளனர்.

## விளையாட்டு செய்திகள்

### "பேட்ஸ்மேன்களின் சாதுர்யத்தால் டி20 மாறி விட்டது" - மனம் திறக்கும் நடராஜன்

**சென்னை, ஏப்.12:**

ஐபிஎல் தொடரில் தமிழகத்தை சேர்ந்த இடதுகை வேகப்பந்து வீச்சாளரான டி.நடராஜன் நடப்பு சீசனில் டெல்லி கேப்பிடல்ஸ் அணியில் விளையாடி வருகிறார். இந்த சீசனில் அவர், 3 ஆட்டங்களில் விளையாடி 4 விக்கெட்களை கைப்பற்றி உள்ளார். ஓவருக்கு சராசரியாக 7.9 ரன்களை விட்டுக்கொடுத்துள்ளார்.

டெல்லி அணி தனது 4-வது ஆட்டத்தில் இன்று சிஎஸ்கேவுடன் சேப்பாக்கம் மைதானத்தில் விளையாட உள்ளது. இந்த போட்டியையொட்டி நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர்கள் சந்திப்பின் போது டி.நடராஜன் கூறியதாவது: கடந்த ஆண்டு, எனக்குக் கழுத்து எலும்பில் காயம் ஏற்பட்டது, அது எனக்கு மிகவும் கடினமான காலகட்டமாக இருந்தது.

அந்தத் தருணம் முழுவதும் அணியின் நிர்வாகம், உதவிப் பணியாளர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் என்னைத் தொடர்ந்து ஊக்குவித்தனர். நான் எத்தகைய பயிற்சிகளைச் செய்ய வேண்டும் என்பதிலும் அவர்கள் எனக்கு வழிகாட்டினார்கள். டெல்லி, சூரத், ஹைதராபாத் மற்றும் துபாய் என பல இடங்களில் நடந்த பயிற்சி முகாம்களில் நான் கலந்து கொண்டேன். இவை அனைத்தும் எனது பந்துவீச்சு லயத்தையும், நம்பிக்கையையும் மீண்டும் பெற உதவின. காயத்திலிருந்து மீண்டு வருவது என்பது மன ரீதியாகவும் சரி, உடல் ரீதியாகவும் சரி, எப்போதும் எளிதானது அல்ல. ஒவ்வொரு முறையும் நான் சிறப்பாகச் செயல்படும் போதெல்லாம், துரதிர்ஷ்டவசமாக ஒரு காயம் குறுக்கே வந்து தடையாக நின்றது. கடந்த ஆறு முதல் ஏழு மாதங்களாக, எனது உடல் தகுதி மற்றும் பந்துவீச்சுக்காக மிகக் கடுமையாக உழைத்துள்ளேன். எனது யார்க்கர் பந்துகளை மீண்டும் துல்லியமாக வீசவும், பந்துவீச்சு லயத்தை மீட்கவும் நான் நிறைய பயிற்சி செய்தேன். இப்போது எனது நம்பிக்கை அதிகரித்துள்ளது. சிறப்பான விஷயங்கள் நிகழ்வதால் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது என்றார்.

### ஆசிய குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்: 4 இந்திய வீராங்கனைகள் தங்கம் வென்று அசத்தல்

உலான்பாதர்: மங்கோலியாவின் உலான்பாதர் நகரில் ஆசிய குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் நடைபெற்று வருகிறது. இதில் மகளிருக்கான 48 கிலோ எடைப் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் மீனாட்சி ஹூடா 5-0 என்ற கணக்கில் மங்கோலியாவின் நோமுந்தரி என்க்-அம்கலனை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றார்.

54 கிலோ எடைப் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் பிரீத்தி பவார் 5-0 என்ற கணக்கில் டோக்கியோ ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம் வென்றிருந்த சீன தைபேவின் ஹுவாங் ஹியாவோ வெனை தோற்கடித்து தங்கம் வென்றார். 60 கிலோ எடைப் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் பிரியா கங்காஸ் 3-0 என்ற கணக்கில் வட கொரியாவின் வான் உன் ஜியோங்கை வீழ்த்தி தங்கம் வென்றார். அதே வேளையில் 70 கிலோ எடைப் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் அருந்ததி சவுத்ரி 4-1 என்ற கணக்கில் கஜகஸ்தானின் பாகித் சீடிஷை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றார். அதேவேளையில் 57 கிலோ எடைப் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் ஜெய்ஸ்மின் லம்போரியா 0-5 என்ற கணக்கில் தாய்லாந்தின் புன்ராவீ ரூன்ரோஸிடம் தோல்வி அடைந்து வெள்ளிப் பதக்கம் வென்றார்.

# மத்திய அரசின் புதிய பி.எட். படிப்பு: தமிழக அரசின் முடிவு என்ன?

**சென்னை, ஏப்.12:**

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் சார்பில், 4 ஆண்டு கால ஒருங்கிணைந்த பி.எஸ்.சி. பி.எட்., பி.ஏ. பி.எட். படிப்புகள் வழங்கப்பட்டு வந்தன. இதற்கு மாற்றாக, மத்திய கல்வி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம், தேசிய கல்விக்கொள்கை 2020-ன்படி, ஒருங்கிணைந்த ஆசிரியர் கல்வி திட்டம் எனும் ஐ.டி.இ.பி. திட்டம் புதிதாக செயல்படுத்தும் என அறிவித்தது. இந்த புதிய கல்வி திட்டத்தை ஆசிரியர் கல்வியியல் நிறுவனங்கள் 2026-2027-ம் கல்வியாண்டு முதல் செயல்படுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது.

மத்திய அரசு கொண்டு வரும் தேசிய கல்விக் கொள்கையை தமிழக அரசு ஏற்காது என ஏற்கனவே கூறிவருகிறது. தற்போது தமிழ்நாட்டில் சட்டசபை தேர்தல் நடைபெற இருப்பதால், ஆட்சியாளர்கள் எந்த முடிவையும் எடுத்து அறிவிக்க முடியாது, என்ன முடிவு எடுக்க என்று கல்வித்துறை அதிகாரிகள் திணறி வருகின்றனர்.

மத்திய அரசின் தேசிய கல்விக்கொள்கையின்படி, ஒருங்கிணைந்த ஆசிரியர் கல்விதிட்டம் 4 நிலைகளைக் கொண்டதாக இருக்கிறது. அதாவது அடித்தள நிலை, ஆயத்த நிலை, இடைநிலை, முதன்மை நிலை என உள்ளது. அதில் எந்த நிலைகளில் இருந்து வேண்டுமானாலும் மாணவர்கள் வெளியேறும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் அடித்தள நிலையுடன் நிறைவு செய்யும் மாணவர்களுக்கு சான்றிதழ், ஆயத்த நிலையுடன் வெளியேறும் மாணவர்களுக்கு டிப்ளமோ, இடைநிலையுடன் நிறைவு செய்யும் மாணவர்களுக்கு பட்டப்படிப்பு (டிகிரி) சான்றிதழ், முதன்மை நிலையை நிறைவு செய்யும் மாணவர்களுக்குஇரட்டை பட்டப்படிப்பு (டபுள் டிகிரி) சான்றிதழ் வழங்கப்படும். ஆனால் இவை அனைத்தும் தேசிய கல்விக் கொள்கையின் அம்சமாக இருப்பதால், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் முடிவு எடுக்க முடியாமல் திணறி வருகிறது

# நகைகள் கொண்டு செல்வதில் விதிகளை வகுக்க வேண்டும்.. தேர்தல் ஆணையத்திற்கு ஐகோர்ட்டு உத்தரவு

**சென்னை, ஏப்.12:**

தமிழ்நாட்டில் சட்டமன்ற தேர்தல் அறிவிப்புக்குப் பின் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்து வரும்நிலையில், உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்படும் பணம் மற்றும் நகைகளை அதிகாரிகள் பறிமுதல் செய்து வருகின்றனர். உரிய ஆதாரங்களை சமர்பித்தால் ஓரிரு தினங்களில் சம்பந்தப்பட்டவர்கள் பறிமுதல் செய்யப்பட்ட பணம், நகை உள்ளிட்டவற்றை உரிமையாளர்கள திரும்ப பெற்றுக் கொள்ளலாம்.

இந்நிலையில் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ள காலங்களில் நகைகளை கொண்டு செல்வது தொடர்பாக விதிகளை வகுக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக்கோரி நகைக்கடை ஒன்றின் சார்பில் சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.



அப்போது மனுதாரர் தரப்பில், தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்த பிறகு, உரிய ஆவணங்கள் வைத்திருந்தும், 6 முறை தங்கள் நிறுவனத்தின் நகைகளை அதிகாரிகள் பறிமுதல் செய்ததாகவும். 6 நாட்களுக்குப் பிறகுதான் அந்த நகைகள் மீண்டும் கிடைத்தன. இதன் காரணமாக தங்களுக்கு வர்த்தக இழப்பு, நிதி இழப்பு ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வாதங்களை ஏற்க மறுத்த நீதிபதிகள், தற்போது பறிமுதல் செய்யப்படும் நகை, பணம் ஆகியவற்றிற்கான ஆதாரங்களை சமர்ப்பித்தால் ஒரே நாளில் அவை திருப்பி அளிக்கப்பட்டு வருகின்றன. தற்போது இது சம்பந்தமாக விதிகள் வகுக்க உத்தரவிட முடியாது என்றனர். இதையடுத்து மனுவை திரும்ப பெற்றுக் கொள்வதாக மனுதாரர்கள் தெரிவித்தனர்.

இதை ஏற்று வழக்கை திரும்ப பெற அனுமதித்த நீதிபதிகள், தேர்தலுக்குப் பிறகு இதுகுறித்து தேர்தல் ஆணையத்திடம் மனுதாரர் மனு அளிக்கலாம் எனவும், அதை தேர்தல் ஆணையம் சட்டப்படி பரிசளித்து தகுந்த உத்தரவை பிறப்பிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டனர்.

# விஜய்க்கு ஆதரவாக தென் மாவட்டங்களில் பிரசாரத்தை தொடங்கும் ராமராஜன்

**நெல்லை, ஏப்.12:**

தமிழக சட்டசபை தேர்தல் பிரசாரம் சூடுபிடித்துள்ளது. தமிழகம் முழுவதும் அனைத்து கட்சிகளின் வேட்பாளர்களும் சுறுசுறுப்பாக தேர்தல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அந்தவகையில் தமிழக அரசியல் களத்தில் புதிய வரவான த.வெ.க. முழு வீச்சில் தேர்தல் பணிகளை முடுக்கி விட்டுள்ளது. த.வெ.க. தலைவர் விஜய் தீவிர சுற்றுப்பயணம் மேற்கொண்டு



வாக்கு சேகரித்து வருகிறார். வட மாவட்டங்களை தொடர்ந்து தென் மாவட்டங்களிலும் விஜய் தேர்தல் பிரசாரம் மேற்கொண்டுள்ளார்.

நெல்லை, தூத்துக்குடியில் விஜய் பிரசாரத்தில் வழியெங்கும் ஆயிரக்கணக்கானவர்கள் திரண்டு உற்சாக வரவேற்பு அளித்தனர். விஜய் பிரசாரம் செல்லாத இடங்களில் அவரது உருவ பொம்மைகளை வைத்து தொண்டர்கள் தேர்தல் பிரசாரத்தை முன்னெடுத்து இருக்கிறார்கள். இதற்கும் வரவேற்பு கிடைத்து வருகிறது. இந்தநிலையில், விஜய்க்கு ஆதரவாக நடிகர் ராமராஜனும் களம் இறங்க உள்ளார்.

கடந்த காலங்களில் அ.தி.மு.க.வுக்காக பிரசாரம் மேற்கொண்டிருந்த நடிகர் ராமராஜன் தற்போது, விஜய்க்காக தென் மாவட்டங்களில் சில தொகுதிகளில் பிரசாரம் செய்ய உள்ளார். அதன்படி, ஆலங்குளம் தொகுதியில் ராமராஜன் பிரசாரம் செய்ய உள்ளார். தொடர்ந்து தென் மாவட்டங்களில் அவர் பிரசாரம் செய்ய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதனை சமூக வலைத்தளங்களில் விஜய் ரசிகர்கள் பதிவிட்டு, உற்சாகம் அடைந்து வருகின்றனர்.

## க்ரைம் கார்னர்

### பாலியல் வன்கொடுமை: இளைஞருக்கு சாகும்வரை ஆயுள் தண்டனை விதிப்பு

**திருநெல்வேலி, ஏப்.12:**

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியைச் சேர்ந்தவர் அன்சாரி (35). இவர், 11 வயது வளர்ப்பு மகளிடம் பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டது குறித்து, அச்சிறுமியின் தாயார் நாங்குநேரி மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போக்சோ சட்டத்தின்கீழ் மார்ச் 12-ம் தேதி வழக்கு பதிவு செய்யப்பட்டது. நாங்குநேரி மகளிர் ஆய்வாளர் சுதா மற்றும் போலீஸார் வழக்கை விசாரித்து அன்சாரியை கைது செய்து விசாரணை நடத்தினர். இதன்தொடர்ச்சியாக குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டு அன்சாரி சிறையில் அடைக்கப்பட்டார். வழக்கு பதிவு செய்யப்பட்ட 5 நாட்களில் வழக்கின் அறிக்கை தயார் செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கை திருநெல்வேலி போக்சோ சிறப்பு நீதிமன்றம் விசாரித்தது. நீதிபதி சுரேஷ்குமார் இவ்வழக்கை விசாரித்து, அன்சாரிக்கு சாகும்வரை ஆயுள் சிறை தண்டனையும் ரூ.28 ஆயிரம் அபராதமும் விதித்து நேற்று தீர்ப்பு கூறினார். மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூ.7 லட்சம் நிவாரணத் தொகை வழங்கவும் தமிழக அரசுக்கு உத்தரவிட்டார். வழக்கு பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 29 நாட்களில் குற்றவாளிக்கு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

மாவட்டத்தில் இவ்வாண்டில் இதுவரை 7 போக்சோ வழக்குகளில் 7 குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தரப்பட்டுள்ளதாக, திருநெல்வேலி எஸ்பி வி.பிரசன்னகுமார் தெரிவித்துள்ளார்.

### பைக் மீது லாரி மோதிய விபத்தில் புதுமண தம்பதி பலி: திருமணமான ஒரே மாதத்தில் சோகம்

**தூத்துக்குடி, ஏப்.12:**

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே உள்ள கஞ்சம்பட்டியைச் சேர்ந்தவர் மனோகரன் (வயது 32). தொழிலாளியான இவருக்கும், இவரது உறவினரான மனிஷா(20) என்பவருக்கும் கடந்த மார்ச் மாதம் 25-ம் தேதி திருமணம் நடைபெற்றது. புதுமணத் தம்பதி இருவரும் கடந்த 8ம் தேதி இரவு கோவில்பட்டிக்கு வந்துவிட்டு, மீண்டும் தங்களது ஊருக்கு பைக்கில் சென்று கொண்டிருந்தனர். கோவில்பட்டி-சாத்தூர் சாலையில் உள்ள ஒரு தனியார் கல்லூரி அருகே சென்றபோது, எதிரே வந்த லாரி எதிர்பாராத விதமாக இவர்களது பைக் மீது பலமாக மோதியது. இந்தக் கோர விபத்தில் மனோகரன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். பலத்த காயமடைந்த மனிஷாவை மீட்ட பொதுமக்கள், சிகிச்சைக்காக கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மனிஷா, நேற்று முன்தினம் காலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். திருமணம் முடிந்து இன்னும் ஒரு மாதம் கூட நிறைவடையாத நிலையில் இந்த விபத்து நடந்துள்ளது. இந்த விபத்து குறித்து கோவில்பட்டி கிழக்கு போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### நெல்லையில் 33 கிலோ புகையிலை பொருட்கள் பறிமுதல்: 2 பேர் கைது

**திருநெல்வேலி, ஏப்.12:**

திருநெல்வேலி மாவட்டம், பத்தமடை பகுதியில் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் நித்யா தலைமையிலான காவல்துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது காவல்துறையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், பத்தமடை அருகே சந்தேகத்திற்கு இடமான முறையில் நின்று கொண்டிருந்த பத்தமடையை சேர்ந்த ஐயப்பன்(எ) மணிகண்டன் (வயது 27) மற்றும் சபரிபாண்டி(29) ஆகிய 2 பேரையும் பிடித்து போலீசார் சோதனை செய்தனர். அப்போது அவர் அரசால் தடை செய்யப்பட்ட சுமார் 33 கிலோ புகையிலை பொருட்களை விற்பனை செய்வதற்காக பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது. இதனையடுத்து மேற்சொன்ன சப்-இன்ஸ்பெக்டர் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு ஐயப்பன்(எ) மணிகண்டன், சபரிபாண்டி ஆகிய 2 பேரையும் நேற்று கைது செய்தார். மேலும் அவர்களிடமிருந்து சுமார் 33 கிலோ புகையிலை பொருட்களை கைப்பற்றி உரிய சட்ட நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்.

## வணிகச் செய்திகள்

### வர்த்தக எல்பிஜி விநியோகம் 70% அளவுக்கு மீண்டதாக மத்திய அரசு தகவல்

**புதுடெல்லி, ஏப்.12:**

டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் இணை செயலாளர் சுஜாதா சர்மா, "புவிசார் அரசியல் சூழ்நிலை காரணமாக எல்பிஜி விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. நாட்டின் எல்பிஜி தேவையில் கிட்டத்தட்ட 60% இறக்குமதி மூலமாகவே பூர்த்தி செய்யப்படுகிறது.

இதைக் கருத்தில் கொண்டு உள்நாட்டு நுகர்வோருக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, வீட்டு உபயோகத்துக்கான எல்பிஜி சிலிண்டர் விநியோகம் 100% உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எந்தவொரு எல்பிஜி விநியோகஸ்தரிடமும் தட்டுப்பாடு ஏற்படவில்லை. நேற்று மட்டும் 51 லட்சத்துக்கும் மேற்பட்ட வீடுகளுக்கு எல்பிஜி சிலிண்டர் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

எங்களின் ஆன்லைன் முன்பதிவு 98%-ஐ எட்டியுள்ளது. மேலும், ஓடிபி அடிப்படையிலான எல்பிஜி விநியோகம் 92%-ஐ எட்டியுள்ளது. வர்த்தக எல்பிஜியில் சில பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இருப்பினும் அது சுமார் 70% அளவுக்கு மீட்டெடுக்கப்பட்டுள்ளது. மருந்து, உணவு, பாலிமர்கள், விவசாயம், பேக்கேஜிங், பெயிண்ட்ஸ் போன்ற துறைகளுக்கான மொத்த வீட்டு உபயோகம் அல்லாத எல்பிஜி விநியோகமும் மீட்டெடுக்கப்பட்டுள்ளது" என தெரிவித்தார்.

# புதிய விதி: ரூ.10 ஆயிரத்துக்கு மேல் அனுப்ப இனி 1 மணி நேரமாகும்.!

மும்பை, ஏப்.12:

வாடிக்கையாளர்கள், இனி 10,000 ரூபாய்க்கு அதிகமான தொகையை டிஜிட்டல் முறையில் ஒரு வங்கி கணக்கிலிருந்து மற்றொரு கணக்கிற்கு அனுப்பும்போது, 1 மணிநேரம் கழித்தே சென்றடையம் வகையிலான புதிய விதிகளை ரிசர்வ் வங்கி முன்பொழிந்து உள்ளது.




டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை மோசடிகளை கட்டுப்படுத்தும் நோக்கில், ரிசர்வ் வங்கி இந்த கட்டுப்பாடுகளை விதிக்க திட்டமிட்டுள்ளது. வாடிக்கையாளர்கள் ஏமாந்து பணம் அனுப்புவதை தடுக்கும் வகையில், பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளை ஆர்.பி.ஐ., பரிந்துரை செய்துள்ளது.

இதன் விபரம்!

டிஜிட்டல் முறையில் ஒரு வங்கி கணக்கிலிருந்து மற்றொரு கணக்கிற்கு 10,000 ரூபாய்க்கு அதிகமான தொகையை அனுப்பும்போது, ஒரு மணிநேரம் கழித்தே சென்றடையும். இந்த இடைவெளியில் மோசடியை உணர்ந்தால், வாடிக்கையாளர்கள் அந்த பரிவர்த்தனையை ரத்து செய்துகொள்ள முடியும்.

முதியவர்கள் மற்றும் மாத்றுத்திறனாளிகள், 50,000 ரூபாய்க்கு மேற்பட்ட பணப்பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும்போது, அவர்கள் முன்கூட்டியே நியமித்த 'நம்பகமான நபரின்' ஒப்புதலை பெறுவது கட்டாயமாக்கப்படும்.

ஆபத்து காலங்கள் அல்லது மோசடி நடப்பதாக சந்தேகிக்கும் நேரங்களில், வாடிக்கையாளர்கள் தங்களது அனைத்து டிஜிட்டல் பரிவர்த்தனைகளையும் ஒரே நொடியில் உடனடியாக முடக்கும் சிறப்பு வசதி அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

இந்த வரைவு விதிகள் குறித்து, பொதுமக்கள் மற்றும் வங்கிகளிடமிருந்து வரும் மே 8ம் தேதி வரை கருத்துகள் வரவேற்கப்படுவதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

## சாதிவாரி கணக்கெடுப்புக்கு தடை கோரி மனு -சுப்ரீம் கோர்ட்டு தள்ளுபடி

புதுடெல்லி, ஏப்.12:

இந்தியாவில் 16-வது தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்பின் முதல் கட்டம் கடந்த 1-ந்தேதி தொடங்கியது.1931-க்கு பிறகு முழுமையான சாதிவாரியான விவரங்களை உள்ளடக்கிய முதல் கணக்கெடுப்பாகவும், இந்தியாவின் முதலாவது முழுமையான டிஜிட்டல் கணக்கெடுப்பாகவும் இது நடக்க உள்ளது. இந்நிலையில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை நிறுத்துமாறு மத்திய அரசுக்கு உத்தரவிட கோரியும் ஒரே ஒரு குழந்தையை மட்டும் கொண்ட குடும்பங்களுக்கு பொருளாதார சலுகைகளை வழங்குவதற்கான கொள்கைகளை வகுக்ககோரியும் பொதுநல மனு சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு விசாரணைக்கு வந்த போது கோபமடைந்த தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு, "நீங்கள் கண்ணியமற்ற மொழியை பயன்படுத்தி உள்ளீர்கள். உங்கள் மனுவில் இத்தகைய மொழி நடையை எழுத வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எங்கிருந்து வந்தது? என கூறி தள்ளுபடி செய்தது.

## யமுனை ஆற்றில் படகு கவிழ்ந்தது: 10 பேர் பலியான சோகம்

லக்னோ, ஏப்.12:

உத்தர பிரதேச மாநிலம் மதுரா அருகே கேஷிகாட் பகுதியில் யமுனா நதியில், சுமார் 2530 யாத்திரிகர்கள் பயணம் செய்த படகு கவிழ்ந்தது. இதில் 10 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் மாயமானதாக அஞ்சப்படுகிறது.

விருந்தாவன் பகுதியில் உள்ள தற்காலிக (பாண்டூன்) பாலம் அருகே அதிக நெரிசலுடன் சென்ற படகு திடீரென கவிழ்ந்ததாக மாவட்ட நிர்வாகம் கூறியுள்ளது. உள்ளூர் போலீசார் மற்றும் பேரிடர் மீட்பு குழுக்கள் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று மீட்பு பணிகளில் ஈடுபட்டனர். இதுவரை 14 பேருக்கும் மேற்பட்டோர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.இன்னும் சுமார் 12 பேர் காணாமல் போயிருக்கலாம் என்ற அச்சத்தில் தேடுதல் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

## சுற்றுலா வந்த இடத்தில் மாயமான கேரள சிறுமி: 4 நாட்களுக்கு பிறகு கிடைத்தபோது.. என்ன நடந்தது?

சிக்கமகளூரு, ஏப்.12:

கேரள மாநிலம் பாலக்காடு பகுதியைச் சேர்ந்த 10-ம் வகுப்பு மாணவி ஸ்ரீநந்தா (வயது 14). இவர் தனது பெற்றோர் மற்றும் உறவினர்கள் உள்ளிட்ட சுமார் 40 பேருடன் கர்நாடக மாநிலம் சிக்கமகளூருவுக்கு சுற்றுலா சென்றிருந்தார். அவர்கள் கடந்த 7-ந் தேதி முல்லையன்கிரி மற்றும் சந்திரதிரிகோண மலைப்பகுதிகளை சுற்றிப் பார்த்தனர்.

மாணிக்கத்தாரா அருவி அருகே சென்ற அவர்கள் மாலை நேரத்தில் கீழிறங்கும் போது ஸ்ரீநந்தா திடீரென மாயமானார். போலீசார் மற்றும் வனத்துறையினர் தேடுதல் பணியில் ஈடுபட்டனர். நான்கு நாட்கள் தொடர்ந்து நடந்த தீவிர தேடுதல் வேட்டைக்கு பின்னர், டிரோன் உதவியுடன் சுமார் 2 ஆயிரம் அடி ஆழமான பள்ளத்தில் ஸ்ரீநந்தா பிணமாக கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து மீட்புக்குழுவினர் இறங்கி கயிறு கட்டி மாணவியின் உடலை மீட்டனர். செல்பி எடுக்கும்போது மலையில் இருந்து தவறி விழுந்தாரா? யாரேனும் அவரை பள்ளத்தில் தள்ளிவிட்டு கொன்றார்களா? அல்லது பள்ளத்தில் குதித்து தற்கொலை செய்துகொண்டாரா? என பல்வேறு கோணங்களில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக சிக்கமகளூரு காவல் கண்காணிப்பாளர் ஜிதேந்திர குமார் கூறுகையில், "சடலம் தற்போது கண்டறியப்பட்டுள்ளது, அவர் அணிந்திருந்த ஆடைகள் சேதமடையாமல் உள்ளன. உடல் பிரேத பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. அடுத்தகட்ட நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன" என்று கூறினார்.

## பாம்பை கூட நம்பலாம்: பாஜகவை நம்ப முடியாது: மம்தா பானர்ஜி

புதுடெல்லி, ஏப்.12:



மேற்கு வங்காள சட்டசபை தேர்தலையொட்டி வடக்கு 24 பர்கானாஸ் மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் அந்த மாநில முதல்-மந்திரியும், திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி பேசியதாவது: மத்தியில் உள்ள பாஜக ஆட்சியில் இந்தியாவில் உள்ள எந்தவொரு அமைப்பும் நடுநிலையுடன் செயல்படவில்லை. அந்த கட்சி அனைத்தையும் விலைக்கு வாங்கிவிட்டது. உத்தரபிரதேசத்தில் இருந்து ஒரு ரெயில் நிறைய 50 ஆயிரம் ஆட்கள் அசாம் தேர்தலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மேற்கு வங்காளத்திலும் வெளியிலிருந்து ஆட்களை கொண்டு வரும் அதே தந்திரத்தை பாஜக பயன்படுத்த முயற்சிக்கிறது.

அதனால்தான் அதி காரிகள் இடமாற்றம் செய்யப்படுகின்றனர்.பாம்பை கூட நம்பலாம், பா.ஜனதாவை நம்பவே முடியாது. வெளியில் இருந்து இங்கு ஆட்கள் அழைத்து வரப்படுகிறார்கள். பணம், போதை பொருள் கொண்டு வரப்படுகிறது. ஆனால் எங்கள் கட்சியினர் அதை வீழ்த்தி வெற்றி பெறுவார்கள்" என்றார்.

## மத்திய பிரதேசம்: ஆழ்துளை கிணற்றில் விழுந்த 2½ வயது குழந்தை சாவு

போபால், ஏப்.12:



*ராஜஸ்தான் மாநிலம் பாலி மாவட்டத்தைச் சேர்ந்தவர் பிரவீன் தேவாசி. இவரது குடும்பத்தினர் மத்தியபிரதேச மாநிலம் உஜ்ஜைனி அருகே உள்ள ஜலாரியா கிராமத்தில் ஆடு மேய்க்கும் தொழிலில் ஈடுபட்டு வந்தனர். நேற்று முன்தினம் மாலை விளையாடிக் கொண்டிருந்த அவருடைய 2½ வயது மகன் பகீரத் எதிர்பாராதவிதமாக அங்குள்ள ஆழ்துளை கிணற்றுக்குள் தவறி விழுந்துவிட்டான்.*

*தகவல் அறிந்ததும் தேசிய பேரிடர் மீட்பு படை மற்றும் மாநில பேரிடர் மீட்பு படை வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். ஆழ்துளை கிணற்றுக்கு இணையாக மற்றொரு பள்ளம் தோண்டும் பணி போர்க்கால அடிப்படையில் தொடங்கப்பட்டது. சுமார் 65 அடி ஆழத்தில் குழந்தை பகீரத் சிக்கியிருப்பது தெரியவந்தது. இரவு முழுவதும் மீட்பு பணி நீடித்தது.*

*சுமார் 40 அடி ஆழம் வரை பள்ளம் தோண்டப்பட்ட நிலையில், அங்கு கடினமான பாறைகள் தென்பட்டன. இதனால் பொக்லைன் எந்திரங்களால் தொடர்ந்து தோண்ட முடியாத நிலை ஏற்பட்டது. இதையடுத்து போபால் மற்றும் இந்தூரில் இருந்து வரவழைக்கப்பட்ட நவீன எந்திரங்கள் மூலம் பாறைகள் உடைக்கப்பட்டன.*

*கேமரா மூலம் குழந்தை கண்காணிக்கப்பட்டு, ஆக்சிஜன் தொடர்ச்சியாக வழங்கப்பட்டது. இந்த நிலையில் சுமார் 23 மணி நேர போராட்டத்திற்கு பிறகு நேற்று மாலை குழந்தை பகீரத்தை ஆழ்துளை கிணற்றில் இருந்து மீட்டனர். உடனடியாக அவன் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டான். ஆனால் அங்கு சிறுவனை பரிசோதித்த டாக்டர்கள் அவன் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.*

## இந்தியா சார்பில் 90 மின்சார பஸ்கள்; மொரீசியஸ் பிரதமரிடம் மத்திய மந்திரி ஜெய்சங்கர் ஒப்படைப்பு

புதுடெல்லி, ஏப்.12:




*மொரீசியஸ் நாட்டுக்கு மத்திய வெளிவிவகார துறை மந்திரி ஜெய்சங்கர் 2 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இதற்காக கடந்த வியாழக்கிழமை அந்நாட்டின் போர்ட் லூயிஸ் நகரை சென்றடைந்த அவரை, மொரீசியசுக்கான வெளிவிவகாரம், மண்டல ஒருங்கிணைப்பு மற்றும் சர்வதேச வர்த்தக மந்திரி தனஞ்ஜெய் ராம்புல் வரவேற்றார்.*

*இந்த 2 நாள் பயணத்தில், இரு நாடுகளிடையே, மண்டல பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில், தொடர்ச்சியான உயர்மட்ட ஆலோசனைகளை அவர் மேற்கொண்டார்.*

*இந்த பயணத்தின் ஒரு பகுதியாக, இந்தியா சார்பில் மத்திய மந்திரி ஜெய்சங்கர் மொரீசியஸின் பிரதமர் நவீன் ராம்கூலத்திடம் 90 மின்சார பஸ்களை ஒப்படைத்ததுடன், இந்தியாவுக்கும், மொரீசியசுக்கும் இடையேயான நிலையான போக்குவரத்து மற்றும் பசுமை கூட்டாண்மைக்கான இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தலையும் உறுதிப்படுத்தினார்.*

*இதேபோன்று, கடல்சார் பாதுகாப்பு, மண்டல ஸ்திரத்தன்மை மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சி ஆகியவை பற்றி விவாதிப்பதற்கான 9-வது இந்திய பெருங்கடல் மாநாட்டிலும் அவர் பங்கேற்றார்.*

## சமையல் எரிவாயு விநியோகத்தில் தாமதம்: 200 நிறுவனங்களுக்கு நோட்டீஸ்

புதுடெல்லி, ஏப்.12:

தமிழகத்தின் எரிபொருள் விநியோக நிலை குறித்து வெள்ளிக்கிழமை ஆய்வு மேற்கொண்ட பின்னர், அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: மாநிலத்தில் பெட்ரோல், டீசல், விமான எரிபொருள் உள்ளிட்ட திரவ எரிபொருள்களுக்கு எந்தவித தட்டுப்பாடும் இல்லை. சுத்திகரிப்பு நிலையங்கள் முழுத் திறனில் செயல்பட்டு வருவதால், விநியோகத்தில் எவ்வித சிக்கலும் ஏற்பட வாய்ப்பில்லை. தமிழகத்தில் நாள்தோறும் சுமார் 5 லட்சம் எரிவாயு உருளைகள் தேவைப்படுகின்றன. அந்தத் தேவையை 100 சதவீதம் பூர்த்தி செய்ய எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்கள் தயாராக உள்ளன. தற்போது, வீட்டு உபயோக எரிவாயு உருளை விநியோகத்துக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. சில பகுதிகளில் நிலவி வரும் காத்திருப்பு காலத்தைக் குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகளுக்கான எரிவாயு முழுமையாக வழங்கப்பட்டுவருகிறது. பதுக்கல் மற்றும் முறைகேடுகளைத் தடுக்க மாநில அரசு 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட திடீர் ஆய்வுகளை நடத்தியுள்ளது. எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்கள் மாநிலம் முழுவதும் 1,500-க்கும் மேற்பட்ட இடங்களில் திடீர் சோதனைகளை நடத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. எரிவாயு உருளைகள் விநியோகத்தில் தாமதம் உள்ளிட்ட புகார்களின்பேரில், 200 விநியோக நிறுவனங்களுக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. தொடர்ந்து, சென்னை புகர் பகுதிகளில் 20 நாள்கள் வரை தாமதம் ஏற்படுவதாக எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், அது குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், சில தினங்களுக்குள் அதற்குத் தீர்வு காணப்படும் என்று தெரிவித்தார்.

## ஏற்றுமதி இறக்குமதி போக்குகளை வாரந்தோறும் கண்காணிக்கும் முறை: மத்திய அரசு விரைவில் அறிமுகம்

புதுடெல்லி, ஏப்.12:

புது தில்லியில் மத்திய வர்த்தக அமைச்சக செயலர் ராஜேஷ் அக்ரவால் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், இதுதொடர்பாக ஆலோசிக்கப்பட்டது. அப்போது போர் காரணமாக முக்கிய பெட்ரோகெமிக்கல் பொருள்கள் கிடைப்பதிலும், அவற்றின் விலையிலும் பாதிப்பு ஏற்படக் கூடும் என்பது கவனத்தில் கொள்ளப்பட்டது. சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து கூட்டத்தில் தொழில்துறையினர் எடுத்துரைத்தனர். திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (எல்என்ஜி), ஹீலியம் மற்றும் பெட்ரோகெமிக்கல் பொருள்கள் தொடர்ந்து கிடைப்பதற்கு உதவிபுரிய வேண்டும், பணப் புழக்கத்தை மேம்படுத்த ஜிஎஸ்டி ரீஃபண்ட் தொகை முன்கூட்டியே கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது என்று மத்திய வர்த்தக அமைச்சக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெங்களூருவில் 'சோம்பி' சர்ச்சை: இளைஞர் கைது

பெங்களூரு, ஏப்.12:

பெங்களூரு எலஹங்காவை சேர்ந்த ஹேமந்த் குமார் வெளியிட்ட வீடியோவில், "இளைஞர் ஒருவர் சாலையில் 2 மணி நேரமாக ஒரே இடத்தில் அசையாமல் நிற்கிறார். அவர் 'சோம்பி' போதைப் பொருளை பயன்படுத்தியதால் உறைந்து போய் இருக்கிறார்" என கூறியிருந்தார். இந்த வீடியோ சர்ச்சையானது. பெங்களூரு காவல் ஆணையர் சீமந்த் குமார் சிங் உத்தரவின்படி, 'சோம்பி' இளைஞரைப் பிடித்து மருத்துவப் பரிசோதனை செய்தனர். அதில், அவர் மது அருந்தியதும் போதைப் பொருள் பயன்படுத்தாததும் தெரிய வந்தது. இதையடுத்து ஹேமந்த் குமாரை போலீஸார் கைது செய்தனர்.

# ககன்யான் திட்டத்தின் 'ஏர் டிராப்' இரண்டாம் கட்ட சோதனை வெற்றி.. இஸ்ரோ சாதனை

புதுடெல்லி, ஏப்.12:



*இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) கனவு திட்டமான மனிதனை விண்ணுக்கு அனுப்பும் ககன்யான் திட்டம் 2027-ம் ஆண்டு செயல்படுத்தப்பட இருக்கிறது. இதற்காக 3 ஆள் இல்லாத ராக்கெட்டுகளை விண்ணில் செலுத்தி சோதனை நடத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது. இதனை தொடர்ந்து பல்வேறு சோதனைகளில் விஞ்ஞானிகள் ஈடுபட்டு வருகின்றனர்.*

*இந்தத் திட்டத்துக்காக இந்திய விமானப்படை வீரர்களான சுபான்சு சுக்லா, பிரசாந்த் நாயர், அஜித் கிருஷ்ணன், அங்கத் பிரதாப் ஆகிய 4 குருப் கேப்டன்கள் விண்வெளி வீரர்களாக தேர்வு செய்யப்பட்டு பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. இந்த திட்டத்தில் மிக முக்கியமான கட்டமான 2-வது ஒருங்கிணைந்த ஏர் டிராப் சோதனை நேற்று வெற்றிகரமாக நடந்தது. ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இந்த சோதனை நடைபெற்றது. விண்வெளி வீரர்கள் பயணிக்கும் விண்கலம், விண்வெளியில் இருந்து பூமிக்கு திரும்பும் போது பாதுகாப்பாக தரையிறக்குவது மிகப்பெரிய சவால் நிறைந்த பணி. விண்கலம் பூமியின் வளிமண்டலத்துக்குள் நுழையும்போது அதன் வேகம் மிக அதிகமாக இருக்கும். அந்த வேகத்தைக் கட்டுப்படுத்தி, கடலில் பாதுகாப்பாக இறக்குவதற்குப் பயன்படுத்தப்படும் பாராசூட் அமைப்புகளின் செயல்திறனைச் சோதிப்பதே இந்த 'ஏர் டிராப்' சோதனையின் முக்கிய நோக்கமாகும். அதன்படி இந்திய விமானப்படையின் சினூக் ஹெலிகாப்டர் மூலம். சுமார் 5.7 டன் எடையுள்ள ககன்யான் மாதிரி விண்கலம் சுமார் 3 கிலோ மீட்டர் உயரத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. பின்னர் நிர்ணயிக்கப்பட்ட உயரத்தை அடைந்தவுடன், ஹெலிகாப்டரிலிருந்து விண்கலம் விடுவிக்கப்பட்டது. அந்த விண்கலம் கீழே விழத் தொடங்கியதும், அதில் பொருத்தப்பட்டிருந்த 10 பாராசூட்டுகளும் படிப்படியாகத் தானியங்கி முறையில் விரிவடைந்தன.*

*முதலில் சிறிய பாராசூட்டுகளும், இறுதியாக பிரதான பாரா சூட்டுகளும் விரிவடைந்து விண்கலத்தின் வேகத்தை ஒரு இறகு போலக் குறைத்தன. அனைத்து பாராசூட்டுகளும் சரியாக செயல்பட்டதால், விண்கலம் திட்டமிட்டபடி ஸ்ரீஹரிகோட்டா கடற்கரைக்கு அருகிலுள்ள வங்கக் கடல் பகுதியில் சுமூகமாக தரையிறங்கியது.*

*ஒருவேளை ஒரு பாராசூட் செயல்படத் தவறினாலும், மற்றொன்று இயங்கி விண்கலத்தைக் காப்பாற்றும் 'ரெடென்டன்சி' தொழில்நுட்பம் இதில் உறுதி செய்யப்பட்டது.*

*கடலில் விழுந்த விண்கலத்தை இந்தியக் கடற்படை வீரர்கள் வெற்றிகரமாக மீட்டனர். இது விண்வெளி வீரர்கள் பூமிக்குத் திரும்பிய பின் அவர்களை மீட்கும் ஒத்திகையாகவும் அமைந்தது. இந்த ஏர் டிராப் சோதனையின் வெற்றி, மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் முன் மேற்கொள்ளப்பட வேண்டிய 'ஆளில்லா ககன்யான் விண்கலம் ஏவுதலுக்குப் பச்சைக்கொடி காட்டியுள்ளது.*

# கொல்லப்பட்ட மினாப் பள்ளிக் குழந்தைகளுக்கு விமானத்தில் அஞ்சலி!

**இஸ்லாமாபாத், ஏப்.12:**

அமைதிப் பேச்சுவார்த்தைக்காக பாகிஸ்தான் சென்ற ஈரான் குழுவினர், அமெரிக்க தாக்குதலில் கொல்லப்பட்ட மினாப் பள்ளிக் குழந்தைகளுக்குத் தங்களது விமானத்தில் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் கூட்டுத் தாக்குதலில், கடந்த பிப். 28 அன்று ஈரானின் தலைமை மதகுரு அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டார். இதையடுத்து, பதிலடியாக வளைகுடா நாடுகளின் முக்கிய கட்டமைப்புகளைக் குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தியது.

இதில், ஈரானின் மினாப் நகரத்தில் அமைந்திருந்த பள்ளிக் கூடத்தின் மீதான அமெரிக்காவின் வான்வழித் தாக்குதலில் நூற்றுக்கணக்கான அப்பாவி பள்ளிக் குழந்தைகள் உள்பட சுமார் 165 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலுக்கு, அமெரிக்காதான் காரணம் எனக் கூறி அதற்கான ஆதாரங்களை ஈரான் அரசு வெளியிட்டது. ஆனால், இந்தக் குற்றச்சாட்டுகள் அனைத்தையும் அதிபர் டொனால்ட் டிரம்ப் உள்ளிட்ட அமெரிக்காவின் மூத்த அதிகாரிகள் தொடர்ந்து மறுத்து வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து, கடந்த ஏப். 7 அன்று அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே 2 வாரங்களுக்குப் போர்நிறுத்தம் அமலுக்கு வந்தது. மேலும், பாகிஸ்தான் தலைமையிலான அமைதிப்பேச்சுவார்த்தைக்கு இருதரப்பும் ஒப்புதல் வழங்கின. இந்த நிலையில், பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாதில் நடைபெறும் அமைதிப் பேச்சுவார்த்தையில் பங்கேற்க அமெரிக்கா மற்றும் ஈரானின் பிரதிநிதிகள் சென்றுள்ளனர்.

இத்துடன், அமெரிக்க தாக்குதலில் கொல்லப்பட்ட பள்ளிக் குழந்தைகளின் நினைவாக ஈரானின் பிரதிநிதிக் குழுவுக்கு "மினாப் 168" எனப் பெயரிடப்பட்டுள்ளது. மேலும், இந்தக் குழுவினர் சென்ற விமானத்தின் காலி இருக்கைகளில் மினாப் குழந்தைகளின் படங்கள் மற்றும் அவர்களின் பொருள்கள் வைக்கப்பட்டுள்ளன. இதுபற்றி, ஈரான் அரசின் செய்தித்தொடர்பாளர் எம்.பி. காலிபாஃப் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில், "இந்த விமானப் பயணத்தில் எனது நண்பர்கள், மினாப் 168" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதையடுத்து, 10 முக்கிய அம்சங்கள் இடம்பெறும் போர்நிறுத்த ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ள நிலையில், ஈரான் சார்பில் காலிபாஃப் மற்றும் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி ஆகியோர் கலந்துகொள்கின்றனர். முன்னதாக, இந்தப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க அமெரிக்க அரசின் தரப்பிலிருந்து அந்நாட்டின் துணை அதிபர் ஜே.டி. வான்ஸ் மற்றும் அதிபர் டிரம்ப் நிர்வாகத்தின் முக்கிய அதிகாரியும் அவரின் மருமகனுமான ஜராட் குஷ்னர் ஆகியோர் பங்கேற்பது குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேல் தாக்குதல்: லெபனானில் 2,000 -யை எட்டிய பலி எண்ணிக்கை!

**வாஷிங்டன், ஏப்.12:**

லெபனானில் இஸ்ரேலியப்படைகளின் தாக்குதல்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 1,953 ஆக உயர்ந்துள்ளது.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் தாக்குதலுக்குப் பதிலடியாக வளைகுடா நாடுகளில் உள்ள முக்கிய கட்டமைப்புகளைக் குறிவைத்து ஈரான் படைகள் தாக்குதல் நடத்தி வந்தன. இந்தப் போரில், ஈரானுக்கு ஆதரவாக லெபனானின் ஹிஸ்புல்லா கிளர்ச்சிப்படையினர் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தினர். இதனைத் தொடர்ந்து, கடந்த மார்ச் 2 ஆம் தேதி முதல் லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. ஈரான் மற்றும் இஸ்ரேல் - அமெரிக்கா இடையே நடைபெற்று வந்த போர் 2 வாரங்களுக்கு நிறுத்தப்படுவதாக கடந்த ஏப். 7 அன்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்தார்.

இருப்பினும் இந்த போர்நிறுத்தம் லெபனானுக்கு பொருந்தாது என்று கூறி லெபனான் மீது இஸ்ரேல் தனது தாக்குதலைத் தொடர்ந்து வருகிறது.

இதையடுத்து கடந்த மார்ச் 2 முதல் இதுவரை லெபனானில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1,953 ஆக உயர்ந்துள்ளது. சுமார் 6,303 பேர் காயமடைந்துள்ளனர்.

ஏப்ரல் 7 ஆம் தேதி போர்நிறுத்தம் அமலுக்கு வந்த பிறகு ஏப். 8 மட்டும் நடந்த தாக்குதல்களில் 357 பேர் உயிரிழந்துள்ளதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் டிரம்ப்பும், ஈரானின் போர்நிறுத்தம் லெபனானுக்குப் பொருந்தாது எனக் கூறியுள்ள நிலையில், ஈரான் மற்றும் மத்தியஸ்தம் செய்த பாகிஸ்தான், இந்த போர்நிறுத்தம் லெபனானுக்கும் பொருந்தும் எனக் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. வருகிற ஏப். 14 ஆம் தேதி இஸ்ரேல், லெபனான் இடையேயான போர் நிறுத்தம் குறித்து அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது. இதற்கு இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

# போர் செய்திகளை வைத்து கோடிக்கணக்கில் லாபம் ஈட்டிய வர்த்தகர்கள்

**வாஷிங்டன், ஏப்.12:**



ஈரான் மீதான போர் கடந்த பிப்ரவரி 28-ம் தேதி தொடங்கியதிலிருந்து, சர்வதேச நிதிச் சந்தைகளில் முன்னெப்போதும் இல்லாத வகையில் சில மர்மமான வர்த்தகங்கள் அரங்கேறி வருவதாக கூறப்படுகிறது.

குறிப்பாக, அமெரிக்க அரசின் முக்கியமான கொள்கை முடிவுகள் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னதாகவே, சந்தையில் பெரும் முதலீடுகள் செய்யப்படும் போக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வெனிசுலா மீதான தாக்குதல், ஈரான் மீதான தாக்குதல், அமெரிக்க-ஈரான் போர் நிறுத்த அறிவிப்பு உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு சில மணி நேரங்களுக்கு முன்பாகவே இன்சைடர் டிரேடிங் நடைபெற்றதாகவும், அதன் மூலம் சில வர்த்தகர்கள் கோடிக்கணக்கில் லாபம் ஈட்டியுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. அதிபரின் வெள்ளை மாளிகையில் ரகசியத் தகவல்களை முன்கூட்டியே அறிந்து இந்த 'உள்நோக்க வர்த்தகம்' நடைபெற்றிருக்கலாம் என்ற பலத்த சந்தேகம் வர்த்தக உலகில் பலரிடம் எழுந்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் வரை இத்தகைய முறைகேடுகளை மறுத்து வந்த வெள்ளை மாளிகை, ஏப்ரல் மாதத்தில் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டது. ரகசியக் கொள்கை முடிவுகள் தொடர்பான அரசு ஊழியர்கள் சந்தைகளில் வர்த்தகம் செய்யக் கூடாது என சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

முறையற்ற வகையில் லாபம் ஈட்டுவது தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில், ரகசியத் தகவல்கள் கசிந்தது குறித்து விரிவான விசாரணை நடத்த வேண்டும் என்று அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலும் கோரிக்கை வலுத்துள்ளது. முக்கிய முடிவுகள் வெளியாவதற்கு முன்பே வர்த்தகம் நடைபெறுவது சந்தையின் நேர்மையை கேள்விக்குறியாக்கி உள்ளது. சிலருக்கு மட்டும் ரகசியத் தகவல்கள் கசியவிடப்பட்டுள்ளதா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. இது குறித்து அமெரிக்கப் பங்குச் சந்தை கட்டுப்பாட்டு வாரியங்களான எஸ்இசி மற்றும் சிஎப்டிசி ஆகியவை முறையான விசாரணை நடத்த வேண்டும் என்றும், இதனால் கோடிக்கணக்கில் பலன் அடைந்தோர் யார் என்பதை கண்டறிய வேண்டும் என்ற கோரிக்கைகளும் எழுந்துள்ளன.

# ரஷ்ய ராணுவத்தில் உள்ள இந்தியர்களை மீட்க கோரி மனு: மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் நோட்டீஸ்

**புதுடெல்லி, ஏப்.12:**



ரஷ்யாவில் உக்ரைனுக்கு எதிரான போரில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இந்தியர்களை மீட்க உத்தரவிட கோரும் மனுவுக்கு பதில் அளிக்குமாறு மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உக்ரைன் - ரஷ்யா போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்நிலையில் ரஷ்ய ராணுவத்தில் இந்தியர்கள் பலரை வலுக்கட்டாயமாக ஈடுபடுத்தப்படுகின்றனர் என்று குற்றம் சாட்டப்பட்டது. இந்த போரில் இந்தியர்கள் பலர் காயமடைந்துள்ளதாகவும் தகவல் வெளியானது.

இந்த விவகாரம் தொடர்பாக ரஷ்யாவில் உள்ள குடும்பத்தை சேர்ந்த திவ்யா என்பவர் தாக்கல் செய்த பொது நல மனுவில், "ரஷ்யாவுக்கு கடந்த ஆண்டு செப்டம்பர், அக்டோபரில் 26 இந்தியர்களை அழைத்துச் சென்றனர். சுற்றுலா, கல்வி மற்றும் வேலைவாய்ப்பு அடிப்படையில் அழைக்கப்பட்ட இவர்களின் பாஸ்போர்ட், அடையாள ஆவணங்கள் பறிக்கப்பட்டு, உக்ரைனுக்கு எதிரான போரில் கட்டாயமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களை கண்டறிந்து தாயகம் அழைத்து வரும் நடவடிக்கையை மேற்கொள்ள மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும்'' என்று கோரப்பட்டுள்ளது. இந்த மனு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது இந்த மனுவுக்கு மத்திய அரசு பதில் அளிக்க உத்தரவிட்டு, விசாரணையை ஏப்ரல் 24-ம் தேதிக்கு நீதிபதி கள் தள்ளி வைத்தனர்.

# ஈரான் உடன் அமைதிப்பேச்சு! பாகிஸ்தான் சென்றார் அமெரிக்க துணை அதிபர் வான்ஸ்!

**தெஹ்ரான், ஏப்.12:**



ஈரானின் அணுசக்தித் திட்டத்துக்கு எதிராக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்திய கூட்டுத் தாக்குதலில், கடந்த பிப். 28 அன்று அந்நாட்டின் தலைமை மதகுரு அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டார். இதற்குப் பதிலடியாக, வளைகுடா நாடுகளின் முக்கிய கட்டமைப்புகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது.

இத்துடன், ஹோர்முஸ் நீரிணையை ஈரானின் படைகள் முடக்கியதால் சர்வதேச அளவில் எரிபொருள் விநியோகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

இதனால், இந்தப் போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென பல்வேறு நாடுகளும் அமெரிக்காவுக்கு அழுத்தம் கொடுத்து வந்தன.

இதனைத் தொடர்ந்து, இருதரப்புக்கும் இடையில் 2 வாரங்களுக்குப் போர்நிறுத்தம் அமலுக்கு வருவதாக, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கடந்த ஏப். 7 அன்று அறிவித்தார். மேலும், பாகிஸ்தான் தலைமையிலான அமைதிப் பேச்சுவார்த்தைக்கு அமெரிக்கா மற்றும் ஈரானின் அரசுகள் ஒப்புதல் வழங்கின.

இந்த நிலையில், பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷரீஃப் மற்றும் ராணுவத் தளபதி ஆசிம் முனீர் முன்னிலையில் நடைபெறும் அமைதிப்பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வான்ஸ் தலைமையிலான பிரதிநிதிக் குழுவினர் சனிக்கிழமை (ஏப். 11) அன்று இஸ்லாமாபாத் வந்தடைந்தனர்.

இதையடுத்து, இஸ்லாமாபாத் விமான நிலையத்தில் ஜே.டி. வான்ஸ் குழுவினருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. மேலும், பாகிஸ்தான் ராணுவத்தின் தலைமைத் தளபதி ஆசிம் முனீர் மற்றும் துணைப் பிரதமர் இஷாக் தார் ஆகியோர் நேரில் சென்று வரவேற்றனர்.

முன்னதாக, அமைதிப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளும் ஈரான் குழுவினருக்கு "மினாப் 168" எனப் பெயரிடப்பட்டுள்ளது. ஈரானின் மினாப் நகர பள்ளிக் கூடத்தின் மீதான அமெரிக்க தாக்குதலில் கொல்லப்பட்ட நூற்றுக்கணக்கான குழந்தைகளின் நினைவாக இந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# "ஹார்முஸ் ஜலசந்தியில் ஈரான் கட்டணம் விதிக்க அமெரிக்கா அனுமதிக்காது" - ட்ரம்ப் உறுதி

**வாஷிங்டன், ஏப்.13:**

வாஷிங்டன்: "ஹார்முஸ் ஜலசந்தி ஒரு சர்வதேச நீர்வழிப் பாதை. எனவே, அதன் வழியாகச் செல்லும் கப்பல்களுக்கு ஈரான் கட்டணம் விதிக்க அமெரிக்கா அனுமதிக்காது" என்று அதிபர் டொனால்டு ட்ரம்ப் திட்டவட்டமாகக் கூறினார்.

ஜாயின்ட் பேஸ் ஆண்ட்ரூஸில் செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப், "ஈரானின் ஒத்துழைப்பு இருந்தாலும், இல்லாவிட்டாலும் அமெரிக்கா ஹார்முஸ் ஜலசந்தியை மிக விரைவில் திறக்கும். அது எளிதாக இருக்காது என்றாலும், நாங்கள் அதை மிக விரைவில் திறப்போம். ஹார்முஸ் ஜலசந்திக்கு கட்டணம் விதிக்க நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை. அது ஒரு சர்வதேச நீர்வழிப் பாதை. அவர்கள் கட்டணம் விதிக்க நினைத்தால், நாங்கள் அதை நடக்க விடமாட்டோம்" என்று கூறினார். முன்னதாக ட்ரம்ப் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், 'சர்வதேச நீர்வழிகளைப் பயன்படுத்தி உலகை குறுகிய காலத்திற்கு மிரட்டிப் பணம் பறிப்பதைத் தவிர, தங்களிடம் வேறு எந்த ஆயுதமும் இல்லை என்பதை ஈரானியர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை. பேச்சுவார்த்தை நடத்துவதற்காக மட்டுமே அவர்கள் இன்று உயிருடன் இருக்கிறார்கள். சண்டையிடுவதை விட, போலி செய்தி ஊடகங்களையும், விளம்பரப்படும் மக்கள் தொடர்புகளையும் கையாள்வதில் ஈரானியர்கள் சிறந்தவர்கள்' என்று அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக, ஈரானின் நாடாளுமன்ற தேசியப் பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் இப்ராஹிம் அஜிஜி, நாடாளுமன்ற முன்மொழிவின்படி, ஹார்முஸ் ஜலசந்தி வழியாகச் செல்லும் கப்பல்கள் ஈரானின் தேசிய நாணயமான ரியாலில் கட்டணத்தை செலுத்த வேண்டியிருக்கும் என்று கூறியிருந்தார். முன்னதாக அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படைகள் மற்றும் ஈரான் ராணுவத்துக்கு இடையே கடந்த பிப் .28-ம் தேதி முதல் போர் நடைபெற்று வந்த நிலையில், கடந்த 8-ம் தேதி தற்காலிக போர்நிறுத்தம் அமலுக்கு வந்தது. இதன் தொடர்ச்சியாக, பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் அமெரிக்கா, ஈரான் பிரதிநிதிகள் பங்கேற்கும் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவது கவனிக்கத்தக்கது.

லெபனான் மீதான தாக்குதல்களை குறைத்துக் கொள்ளுமாறு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிடம் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தனிப்பட்ட முறையில் வலியுறுத்தியதாக தகவல்கள் வெளியாகின. இதையடுத்து, லெபனான் மீதான தாக்குதலை இஸ்ரேல் தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் நேற்று வான்வழித் தாக்குதல்கள் ஏதும் நடத்தப்படவில்லை என்று கள நிலவரங்கள் கூறுகின்றன. இதற்கிடையே, லெபனானுடன் நேரடி பேச்சுவார்த்தை நடத்த இஸ்ரேல் ஒப்புக்கொண்டது. லெபனான் மீதான தாக்குதல் நிறுத்தப்பட்டதால் இந்த பேச்சுவார்த்தையில் பங்கேற்க ஈரான் பிரதிநிதிகளும் சம்மதம் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது..

# ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் பறந்த ரூ.1,700 கோடி மதிப்புள்ள அமெரிக்க ட்ரோன் மாயம்

**வாஷிங்டன், ஏப்.12:**

அமெரிக்கா, ஈரான் இடையே தற்காலிக போர் நிறுத்தம் அமல் செய்யப்பட்டுள்ளது. இதன்படி ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் சரக்கு, எண்ணெய் கப்பல்களை அனுமதிக்க ஈரான் ஒப்புக் கொண்டது.

இதை கண்காணிக்க அமெரிக்க கடற்படையின் எம்கியூ-4சி டிரைட்டன் என்ற ஆளில்லாத உளவு ட்ரோன் நேற்று ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டது. சுமார் 3 மணி நேரம் தொடர்ந்து பறந்த அமெரிக்க உளவு ட்ரோன் திடீரென மாயமானது. இந்த ட்ரோன் சுட்டு வீழ்த்தப்பட்டதா அல்லது கீழே விழுந்து நொறுங்கியதா என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

அமெரிக்க கடற்படையிடம் மொத்தம் 20 எம்கியூ-4சி டிரைட்டன் ட்ரோன்கள் மட்டுமே உள்ளன. ஒரு ட்ரோனின் விலை சுமார் ரூ.1,700 கோடி ஆகும். இந்த ட்ரோன் சுமார் 50,000 அடி உயரத்தில், தொடர்ச்சியாக 24 மணி நேரம் பறக்கும் திறன் கொண்டது. ஒரே நேரத்தில் 7,400 கடல் மைல் தொலைவு பகுதிகளை கடந்து கண்காணிக்கும் திறன் கொண்டது. இந்த அதிநவீன ட்ரோன் மாயமாகி இருப்பது பல்வேறு சந்தேகங்களை எழுப்பி உள்ளது. ஈரானுக்கு எதிரான போருக்காக அமெரிக்க ராணுவம் ஒவ்வொரு விநாடியும் ரூ.9.8 லட்சத்தை செலவு செய்து வருகிறது. ஒரு நாளில் ரூ.3,040 கோடி மதிப்பிலான ஏவுகணைகள், வெடிகுண்டுகள் பயன்படுத்தப்படுகின்றன. எதிரிகளின் ஏவுகணைகள், ட்ரோன்கள், போர் விமானங்களை நடுவானில் இடைமறித்து அழிக்க தாட், பேட்ரியாட் உள்ளிட்ட ஏவுகணைகளுக்காக நாள்தோறும் ரூ.902 கோடி செலவிடப்படுகிறது. உளவு மற்றும் சைபர் நடவடிக்கைகளுக்காக தினசரி ரூ.427.5 கோடி செலவிடப்படுகிறது. போக்குவரத்துக்காக தினசரி ரூ.285 கோடி செலவிடப்படுகிறது. செலவு மற்றும் இழப்பு அதிகரித்து வருவதால் ஈரான் போரை முடிவுக்கு கொண்டு வருவதில் அமெரிக்கா தீவிரம் காட்டி வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

# அமைதி பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படாவிட்டால்... சிறந்த ஆயுதங்கள் காத்திருக்கின்றன டிரம்ப் எச்சரிக்கை

**வாசிங்டன், ஏப்.12:**



அணு சக்தி ஒப்பந்தம் தொடர்பாக ஈரானுக்கு எதிராக அமெரிக்காஇஸ்ரேல் இணைந்து நடத்திய தாக்குதல் பல வாரங்களாக நீடித்த நிலையில், கடந்த 7-ந்தேதி 2 வார கால போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையே போர் நிறுத்தத்திற்கு மத்தியஸ்தம் செய்த பாகிஸ்தான் முன்வந்துள்ளது. இதனை ஈரான் மற்றும் அமெரிக்க நாடுகள் ஏற்று கொண்டுள்ளன. இதனை தொடர்ந்து, ஈரான் நாட்டு பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் பாகிஸ்தானுக்கு தனி விமானத்தில் வந்துள்ளனர். அமெரிக்க பிரதிநிதிகளும் பேச்சுவார்த்தையில் பங்கேற்க வரவுள்ளனர்.

இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் செய்தியாளர்களிடம் கூறும்போது, அமைதி பேச்சுவார்த்தையில் தோல்வி ஏற்பட்டால், ஈரானுக்கு எதிராக தீவிர ராணுவ நடவடிக்கை எடுக்க அமெரிக்கா தயாராக உள்ளது. அதற்காக சிறந்த ஆயுதங்கள் காத்திருக்கின்றன என எச்சரித்து உள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

நாங்கள் இதுவரை தயாரிக்கப்படாத சிறந்த வெடிபொருட்களையும், ஆயுதங்களையும் ஏற்றி கொண்டு கப்பலில் தயாராக இருக்கிறோம். இதற்கு முன் நடந்த தாக்குதலை விட தீவிர தாக்குதலாக அது இருக்கும். அவற்றை வெடிக்க செய்வோம் என்றார்.

இதேபோன்று அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ், தன்னுடைய குழுவினருடன் பாகிஸ்தானுக்கு புறப்படுவதற்கு முன்பு நிருபர்களிடம் கூறும்போது, இந்த அமைதி பேச்சுவார்த்தையை எதிர்பார்த்து இருக்கிறோம். அது நேர்மறையாக இருக்கும் என நான் நினைக்கிறேன். அமெரிக்க ஜனாதிபதி கூறியது போன்று, நல்ல நம்பிக்கையுடன் ஈரானியர்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டால், உதவி கரம் நீட்ட நிச்சயம் நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று கூறினார்.

ஆனால், அவர்கள் எங்களிடம் விளையாட முயன்றால், அதற்கு பதிலடி இருக்கும் என்றும் கூறினார். அமெரிக்காவுடன் அமைதி பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் முகமது பாகர் காலிப் தலைமையிலான குழுவினர் பாகிஸ்தான் நாட்டின் இஸ்லாமாபாத்திற்கு வருகை தந்துள்ளனர்.

இந்த குழுவில் பாதுகாப்பு, அரசியல், ராணுவம், பொருளாதாரம் மற்றும் சட்டம் தொடர்பான குழுவினர்கள் அடங்கிய பிரதிநிதிகள் வந்துள்ளனர்.

இதேபோன்று, ஈரானின் வெளியுறவு மந்திரி சையது அப்பாஸ் அராக்சி, ஈரான் பாதுகாப்பு கவுன்சிலின் செயலாளர் அலி அக்பர் அகமதியன், ஈரானின் மத்திய வங்கி கவர்னர் அப்துல் நாசர் ஹிம்மதி ஆகியோருடன், ஈரான் நாடாளுமன்றத்தின் பல்வேறு உறுப்பினர்களும் வருகை தந்துள்ளனர்.

# வரலாறு படைத்தது ‘ஆர்மிடெஸ்2’ நால்வரும் பூமிக்குத் திரும்பினர்





# தூத்துக்குடியில் இன்று ஒரே மேடையில் மு.க. ஸ்டாலின், ராகுல்!

## நாடாளுமன்ற வளாகத்தில் பிரதமர் மோடி- ராகுல் காந்தி கலந்துரையாடல்

## சென்னையில் வாக்காளர் தகவல் சீட்டு இன்று முதல் வழங்கும் பணி தொடக்கம்!

## புதிய விதி: ரூ.10 ஆயிரத்துக்கு மேல் அனுப்ப இனி 1 மணி நேரமாகும்.!


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை

12.04.2026 ஞாயிற்றுக்கிழமை

இலவச இ–பேப்பர்